பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 17 திங்கட்கிழமை (01.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 095

# நாட்டின் இறைமையை மீறிச் செயற்பட்ட அரசசார்பற்ற அமைப்புகள் மீது நடவடிக்கை

## தேர்தலின் பின் சட்டங்கள் வரும் என்கிறார் பிரதமர் ரட்ணசிறி

கொழும்பு, மார்ச்1

சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற அமைப்புகள் பல இலங்கையின் இறைமையை மீறும்வகையில் செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அத்தகைய அரசசார்பற்ற அமைப்புகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் விதத்தில் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

இது தொடர்பாக, அவர் 'டெய்லி மிரர்' இணையத்தளத்திற்கு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக அரசசார்பற்ற அமைப்புகள் தொடர்பான சட்டங்களில் மாற்றங்களைச் செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக்குழு நகல் வரைவொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றம் இதுகுறித்து விவாதித்து, ஏற்கனவே உள்ள சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும். அமைச்சரவைக் குழுவின் யோசனைகளை சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்குச் சமர்ப்பித்துள்ளோம்.



அரச சார்பற்ற அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கான முழு அதிகாரத்தையும் அமைச்சரவைக் குழு

(24ஆம் பக்கம் பார்க்க)

## எச்சரிக்கையை மீறிச் சென்ற கார் மீது பொலிஸார் சூடு; ஒருவர் பலி! சாரதி காயம்!!

கொழும்பு, மார்ச்1

சோதனைச் சாவடியில் நிறுத்தாது, பொலிஸார் விடுத்த எச்சரிக்கையை மீறிச் சென்ற கார் ஒன்றின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார்.

மாத்தளைப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

வாகனத்தில் பயணித்த நபர் ஒருவர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் கட்சி மீது அரசாங்கம் 2ஆவது அதிரடி! மாகாண சபை உறுப்பினரின் பொலிஸ் பாதுகாப்பும் ரத்து!!

கொழும்பு,மார்ச்1

பிள்ளையான் கட்சி மீது அரசாங்கம் இரண்டாவது அதிரடியையும் மேற்கொண்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பும் விலக்கப் பட்டுள்ளது. அதுவே அரசின் இரண்டாவது அதிரடியாகும்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையானின்)இராணுவப் பாதுகாப்பை அரசு விலக்கிக் கொண்ட ஓரிரு நாள்களுக்குள் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்பும் விலக்கப்பட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. தேர்தல் கூட்ட மேடையில் புகுந்து விளையாடினார் மேர்வின்!

கொழும்பு,மார்ச்1

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர் மேர்வின் சில்வா நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் கூட்டத்தில் மேடையேறி பலரையும் வியக்க வைத்தார் - என்று லங்கா நியூஸ் செய்தி ஸ்தாபனம் கூறியது.

எமது இரண்டு கட்சியினரும் சண்டையின்றி சமாதானமாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும் என்றுஎதிர்க்கட்சி அமைப்பாளரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

கம்பஹா மாவட்டத்தின் அன்னப் பறவைக்கு களனிய பிரதேசத்தில்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் பொலிஸ் தலைமையகம்; நேற்று பொலிஸ் மா அதிபர் அடிக்கல் நட்டார்

கொழும்பு,மார்ச்1

கிளிநொச்சியில் வன்னிப் பிரதேசத்துக்கான பொலிஸ் தலைமையகம் புதிதாக அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய நேற்று நாட்டினார்.

மாங்குளம், பூநகரி ஆகிய பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்களை நிர்மாணிப்பதற்காகவும் நேற்று அடிக்கல் நடப்பட்டது.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் தலைமையில் பொலிஸ் உயர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## லசந்த கொலை விசாரணையில் திடீர்த் திருப்பம் எனத் தகவல்

கொழும்பு,மார்ச்1

'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக மேலும் தெரியவரும் விடயங்கள் வருமாறு:-

வெளிநாடொன்றில் பணியாற்றும் மேஜர் ஜெனரல் தர இராணுவ அதிகாரி

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் கூட்டணியில் 43 பேர் சிறுபான்மையினராம்

கொழும்பு,மார்ச்1

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் கூட்டமைப்பில் சிறுபான்மை இன வேட்பாளர்கள் 43 பேர் போட்டியிடுகின்றனர் என்று அக்கட்சியின் செயலாளர் விஜித ஹேரத் கூறினார்.

அவர்களுள் 22 தமிழர்களும், 21 முஸ்லிம்களும் அடங்குகின்றனர் என்றும், அக்கட்சியின் தேசிய பட்டியலில் சிறுபான்மையினர் இடம்பெறாமை ஒரு பெரிய பிரச்சினை அல்ல என்றும் அவர் சொன்னார்.

கொழும்பு - 07இல் அமைந்துள்ள சரத் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று

(24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைப்பதில்லை

### குற்றம் சுமத்துகிறார் கோத்தபாய

கொழும்பு, மார்ச்1

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசின் முயற்சிகளுக்கு மேற்கு நாடுகள் - குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் - போதிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தமது நாட்டில் செயற்படும் விடயம் வெளியில் தெரிய வருவதைக்கூட இந்த நாடுகள் விரும்புவதில்லை என்றும் தெரிவித்துள்ள அவர், எரித்திரியாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி அங்குள்ள விடுதலைப் புலிகளின் சொத்துகளைக் கண்டறிவதற்கு இலங்கை மேற்கொண்ட முயற்சியில் அது படுதோல்வி அடைந்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான கணக்கீடு மாதிரி வினாத்தாள்

நாளை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான புவியியல் மாதிரி வினாத்தாள்

வாசகர்களுக்கு இனிய நற்செய்தி

ASP ENTERPRISES

முதன் முறையாக அறிமுகப்படுத்தும்

அனுகூலங்கள்

குறைந்த நேரம்
குறைந்த மின்சாரம்
தீயின் அபாயமில்லை
இலகுவாகக் கையாளலாம்
ஒரு வருட உத்தரவாதம்
இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)

INDUCTION COOKER



யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க அணி ஆறுதல் வெற்றி; இந்தியா 2-1 என்ற கணக்கில் சம்பியன்!

அஹமதாபாத்,மார்ச் 01

ஆஹமதாபாத்தில் நேறறுமுன்தினம் நடந்த கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் கலிஸ், டி வில்லியர்ஸ் ஆகியோரின் அதிரடியால் தென்னாபிரிக்க அணி ஆறுதல் வெற்றியைப் பெற்றது. இருப்பினும் இந்திய அணி, தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் இந்தியாவில் நடைபெற்று வந்தது. இதன் முதல் இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்று, தொடரையும் தன் வசப்படுத்திக் கொண்டது.

இந்நிலையில் 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் [illegible] அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இந்தப் போட்டியில் இந்திய அணி சார்பாக சச்சின், ஷேவாக் இருவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. முன்னணி வேகப்பந்து வீச்சாளர் நெஹராவுக்கும் ஓய்வு அ[illegible]ட்டது.

தென்[illegible]பிரிக்க அணியில் மூன்று மாற்றங்க[illegible]க அல்பிமோர்கல், பார்னல், லாங்வெல்த் ஆகியோருக்குப் பதிலாக லூட்ஸ் போஸ்மன், மோர்னே மோர்கல், சோசோப் ஆகியோர் இடம்பெற்றனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.

போஸ்மன்-ஆம்லா ஜோடி வலுவான அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

36 பந்துகளில் அரைச் சதத்தை க[illegible]ந்த போஸ்மன் 68 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் கலிஸ் களமிறங்கினார். அணி 192 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆம்லா (87) ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து 3ஆவது விக்கெட்டுக்கு [illegible]ர்ஸ் களம்புகுந்தார்.

பொறுமையாக ஆடிய கலிஸ் 68 பந்துகளில் அரைச்சதத்தைக் கடந்தார். அதே சமயம் டி வில்லியர்ஸ் அதிரடியாக ஆடினார். இந்தய ஜோடி சதங்களையும் எட்டியது.

இறுதியில் தென்னாபிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 365 ஓட்டங்களைக் குவித்தது. கடைசி 10 ஓவர்களில் மட்டும் அந்த அணி 122 ஓட்டங்களை விளாசியமை குறிப்பிடத்தக்கது.



இந்தியாவுக்கு எதிராக தென்னாபிரிக்காவின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். முன்னர் 2000ஆம் ஆண்டு நாக்பூரில் நடந்த போட்டியில் 320 ஓட்டங்களைச் சேர்த்ததே அதிகமாக இருந்தது.

கலிஸ் 104 ஓட்டங்களுடனும், டி வில்லியர்ஸ் 102 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். கலிஸ்-டிவில்லியர்ஸ் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 103 பந்துகளில் 173 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.




பின்னர் 366 ஓட்டங்கள் என்ற வெற்றி என்ற கடின இலக்கை நோக்கித் தனது ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணிக்கு, தமிழகத்தின் தினேஷ் கார்த்திக்- முரளி விஜய் ஜோடி ஏமாற்றத்தையே அளித்தனர்.

தினேஷ் கார்த்திக் 11 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

எந்த ஒரு வீரரும் நிலைத்து நின்று ஆடாதமையால், இந்திய அணியால் இலக்கை நோக்கி முன்னேற முடியவில்லை. ரோஹித் ஷர்மா (48), விராத் ஹோக்லி (57), சுரேஷ் ரெய்னா (49), புதுமுக வீரர் மிதுன் (24), ரவீந்திர ஜடேஜா (36) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

முடிவில் இந்திய அணி 44.3 ஓவர்களில் 275 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது.

முதல் 2 ஆட்டங்களிலும் இந்தியா வெற்றி பெற்றிருந்தமையால் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஆட்டநாயகனாகத் தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடரின் நாயகனாக இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

## துபாய் டெனிஸ்: பயஸ் ஜோடி தோல்வி!

டுபாய்,மார்ச் 01

டுபாய் ஓபன் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின், இரட்டையர் பிரிவில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - செக்குடியரசின் லூகாஸ் லூயி ஜோடி தோல்வியடைந்தது.

நேற்றுமுன்தினம் நடந்த இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - செக்குடியரசின் லூகாஸ் லூயி ஜோடி, சுவீடனின் சைமன் ஆஸ் பிளின், ஆஸ்திரேலியாவின் போல் ஹென்லே ஜோடியைச் சந்தித்தது.

முதல் செற்றை 2-6 என இழந்த பயஸ் ஜோடி, இரண்டாவது செற்றையும் 3-6 என கோட்டைவிட்டது.

இறுதியில் பயஸ் ஜோடி 2-6, 3-6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்து, இரண்டாவது இடத்தைப்பிடித்தது.

## அணித் தலைவராகிறார் அப்துல் ரஸாக்?

''ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் தலைவராக சகலதுறைவீரரான அப்துல் ரஸாக் நியமிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

மேற்கிந்தியத் தீவுகளில் 'ருவென்ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சமீபத்தில் அறிவித்தது.

இதில் யூனிஸ்கான், முகமது யூசுப், சொய்ப் அக்தர் உள்ளிட்ட மூத்த வீரர்கள் இடம்பெறவில்லை.

அப்ரிடி, மாலிக் இருவரும் சர்ச்சையி[illegible] சிக்கியுள்ளமையால் அவர்களுக்கு தலைவ[illegible] பதவிக்கான வாய்ப்பு சந்தேகமாக உள்ளது,

இதனால், அணியின் மூத்த வீரர் என்ற முறையில், அப்துல் ரஸாக் முன்னிலை வகிக்கிறார். இதனால், 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடருக்கு அப்துல் ரஸாக்கை அணித்தலைவராக நியமிப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது.

## அதிவேகமாக சதம் அடித்தோரில் டி வில்லியர்ஸ் 7ஆவது இடத்தில்

தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ் நேற்றுமுன்தினம் 58 பந்துகளிலேயே சதத்தை நிறைவு செய்தார். ஒரு நாள் போட்டி வரலாற்றில் 7ஆவது அதிவேக சதம் இதுவாகும்.

குறைந்[illegible]ந்துகளில் சதம் விளாசிய சாதனையாளர்களின் பட்டியலில் முதல் 6 இடங்களில் பாகிஸ்தானின் அப்ரிடி (37 மற்றும் 45 பந்துகளில்), தென்னாபிரிக்காவின் பௌச்சர் (44 பந்துகளில்), மேற்கிந்தியத் தீவுகளின் லாரா (45 பந்துகளில்), இலங்கையின் ஜெயசூர்யா (48 மற்றும் 55 பந்துகளில்) ஆகியோர் இருக்கிறார்கள்.

## பாக். அணியின் பயிற்சியாளராக வக்கார் யூனிஸுக்கு அழைப்பு




கராச்சி, மார்ச் 01

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து இன்திகாப் ஆலம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய பயிற்சியாளராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸை 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நியமிப்பதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அவருக்கும் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு, சவாலான இந்தப் பொறுப்பை ஏற்கத் தாம் தயாராக இருக்கிறார் என வக்கார் யூனிஸ் பதிலளித்துள்ளார்.

ஓரிரு தினங்களில் பயிற்சியாளருக்கான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்[illegible]டுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 4[illegible] வயதான வக்கார் யூனிஸ் 87 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 373 விக்கெட்டுகளையும், 262 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 416 விக்கெட்டுகளையும் கைப் பற்றி இருக்கிறார்.



வான்கூவர் நகரில் நடைபெற்றுவரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில், பின்லாந்துக்கு எதிரான ஹொக்கிப் போட்டியின்போது கோல் ஒன்றைப் போட்டபின்னர் சந்தோசத்தில் குதூகலிக்கும் சுலோவாக்கிய வீரர்கள்...

## நியூஸிலாந்து-ஆஸி. மோதிய 'ருவென்ரி-20' தொடர் சமன்!

ஆஸ்திரேலியா-நியூஸிலாந்து அணிகள் மோதிய 2ஆவது 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி சமனிலையில் முடிந்துள்ளது.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 214 ஓட்டங்களைக் குவித்தது.

மக்கலம் 56 பந்துகளில் 116 ஓட்டங்களைச் சேர்த்தார். 50 பந்துகளில் சதமடித்த அவர் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கிறிஸ் கெய்லின் சாதனையைச் சமன் செய்தார்.

பின்னர் 115 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 214 ஓட்டங்களைச் சேர்த்தது. இதையடுத்து போட்டி சமனிலையில் முடிந்தது.


## இதய அஞ்சலி

எமது குருத்துவக் கல்லூரியின் நூலகர்

**செல்வி மேரி பிளசிடா சிமியோன்**



எம் குருத்துவக்கல்லூரியின் நூலக[illegible]ராய்
பதின்மூன்றாண்டுகள்
நிறைவான பணியாற்றி
எமைவிட்டுச் சென்ற
இதயம் அக்காவே!
உம் பிரிவின் செய்தியால்
கனக்கிறது எம் இதயங்கள்
பண்பு, பாசம், பற்று நிறைந்து
தியாகத்துடன் நீர் புரிந்த சேவை
மறந்திடமாட்டோம் நாம்
ஆண்டவன் பாதமலராய்
ஆனந்தமாய் நீர் வீற்றிருக்க
ஈர விழிகளுடன் வேண்டுகின்றோம்.



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக் குடும்பம்,
கொழும்புத்துறை.

(95465)

## மரண அறிவித்தல்

### மேரி பிளசிடா சிமியோன் (இதயம்)

(நூலகர், புனித சவேரியார் குருமடம், கொழும்புத்துறை)



அடப்பன் வீதியை பிறப்பிடமாகவும், வளன்புரம், கொழும்புத்துறையை வசிப்பிடமாவும் கொண்ட இதயம் என அழைக்கப்படும் மேரிபிளசிடா நேற்று (28.02.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிமியோன் - பேபி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற புனிதம் அமிர்தநாதர் மற்றும் அன்ரன் யோசப் (அமலன் மாஸ்ரர்), யோசப் அலோசியஸ் (முன்னாள் முகாமையாளர், கொமர்ஷல் வங்கி), ராணி இம்மானுவேல் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, அமிர்தநாதர் மற்றும் யோசெப் வனிதா, அலோசியஸ் நக்மா, ராஜு இம்மானுவேல் ஆகியோரின் மைத்துனியும், அருள்நாயகம் ஜெயா, கிறிஸ் ஜெயானந்தன், உதயன் மேரி நிர்மலி (கரித்தாஸ்-கியூடெக்), டயஸ் அமலி, லூட்ஸ் மரியா (ஆசிரியை, சம்பத்திரிசியார் கல்லூரி), யெவ், யெனிவர் ஆகியோரின் சித்தியும், அருண், சகானி, டெஸ்மன், ஜெசுறான், கத்தரின் சயானு ஆகியோரின் மாமியும், கணபதிப்பிள்ளை - சின்னராசா மாணிக்கம் தம்பதியினரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வளன்புரம், கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (0103.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு திருப்பலிக்காக வளன்புரத்திலுள்ள புனித சூசையப்பர் ஆலயத்திற்குக் கொண்டுசென்று திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், குருமார், கன்னியர்கள், குருத்துவ மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*வளன்புரம்,*
*கொழும்புத்துறை.*

(95464)

தகவல்:
அமலன் மாஸ்டர் (சகோதரன்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொதுத் தேர்தல் காலத்தில் கட்டவிழும் போக்குகள்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை ஒட்டி, தமிழர்கள் சம்பந்தமாகக் கட்டவிழும் இரண்டு விடயங்கள் இங்கு நோக்கற்பாலவையாக உள்ளன.

முதலாவதாக - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைப் போக்கையும் பெயரையும் சுவீகரித்துச் செயற்படும் சில தமிழர் தரப்புகளின் போக்குப் பற்றியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலமாகவும், வலுவாகவும் இருந்த காலத்தில் ஒரு விடயம் பல தரப்பினாலும் கவனிக்கப்பட்டு வந்தது. அது - விடுதலைப் புலிகள் இயக்கம், அதனுடன் தொடர்புபடுபவர்கள் யாராக இருந்தாலும் - அவர் அரசுத் தரப்பாக இருந்தாலும், சர்வதேசத் தரப்பாக இருந்தாலும் தமிழர் தரப்பாக இருந்தாலும் - அந்த நபர்களையும் தரப்புகளையும் புலிகள் இயக்கம் வசமாகவும், வாய்ப்பாகவும், சந்தர்ப்பத்துக்கு ஏற்பவும் தனக்குப் பொருத்தமான விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளும். ஆனால் மறுவளமாக, அத்தரப்பு யாராக இருந்தாலும் அத்தரப்பினால் புலிகள் இயக்கத்தை அவற்றுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியாது. அதற்குப் புலிகள் இயக்கம் அனுமதியளித்தது கிடையாது; இடம் அளித்தது கிடையாது. இதுதான் கடந்த மே மாதம் வரை நிலைமையாக இருந்து வந்தது.

ஆனால் கடந்த மே மாதத்தில் புலிகள் இயக்கத்தின் சிதைவோடு சகலவையும் மாறிவிட்டன.

விடுதலைப் புலிகளின் பெயரை நேரடியாகப் பயன்படுத்தாவிட்டாலும், புலிகளின் கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள் போன்றவற்றைத் தொடர்ந்தும் தாங்கிப் பிடித்து அரசியல் நடத்துபவர்கள் தாங்கள் எனத் தங்களை அடையாளப்படுத்தி, அதன் மூலம் அரசியல் பண்ணவும், லாபம் தேடவும் முயற்சிக்கும் பல பிரகிருதிகளை இந்தத் தேர்தல் காலப் பிரசாரத்தின் போது நாங்கள் பரவலாகக் காண முடிந்துள்ளது.

விடுதலைப் புலிகள் இருந்தவரை புலிகளின் பெயரைப் பயன்படுத்தி எவரும் காரியமாற்ற முடியவில்லை. ஆனால் புலிகளின் சிதைவோடு, அவர்களின் பெயரையும், கீர்த்தியையும் தமக்கு வசமாகப் பயன்படுத்தி அரசியல் பிழைப்பு நடத்தும் பலர் தோன்றியிருக்கின்றமை தமிழர்களுக்கு நேர்ந்த பெரும் துரதிஷ்டமின்றி வேறில்லை.

'தமிழர் தேசம்', 'தேசியம்', 'சுயநிர்ணய உரிமை' என்று பல்வேறு அரசியல் சொற்பிரயோகங்களை இலாவகமாகப் பயன்படுத்திக்கொண்டு, 'புலி' முகமூடிகளை அணிந்தபடி, பலரும் தமிழர் பிரதேசங்களில் அரசியல் செய்யப் புறப்பட்டிருக்கின்றமை தமிழர்களுக்கு நேர்ந்த பெரும் பின்னடைவின்றி வேறென்ன?

யதார்த்தக் கள நிலைவரங்களைப் புரிந்து, உள்வாங்கிக் கொண்டு, அவற்றுக்கேற்ப அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழினம் இன்று உள்ளது.

ஆனால், யதார்த்தப் புறநிலை உண்மைகளை ஏற்றுக் கொள்ளாமல் - அல்லது புரிந்து, உணர்ந்து கொள்ள முன்வராமல் - இன்னும் கனவுலகக் கற்பனைகளில் சஞ்சரித்தபடி - சாத்தியப்பாடற்ற கோட்பாடுகளை முன்வைத்து, அவற்றின் அடிப்படையில் தமிழர்தம் ஒற்றுமையைக் குலைக்கவும், சீர்கெடுக்கவும் முற்பட்டுள்ள தரப்புகள் குறித்து தமிழர்கள் மிகுந்த எச்சரிக்கையாகவும், கவனத்தோடும் செயற்படவேண்டிய காலகட்டம் இது. இத்தகைய குளறுபடிகள், குசும்புத்தனங்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி தாங்கள் எழுதப் போகும் தீர்ப்பு மூலம் தகுந்த பதிலடி கொடுத்து, உரிய பாடத்தைச் சம்பந்தப்பட்டோருக்குத் தமிழ் மக்கள் போதிக்கத் தவறாது முன்வரவேண்டும்.

இதேசமயம், இலங்கைத் தமிழர் விடயத்தை ஒட்டி இலங்கை அரசுக்கு எதிரான கடும் போக்குக் கருத்து நிலைப்பாட்டை பிரிட்டன் உட்பட்ட சில மேற்கு நாடுகள் அண்மைக்காலத்தில் பரவலாகப் பிரதிபலித்து வருகின்றமையையும் நாம் காணமுடிகின்றது.

இது, இலங்கை விடயத்தில் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் மேற்குலகின் நீதியான எத்தனம் போல வெளிப்பட்டாலும், இத்தகைய கடும் போக்கை இந்தச் சமயத்தில் மேற்குலகு வெளிப்படையாக மேற்கொள்வது, மறுபக்கத்தில் தென்னிலங்கை பௌத்த - சிங்கள சக்திகளை அதன் ஆட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னால் இன்னும் வலுவாகத் திரண்டு நிற்பதற்கு ஊக்குவிக்கும் என்பதையும், அப்படி நேர்வது ஈழத் தமிழருக்குப் பாதகமான அம்சமாகிவிடும் என்பதையும் மேற்குலகும் கவனிக்க வேண்டும்.

ஈழத் தமிழருக்கு நியாயம் செய்ய மறுக்கும் - அநியாயம் இழைக்க முயன்று நிற்கும் - கொழும்பு அரசுத் தலைமையைத் தேவைப்பட்டால் மேற்குலகு கடுமையாகக் கையாள்வதில் தப்பில்லை. அப்படிச் செய்வது தவிர்க்க முடியாததாகவும் இருக்கும். ஆனால் அதைக் கால, நேர, சமய, சந்தர்ப்பம் பார்த்தும் செய்வதும் முக்கியமாகும்.

'தமிழரின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகளை இரும்புக்கரம் கொண்டு அழித்து, நாட்டைக் காப்பாற்றிய எனது நற்செயலைப் பிடிக்காமல், மேற்குலகு எனக்கு எதிராகத் தீவிரப் போக்குக் காட்டுகின்றது. அந்த மேற்குலகின் முயற்சியை நாம் முறியடிப்பதாயின் இலங்கை மக்கள் எனக்குப் பின்னால் அணிதிரள வேண்டும்' - என்ற கருத்தையே தனது தேர்தல் பிரசாரத்தின் மையப் பொருளாக்கி, இத்தேர்தலில் பெருவெற்றியீட்டி விடுவார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆகவே மேற்குலகு காலம் பார்த்துத் தனது நடவடிக்கையை முன்னெடுப்பதே சிறந்ததும், பொருத்தமானதுமாகும்.

# பொன்சேகாவின் செயலாளராக இருந்தவர் தண்டனை விதிக்கப்பெற்ற ஒரு குற்றவாளி

**நேற்று (28.02.2010) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்தில் இருந்து ஒரு பகுதி இது.**

கடந்த வாரம் வியாழக்கிழமையன்று மங்கள சமரவீர மாத்தறையில் தமது ஆதரவாளர்களின் ஆதரவுடன் பவனியாக சென்று மாவட்ட செயலகத்தில் தமது வேட்புமனு வைக்கையளித்தார். போகும் வழியில் ஓர் இடத்தில் சிறிய மக்கள் கூட்டம் ஒன்று ஒரு மேசைக்கருகில் கூடி நின்றது.

ஜெனரல் சரத்பொன்சேகாவை சிறையில் இருந்து விடுதலை செய்யும்படி கோருவதற்கான ஒரு மகஜரில் அவர்கள் கையெழுத்திடுவதில் ஈடு

## முன்னாள் இராணுவத்தளபதிக்கு சோதனைக்குமேல் சோதனை

பட்டிருந்தார்கள். சமரவீரவும் ஆதரவாளர்களும் அதில் தாங்களும் கையெழுத்திட்டுவிட்டே புறப்பட்டுச் சென்றார்கள்.

ஐக்கிய தேசிய முன்னணியையும் ஜே.வி.பியையும் வேறு சில எதிர்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனாதிபதித் தேர்தலில் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும்படி செய்த பெருமைக்குரியவர் மங்கள சமரவீர. இதேவிதமாகத்தான் 2004 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தியவர் அவர். அதன்மூலம் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உதயமாக அதன்மூலம் ஜே.வி.பியினர் அமைச்சரவையில் சேர்ந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்படலாயிற்று.

எதுவானாலும் கடந்த நவம்பரில் மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவை ஆதரிப்பதற்காக அவர் மேற்கொண்ட தரகு வேலை மிகவும் அரசியல் முக்கியத்துவ முடையதாக இருந்துள்ளது. இந்த முயற்சியில் இரண்டு கடும் எதிரிகளான கட்சிகளை ஒன்றிணைப்பதில் அவர் வெற்றிகண்டார். தேசிய ஐக்கிய முன்னணியின் மூலமாக ஐ.தே.கட்சியும் அதன் நேர்விரோதியான ஜே.வி.பியும் ஒன்றாக இணைந்து செயற்பட்டார்கள். சுமார் 10 வாரங்கள் இரு பிரிவினரும் எதுவித எதிர்த்தாக்குதலும் நடத்தாது இருந்துவந்தனர். இருதரப்பினரும் பொதுநோக்கத்தை வைத்து இருவேறு திசைகளில் சென்றார்கள்.

பலவீனமான இந்த ஒற்றுமை இப்போது மாற்றமடைந்து வருகின்றது.

இது ஒரு தோடம்பழத்தை உரிப்பது போன்ற செயற்பாடு என்று ஒரு நண்பர் நகைச் சுவையாகக் கூறினார். தோலை உரித்தாகிவிட்டது. சுளைகளையும் பிரித் தாயிற்று. ஆனால் அதனை மீண்டும் ஒரு பழமாகச் சேர்த்துப் பார்க்கமுடியாது. பொன்சேகா கூட்டமைப்பின் இன்றைய நிலையை இவ்வாறுதான் சிலர் வர்ணிக்கிறார்கள்.

சமரவீர தமது தகப்பனார் மகாநாமவைப் பின்பற்றி அரசியலுக்குள் வந்து 27ஆண்டுகளாகின்றன. ஆரம்ப காலத்திலிருந்தே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலத்த ஆதரவாளராக இருந்து வந்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினராக 21 வருடகாலம் பணியாற்றியுள்ள அவர் பல அமைச்சர் பதவிகளை - ஊடகம் மற்றும் வெளியுறவு உட்பட வகித்துள்ளார். உறுதிகொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர் என்ற முறையில் மாத்தறையில்

ஐ.தே.கட்சியையும் அதன் சின்னமான யானையையும் காலடி வைக்கவும் விடப்போவதில்லை என்ற வகையில் செயற்பட்டார்.

ஆனால் சமரவீரவின் உறுதிப்பாடு கடந்த வியாழக்கிழமையுடன் மாறிவிட்டது. தென்மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவராக அவரும் இருக்கின்றார்.

யானை ஐக்கிய தேசிய முன்னணியின் சின்னமாக இருந்தபோதிலும், கூட்டணியில் உள்ள மிகப்பெரிய கட்சியான ஐ.தே.கட்சியின் சொந்தச் சின்னமாகவும் அது இருக்கின்றது. அதுவும்கூட அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சி (மக்கள் பிரிவு) உடைந்துவிட்ட நிலையில் அவரது சகாக்களில் ஒருவரான ரிரான் அலஸ் ஓய்வுபெற்ற ஜெனரல் பொன்சேகாவுடனும் ஜே.வி.பி.யுடனும் இணைந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியில் போட்டியிடுகிறார்.

ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்யும்படி கோரிக்கை வைத்து கையெழுத்திட்டவர்களில் சமரவீர மட்டுமன்றி, வேறுபலரும் இப்போது ஒரு சங்கடமான நிலைமையை அவதானிக்கிறார்கள். ஜனநாயகத் தேசிய முன்னணியின் ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிர்வரும் தேர்தலில் எதிர்த் தரப்புகளாக விளங்கப்போகிறார்கள். இதனால் எதிர்க்கட்சிகளுக்கிடையில் பலத்த பிளவு ஏற்படலாம். ஐ.தே. முன்னணி இப்போது மேஜர் ஜெனரல் பொன்சேகா மற்றும் ஜே.வி.பி. யிடமிருந்து மிகத் தூரமாக விலகிக் கொண்டுள்ளது.

ஐ.தே.முன்னணியின் முக்கிய பங்காளிக் கட்சியான ஐ.தே.கட்சியானது தனது கொள்கை சார்ந்த அரசியல் மேல்தளத்தைச் சீராக வகுத்துக்கொண்டுள்ளது. ஐ.தே.க. தனது தேர்தல் சின்னம் யானையாகவே இருக்கும் என்று முடிவு செய்துள்ளது. அத்துடன் காலத்துக்குக் காலம் புலனாய்வுத்துறையினர் வெளியிடும் தகவல்கள், ஊழல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள், வெளிநாட்டு செலாவணி சட்ட விதிகள் மீறப்பட்டுள்ளமை மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுகள் வெளிப்பட்டிருப்பதும் இவைக்குக் காரணம் எனலாம். இவை ஓய்வுபெற்ற ஜெனரலின் மதிப்பை பாரதூரமாகப் பாதித்துள்ளன. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வாக்களித்தவர்கள் மத்தியில் அதிலும் விசேஷமாக இந்த அரசுக்கு எதிரான ஊழல் குற்றச் சாட்டுகளை முன்வைத்து வாக்களித்த

## தப்பியோடிய மருமகனாலும் நிம்மதி தொலைந்தது

வர்கள் மத்தியில். இந்தக் குற்றச்சாட்டுகள் பலவற்றை அவர் மறுத்திருக்கிறார். ஆனால் அவை பின்னர் சரியானவையாக தெரியவந்துள்ளன. அவரது மருமகன் தனுன நீதியின் பிடியிலிருந்து தப்பியோடியிருப்பதும் பொன்சேகாவுக்குச் சாதகமாக அமையவில்லை.

மேலும் பல விடயங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில்; ஊழல்களை எதிர்த்துப் போராடுவதற்கென அரசியலுக்குள் புகுந்துள்ளவரான பொன்சேகாவின் மதிப்பு வேகமாகக் குறைந்து வருகின்றது என்பதில் சந்தேகமில்லை.

தனது குடும்ப உறுப்பினர்கள் ஊழலில் ஈடுபடவில்லையென்று அவர் தெரிவித்திருந்த மறுப்புக்கள் தவறானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர் எவ்வாறு வெளிநாட்டு நிதிகளை பெற்றுக் கொண்டார் என்பதற்கான கேள்விகளுக்கு அவர் பதில் சொல்ல வேண்டியவராயும் இருக்கின்றார்.

25 மில்லியன் ரூபாய்க்கு மேல் (527000அமெரிக்க டொலர் உட்பட) பணம் வைப்பீடு செய்யப்பட்டிருப்பது தொடர்பாக புலனாய்வு செய்துள்ள இரகசியப் பொலிசார், இவற்றை அவர்தான் பெற்றுக்கொண்டவர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதையடுத்து புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கேள்விக்கு உள்ளாக்கி வருகிறார்கள்.

இந்த வெளிப்பாடுகள் தொடர்பாக கூட்டுக்கட்சிகளான ஐ.தே.முன்னணியோ ஜனநாயக தேசிய முன்னணியோ இன்னமும் எதுவித கருத்துக்களையும் வெளியிட்டிருப்பதாகத் தெரியவில்லை. எவ்வாறானாலும் ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்ட முறையினைத் தமது முன்னணி கடுமையாக எதிர்ப்பதாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். இவ்விடயம் குறித்து தாங்கள் நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"சிவில் நீதிமன்றத்தின்முன் அவரை அரசாங்கம் ஆஜர் செய்ய ஏன் மறுத்து வருகின்றது? அவருக்கு எதிராக அங்கே அவர்களால் ஏன் நடவடிக்கை எடுக்க முடியாது? இது பர்மாவில் இருப்பதைப் போன்ற சர்வாதிகாரம்தான்'' என்று ரணில் ஊடகங்களுக்கு ரணில் தெரிவித்துள்ளார்.

என்றாலும் இராணுவப் பேச்சாளர் ஒருவரின் கூற்றின்படி பொன்சேகா பாதுகாப்பு அதிகாரிகளின் சிரேஷ்ட அதிகாரியாக இருந்தபொழுது அவர் நடந்துகொண்ட விதம் குறித்து பொது இராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படவிருக்கிறார். ஏனைய குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரை சிவில் நீதிமன்றங்களில் அவர் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று பெயர் குறிக்க விரும்பாத அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

### திரைமறைவில் இடம்பெறும் சந்திப்புகள்

எதிர்க்கட்சிகள் வெவ்வேறு வழிகளில் செல்வதற்குத் தீர்மானித்து இருந்தாலும் சமீபகாலமாகத் திரைமறைவில் பலவிதமான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக ஊடகத்துறையினர் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகின்றது.

கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தற்போது பொன்சேகாவினதும் அவரது குடும்பத்தினரதும் நெருங்கிய சகாவாகவிருக்கும் ரிரான் அலஸ் ஐ.தே.முன்னணி தலைவர் விக்கிரமசிங்கவுடன் ஒரு சந்திப்பைக் கோரிநின்றார். தேசிய ஜனநாயக முன்னணியின் பேச்சாளர் போன்று அவர் இப்போது செயற்பட்டு வருகிறார். பொன்சேகா தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஐக்கிய தேசிய முன்னணியினதும் பிரதித்தலைவராக நியமிக்கப்படுவாரா என்று அவர் அறியவிரும்பியிருந்தார். கட்சி வட்டாரங்கள் அதிகாரபூர்வமாக பதவி எதுவும் உறுதியாகக் கூறமுடியாது என்றும் ஆனால் வேட்புமனுப் பட்டியலில் பொன்சேகாவை முதன்மை வேட்பாளராக நியமிக்கலாம் என்றும் கூறிய தாகத் தெரியவந்தது. அவரது மனைவி அனோமாவையும் ஒரு வேட்பாளராக அறிவிக்கவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

கடந்த வாரம் புலனாய்வுத்துறையினரின் தேடுதல் வெளிப்பாடுகளையடுத்து மேலும் அதிக மன அதிர்ச்சிகளை ஜெனரல் பொன்சேகா எதிர்கொள்ள நேர்ந்தது. அவருடைய நெருங்கிய சகாவும், தனி செயலாளரும் பிரசார முகாமையாளருமாக இருந்தவர் ஒரு நிரூபிக்கப்பட்ட குற்றவாளி என்பது தெரியவந்துள்ளது. சேனக்க ஹரிப் பிரிய ஆர்னோய்ட்டி சில்வாவின் பங்கு பணிகள் பற்றிய விவரம் அவர் பொன்சேகாவுடன் ஜனாதிபதித்

(04ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

மாசி 18 02.03.2010
செவ்வாய்க்கிழமை
திதி: துதியை
மு.இ. 06.47 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பி.ப. 03.35 வரை
[illegible]
[illegible] 03.27-04.57 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவுக்கு எதிரான சாட்சியங்களை பதிவு செய்யும் செயற்பாடு வெள்ளியுடன் முடிந்தது

## இராணுவ நீதிமன்றம் அடுத்தவாரம் நியமிக்கப்படும்

கொழும்பு, மார்ச், 1

முன்னாள் இராணுவத் தளபதி ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சாட்சியங்களைச் சுருக்கமாகப் பதிவு செய்யும் செயற்பாட்டை இராணுவ அதிகாரிகளின் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் தயாரட்னாயக்க கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடித்துக் கொண்டுவிட்டார்.

அவர் தமது விசாரணை தொடர்பான அறிக்கையை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரியாவிடம் கையளிக்க விருக்கிறார் என்பது இப்போது தெரியவருகின்றது.

இந்த விசாரணைகளை நடத்தவிருக்கும் பொது இராணுவ நீதிமன்றத்தில் இடம் பெறப்போகும் நீதிபதிகளின் விவரம் அடுத்தவாரம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இராணுவ நீதிமன்றத்துக்குப் பாதுகாப்பு அதிகாரிகளின் பதில் பிரதம அதிகாரி எயார் சீப்மார்ஷல் ரோஷான் குணதிலக்க தலைமை வகிப்பார் என்று தெரிகின்றது.

இத்தகவல்கள் கொழும்பிலிருந்து வெளிவரும் ஞாயிறு ஆங்கில வாரப் பத்திரிகையொன்றில் வெளிவந்துள்ளன.

இதுவரை நடைபெற்றுள்ள புலன் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ள விவரங்கள் பொதுத்தேர்தல் காலத்திலும் ஜெனரல் பொன்சேகாவின் புகழ் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகலாம். பொன்சேகாவின் தேர்தல் வேலைகளைக்கவனிக்கவிருக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இதனால் தர்மசங்கடம் ஏற்படக்கூடும் என்று அப்பத்திரிகை கூறுகின்றது. (ப)

## தமிழ்க் காங்கிரஸின் இடைக்காலத் தலைவராக வின்சென்ற்போல்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் இடைக்காலத் தலைவராக பிரான்ஸிஸ் வின்சென்ற் போல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம் பெற்ற இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கட்சியின் தலைவராக பதவி வகித்து வந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி பதவி விலகுவதாகத் தெரிவித்து அனுப்பிய கடிதத்தை செயற்குழு ஆராய்ந்து அதை ஏற்பதென ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

பொதுச்சபை கூடும் வரை இடைக்காலத் தலைவராக கட்சியின் உப தலைவரான பிரான்ஸிஸ் வின்சென்ற் போலை நியமிப்பது என்றும் செயற்குழு முடிவு செய்துள்ளது என்றார். (அ-1-6-86)

# மக்கள் வங்கியின் மூன்று கிளைகள் இன்று வலையமைப்பில் இணைகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 01

மக்கள் வங்கியின் மூன்று கிளைகள் இன்று முதல் மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணணி வங்கிச் சேவை வலையமைப்புடன் ஒன்றிணைக்கப்படவுள்ளன.

சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய கிளைகளே கணணி வலையமைப்புடன் ஒன்றிணைக்கப்படவுள்ளன.

சுன்னாகம் கிளையில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கி[illegible]ஸ்வரனும் -

பருத்தித்துறை கிளையில் காலை 10 மணியளவில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்தின் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரமும்

நெல்லியடிக் கிளையில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் வைபவத்தில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு வலையமைப்பை வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பர்.

மக்கள் வங்கியின் வலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.ஹென்றி ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (4-224)

# ஆளுநர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்; வலயங்களுக்கு இடையில் புதன் ஆரம்பம்

வலி.வடக்கு, மார்ச் 01

வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வடமாகாணத்திற்கு உட்பட்ட மாவட்ட கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வலய அணிகளுக்கு இடையே இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 5அணிகளும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 2அணிகளும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 2அணிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 2அணிகளும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அணியுமாக மொத்தம் 12 அணிகள் மோதவுள்ளன.

முதலாம் பரிசாக இரண்டு இலட்சம் ரூபாவும், இரண்டாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

முதல் இரு அணிகளின் வீரர்களும் பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்படுவதுடன் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன.

முதல் தடவையாக வலய மட்டத்தில் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவினர்களுக்கு இடையே தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் கலந்து கொள்கின்ற ஒரு போட்டியாக இந்தச் சுற்றுப் போட்டி அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. (1-86)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பெருந்திருவிழா நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம் , மார்ச் 01

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீநகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி கோயிலில் இந்த ஆண்டுக்கான வருடாந்த பெருந்திருவிழா வழிபாடுகள் நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளன.

இம் மாதம் 14ஆம் திகதி வரை தினமும் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை விசேட ஹோமம், அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

இம் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை மகாசிவராத்திரி நான்குசாம விசேட ஹோமங்களும் பூசைகளும் நடைபெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை கண்டகித் தீர்த்தமும் நடைபெறும்.

இம்முறை பக்தர்கள் சேந்தாங்குளம் வழியாகவும், தெல்லிப்பழையூடாகவும் துவிச்சக்கரவண்டி தவிர தமது வாகனங் களில் நேரடியாகவே ஆலயத்திற்கு வருவதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக ஆலயத்தின் ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ரி)

## பொன்சேகாவின்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கு முன்பாக அவசரமாக மும்பாய்க்குப் போய்வந்த பிறகே வெளியில் தெரிய வந்தது. மதிப்பு கூட்டப்பட்ட வரி (வற்) வழக்கொன்றில் அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார் என்பதும் நாட்டை விட்டு வெளி யேறக்கூடாதென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததும் தெரிய வந்துள்ளது.

அவரிடமிருந்த பல கடவுச்சீட்டுகளின் பதிவுகளில் பல்வேறு மாறுபாடுகள் இருந்ததாகப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதன்பிறகே அவரது கடவுச்சீட்டு ரத்துச்செய்யப்பட்டது. பெப்ரவரி எட்டாம் திகதி பொன்சேகா கைது செய்யப்பட்டபோது அவரும் கைதுசெய்யப்பட்டார்.

இதேசமயம் சி.ஐ.டி திணைக்களத்துக்கு பெல்ஜியம் பொலிசாரிடம் இருந்து வந்துள்ள ஆவணம் ஒன்றில் சேனக சில்வாவை பிரஸல்ஸிக்கு நாடு கடத்தி அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது. ஏமாற்றியதற்கான ஒரு குற்றச்சாட்டில் பெல்ஜியம் நீதிமன்றில் சேனக்க சில்வா மீது விசாரணை (அவர் இல்லாமலே) நடைபெற்று 2 வருட கடும் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளார்கள். அவர் பெயர் பிரபல்யம் பெறும்வரை பெல்ஜியம் பொலிஸாரால் அவர் எங்கிருக்கிறார் என்பது கண்டுபிடிக்க முடியாமல் இருந்து வந்துள்ளது. 1980ஆம் ஆண்டு திருட்டுக் குற்றம் ஒன்றுக்காக அவர் மூன்றரை ஆண்டுகள் வெலிக்கடை சிறையில் இருந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. நன்னடத்தையின் பேரில் தண்டனைக்காலம் முடியும் முன்பே விடுதலை செய்யப்பட்டிருந்தார். இராணுவத்தில் லெப்டினன்ட் பதவி வகித்த போது அவர் ஒழுக்க நடைமுறைகள் தொடர்பாக இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் தம்மைக் கப்டன் என்றே கூறிக் கொண்டு வந்துள்ளார். டி சில்வா டாக்டர் பட்டம் எதுவும் பெற்றவர் அல்லவென்பதைப் புலனாய்வுத் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். இருந்தாலும் தாம் அந்தப் பட்டம் பெற்றவராகவே காட்டிக் கொண்டு வந்துள்ளார் என்று புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். (ப)


**படிவம்**

1) தொழில் உறவுகள், மனித வலு அமைச்சில் தொழில் வழிகாட்டல் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2010

2) கால்நடை வளர்த்தலில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி

ஆகியவற்றுக்க விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உண்டு.

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.


# விடுமுறைக்கு வந்துகுவிந்த பயணிகளால் சனநெரிசலில் திணறிய யாழ்.குடாநாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 01

கடந்த இரண்டு நாள்கள் விடுமுறையைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப்பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

சனி போயா தின விடுமுறை மற்றும் ஞாயிறு விடுமுறை போன்றவற்றைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான பஸ்களில் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்தில் திடீரென வந்துகுவிந்ததால் குடாநாடு சனநெரிசலில் சிக்கித்தவித்தது.

ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ் வீதி என்பனவற்றினூடாக நகருக்கு உட்செல்லும் வாகனங்கள் மிக நீண்ட நேரமாக நகரமுடியாது ஒன்றன்பின் ஒன்றாக வரிசையில் நின்றதையும் பரவலாகக் காணமுடிந்தது.

இவ்வாறு வந்து குவிந்த சுற்றுலாப்பயணிகள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

அதனால் வியாபார நடவடிக் கைகளும் நகரில் வழமையை விட நேற்று களைகட்டிக் காணப்பட்டது. (04-224)


**நினைவு கூருகின்றோம்**



கடந்த 30.01.2010 அன்று இறைபதம் எய்திய, எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி ஞானாம்பிகை ஆலாலசுந்தரம் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் வீரகத்தி ஆலாலசுந்தரம்**

(ஓய்வு பெற்ற ஓவசியர்)

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்.
(95461)



**மரண அறிவித்தல்**



*சந்திரகாந்தன் தவமணிதேவி*

நாவலடி லேன், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமான சந்திரகாந்தன் தவமணிதேவி நேற்று (28.02.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம்-பஞ்சவர்ணம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடனமூர்த்தி மற்றும் கனகாம்பிகை தம்பதியினரின் மருமகளும், சந்திரகாந்தனின் (லண்டன்) அன்பு மனைவியும், சசிகாந்த் (சசி), கிருஷ்ணவேணி (துர்க்கா), துளசிகாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரெட்ணம் (ஜேர்மனி), செல்வரெட்ணம், இராசரெட்ணம், யோகரெட்ணம், இந்திராணி ஆகியோரின் சகோதரியும், சகுந்தலா, மஞ்சுளா, சியாமளா ஆகியோரின் மைத்துனியும், சரண்ஜாவின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
(95462)

தகவல்:
சசிகாந் (மகன்).



பெருமக்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**மென்பொருள் வடிவமைப்பு**
**(Soft Ware Design)**

எம்மால் வணிக நிறுவனங்கள், ஹோட்டல்கள், சுப்பர் மார்க்கட்ஸ் மற்றும் சகல அரச, தனியார் நிறுவனங்களுக்கும் மிகக் குறைந்த விலையில் மென்பொருள் வடிவமைத்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு: 0789138016
266, Arasady Road, Kantharmadam (95455)



**தேவை**

1. பதவியின் பெயர் : பராமரிப்பாளர்
2. இடம் : செம்மணி இந்து மயான அபிவிருத்திச்சபைக்குரிய காணி/கட்டடம்/கேணி முதலியன.
3. வயது : 45-55வரையுள்ளவர் விரும்பத்தக்கது.
4. நிபந்தனைகள் : மயான சுற்றாடலில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. ஊதியம : பேசித்தீர்மானிக்கப்படும்.
6. மயானச் சபை நிர்வாகிகளின் அறிவுறுத்தல்களுக்கமைய கடமைகளைச் செய்ய விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 6ஆம் திகதிக்கு முன் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
திரு. எஸ்.இலட்சுமிகாந்தன் (GS), தெரிவுக்குழுத் தலைவர், கட்டப்பிராய், கோப்பாய்.
8. விண்ணப்பிப்போர் மார்ச் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நேர்காணல் நிகழ்விற்கு வருகை தரவேண்டும். இந்த நிகழ்வில் உங்களுக்குரிய கடமைகள் சம்பந்தமான விவரங்கள் தெரிவிக்கப்படும்.

24.02.2010 ஸயன்.வ.பரமசிவம் (ஜே.பி), கௌரவ செயலாளர் (95166)



**தவணைக் கட்டண வசதியில்**

இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் ISUZU வாகனங்கள், டொல்பின் -ஹயஸ், மோட்டார் சைக்கிள் என்பனவற்றை பெறுவதற்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

பூபதி காட்சியறை
யாழ்.மானிப்பாய் வீதி,
(95530)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் பரவும் நெல் எரிபந்த நோயை உரிய வழிகளைக் கையாண்டு கட்டுப்படுத்துவோம்

சு.விஜயகுமார்
விவசாயப் போதனாசிரியர்
சாவகச்சேரி.

தென்மராட்சிப்பிரதேசத்தில் மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு,நுணாவில் பகுதி போன்ற வயல் வெளிகளில் இந்த நோயின் தாக்கம் Bg 406, Ax 402, H[4] ஆகிய வர்க்கங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**நோய் பற்றிய அறிமுகம்**

நெற்பயிரை பாதிக்கும் முக்கிய நோய்களில் இதுவும் ஒன்றாகும். இந்நோய் நாற்றுப் பருவத்திலோ அல்லது பூக்கும் பருவத்திலோ பாதிப்பை ஏற்படுத்தும் போது முழுப்பயிரும் அழியலாம். இது ஒருவகைப் பங்கசினால் ஏற்படுகின்றது.

**நோய் அறிகுறிகள்**

இந்நோய் ஏற்படுத்தும் பங்கசுகளின் வித்திகளால் இலைகள் மட்டுமல்லாது இலைமடல்,கணு,கதிரின் கழுத்து, மணிகள் போன்றவற்றிலும் பாதிப்பு ஏற்படும். இலைகளில் தோன்றும் புள்ளிகள் நாளடைவில் நீட்சியடைந்து கூம்பு வடிவாக மாறும். இப் புள்ளிகளின் நடுவில் சாம்பல் அல்லது வெள்ளை நிறமாகக் காணப்படும்.

இப்புள்ளிகளைச் சுற்றி கபில நிறமாக அல்லது கபிலச் சிவப்பு நிறமாகக் காணப்படும். புள்ளிகளின் நிறம்,வடிவம் என்பன காலநிலை, பயிர் ,வயது, எதிர்ப்புத் தன்மை என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடும். இலைகளில் இப்புள்ளிகள் ஒன்று சேர்ந்து உலர்ந்து வைக்கோல் நிறத்தில் காணப்படும். இதன் காரணமாக நிரம்பாத மணிகளும், முதிராத மணிகளும் தோன்றும்.

மணிகளில் தொற்று ஏற்படுமாயின் ஆழமான கபில நிறப்புள்ளிகள் தோன்றும். இதனால் மணிகளின் தரம் குறைவடையும். அடுத்த போகத்துக்கு விதை நெல்லாக பயன்படுத்த முடியாது.

கதிரின் கழுத்துப்பகுதியில் தொற்று ஏற்படின் கதிர்கள் சரியும். அறுவடையின் போது கதிர் முறிந்து விழுந்து இழப்பை ஏற்படுத்தும்.

**பங்கசு தொற்றுவதற்கு சாதகமான நிலைமைகள்**

காலை நேரத்தில் உயர் சாரீரப்பதன் - (90.v)

குறைந்த இரவு வெப்பநிலை (20c° - 24c°)

மப்பு மந்தாரமான நிலை

இரவில் பனி இருத்தல்

சிபார்சிற்கு மேலதிகமான யூரியாவை இடல்.

**முகாமைத்துவ முறைகள்**

1. பயிராக்கவியல் முறைகள்

வரம்புகளிலும்,பயிர்களிடையேயும் களைகள் இன்றி பராமரித்தல்.

யூரியாவை சிபார்சிற்கு ஏற்ப தேவையான போது தேவையான அளவில் பகுதி பகுதியாக இடல்.

2. **இரசாய முறை**

விதைத்தலில் இருந்து பாற்பருவம் வரை ஒழுங்காக கவனித்தல் அவசியம். நோய்த் தொற்று அறிகுறி காணப்பட்டால் பின்வரும் பங்கசு நாசினிகளில் ஒன்றை விசுறல் வேண்டும்.






| பங்கசு நாசினி | கல்வை அளவு | 16லீற்றர் தாங்கிக்கு | ஏக்கருக்கு தேவையான அளவு |
|---|---|---|---|
| ★பியுஜி-வன் (ஐசோபுரோத்தியோலேன்) 400 கிராம் / லீற்றர் | 25மி.லீ ஐ 10லீ நீரில் கலத்தல் | 40மி.லீ | 400 மி.லீ |
| ★பவஸ்ரின் (காபென்டசிம் 50%) | 07கிராமை 10லீ நீரில் கரைக்கவும் | 11கிராம் | 200கிராம் |
| ★காபென்ட்சிம் 500கிராம்- லீற்றர் | 07மி.லீ.ஐ 10லீ.நீரில் கலக்கவும் | 11மி.லீ | 200 மி.லீ |

உடன் நோயைக் கட்டுப்படுத்தி உயர் விளைவு பெறுவோம்.

# வடக்கு, கிழக்கில் 31எம்.பிக்கள் தெரிவாகுவர்; அவற்றிற்குப் போட்டியிடுவோர் 1,813 பேர்!

யாழ்ப்பாணம்,மார்ச்.1

வடக்கு, கிழக்கில் தமிழ் மாவட்டங்களில் 31பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்றத் தேர்தலில் 1,813 பேர் களம் இறங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 9பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய 324 பேரும், வன்னியில் 6 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய 252 பேரும், திருகோணமலையில் 4 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய 217 பேரும், மட்டக்களப்பில் 5 பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய 360 பேரும், திகாமடுல்லவில் (அம்பாறையில்) 7பிரதி நிதிகளைத் தெரிவு செய்ய 660 பேரும் களம் இறங்கியுள்ளனர்.

கடந்த காலத் தேர்தல்களில் இத்தனை அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. அளவுக்கு அதிகமானவர்கள் களம் இறங்கியுள்ளதால் வாக்குச் சீட்டு மிக நீளமாக இருக்கும் என கூறப்படுகின்றது.

திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தின் வாக்குச் சீட்டு 4அடி நீளமானதாக அமையும் என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மாவட்டத்தில் 836 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இரண்டாவதாக கூடுதல் வேட்பாளர் போட்டியிடுவது அம்பாறை மாவட்டத்திலேயே என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## நாடாளுன்றத் தேர்தல்; அரசியல் கட்சிகளின் 30 வேட்பு மனுக்கள் ரத்து

கொழும்பு, மார்ச்.1

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் மொத்தம் 30 அரசியல் கட்சிகளினதும் 69 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்கள் சட்ட நியதியின் பிரகாரம் தாக்கல் செய்யப்படாததால் அவை ரத்துச் செய்யப்பட்டுள்ளதான தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் அக்கட்சிகளின் பொதுச் செயலாளர்களிடமோ சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களிடமோ வழங்கப்படும் என தேர்தல்கள் திணைக்களத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்துள்ளார். (அ-6)

# புலிகளின் தலைவர் பிரபாகரனும், பொட்டம்மானும் தலைமறைவெனக் கருதி ராஜீவ் கொலை வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, மார்ச். 1

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு அம்மானும் தலைமறைவாக உள்ளதால் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை இந்திய நீதிமன்றம் மே மாதத்திற்கு தள்ளி வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் உட்பட பலர் மீது குற்றம்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டு கடந்த 20 வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

தற்போது இவர்கள் இருவரும் தலைமறைவானதை அடுத்து, இவர்கள் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது. சென்னை 1வது தடா நீதிமன்ற நீதிபதி ப.ராமலிங்கம் இந்த வழக்கை விசாரிக்கிறார். கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது சி.பி.ஐ. அதிகாரிகள், வழக்கறிஞர் ஆகியோர் நீதிபதி ப.ராமலிங்கத்திடம் அறிக்கை கொடுத்தனர்.

இந்த வழக்கை நீதிபதி வரும் மே மாதத்துக்கு தள்ளி வைத்தார். புலிகளின் தலைவர் கொல்லப்பட்டு விட்டதாக இலங்கை அரசு கூறிவருகின்றது. எனினும் அவரது மரணச் சான்றிதழை வழங்குவதற்கு பின்னடித்து வருகின்றது.

இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆதாரங்களை சிறிலங்கா வழங்கி விட்டதாக அறிவித்திருந்த நிலையில், அதனை சி.பி.ஐ மறுத்திருந்தது.

அத்துடன், கடந்த இரு வாரங்களுக்கு முன்னர், புலிகளின் தலைவரின் மரணம் குறித்து உறுதியான ஆதாரங்களை சமர்ப்பக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் சி.பி.ஐ கோரியிருந்தது.

எனினும், இதுவரை அவ்வாறான உறுதியான ஆதாரங்கள் எதனையும் சிறிலங்கா வழங்கவில்லை எனத் தெரியவருகின்றது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசாரணையில் இருவரும் தலைமறைவாக இருப்பதாக கருதப்பட்டு வழக்கு மேலும் இரண்டு மாதங்களுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## நீரிழிவு விழிப்புணர்வுக் கண்காட்சிக் கூடங்கள் சிலவற்றில் ஆர்வத்துடன் விளக்கம் பெறும் பார்வையாளர்கள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பணிபுரியும் ரி.குலேந்திரன் அவர்களின் அன்பு மாமனார்

**நாகசிவாயம் குமாரசாமி**

அவர்கள் 25.02.2010 அன்று இறைபதம் எய்திய செய்திகேட்டு துயருறுவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய பணிமனை. (95456) உத்தியோகத்தர், ஊழியர்கள்.



Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம் · தபால் மூலம் · தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.03.2010


## காசநோய் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்.1

காசநோய் தினத்தை முன்னிட்டு குடாநாடு முழுவதும் காசநோய் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் முன்னடுக்கப்படவுள்ளன.

மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக காசநோய் தினத்தை முன்னிட்டே இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.(1-224)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்.1

வேலணை மத்திய கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப.1.30 மணியளவில் கல்லூரியின் தலைவர் பி.அருணகிரிநாதன் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.சிவஞானசுந்தரம் கலந்து கொள்வார். திருமதி ஏ.சிவஞானசுந்தரம் வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்குவார். (ரி)

## பலாமரத்திலிருந்து வீழ்ந்த இளைஞன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 1

பலாமரத்தில் இருந்து தவறி விழுந்த இளைஞன் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வரணி இயற்றா லைட் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தி.சிந்துயன் (வயது-18) என்ற இளைஞனே படுகாயமடைந்தவர் ஆவார்.

மேற்படி இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (78)


# கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர் கைலாஸநாதக்குருக்களின் அன்புக்குரிய மாணவனாக விளங்கி குருத்துவப் பணியில் சிறப்புப் பெற்று உலகின் பல பாகங்களிலும் ஆன்மீக ஒளி பரப்பிய அன்புக்குரிய சகோதரன்

பிரம்ம ஸ்ரீ **சுவாமிரத்னசர்மா சுந்தரேசக் குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா ஸ்ரீ வைகுண்டத்தில் நித்திய வாசம் செய்யப் பிரார்த்திக்கின்றோம்.

பேராசிரியர் கைலாஸநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை,
நியந்த்தீ,
சிவன்கோயில், நல்லூர்.


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 538
திகதி 2010/02/27

சுப்பர் இலக்கம்: 23
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 10 35 52 58

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 23,567,476.00 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 200 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 377 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 10,453 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 6,032 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 149,718 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 23,821 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,407,180.00
சூப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்தவாரம் இரண்டு முதல் பரிசுகள் ரூ. 23,695,837.60

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


# தெருவெளி அரங்கக் கலைஞர்களுக்கு

மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் தெருவெளி அரங்காற்றுகைக்காக திறமையும் ஆர்வமுமுள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

★ நடிகர்கள்
★ பாடகர்கள்
★ வாத்தியக் கலைஞர்கள்
★ ஒப்பனையாளர்

ஒப்பந்த வேதன அடிப்படையில் பணியாற்றும் வாய்ப்பு
03.03.2010 புதன்கிழமை 9 மணிக்கு நேரில் சமுகம் தரவும்

இடம்: நாவலர் மண்டபம்

தொடர்புகளுக்கு-0774602619

துளிகள் சமூக மேம்பாட்டு நிறுவனம். (95454)



# ஆறாத் துயரில் ஆண்டொன்று....



தோற்றம் 05.05.1953

மறைவு 11.03.2009

**திருமதி சிவராசா சாரதா**

எங்கள் குடும்ப ஒளி வீசும்
குலத் தீபம்-அந்தோ
இருளடைந்து ஓராண்டு
பகல் இரவு பாராது
பாசத்தால் அரவணைத்து
நாம் சிறந்திட பல நன்மை
காட்டி வைத்து
பார் சிறக்க வாழ்கையில்
காலனவன் கவர்ந்தானோ!
கதைகள் பல உள்ளதம்மா
கதைத்துப் பேசி மகிழ்ந்திருக்க
வீடு வந்து போங்களம்மா
திக்கெட்டுத் திசைகளிலும்
தேடியே அலைகின்றோம்
ஆண்டுக்கு மடலும்
அனுப்பி வைக்கிறோம்
பதில் கண்டேனும்
வந்திடுங்க காத்திருக்கும்
உங்கள் வரவுக்காய்.

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தோப்பு, ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
(95452)



# கண்ணீர் அஞ்சலி



தாவடியைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டன் கிறவுளி மாநகரின் சொர்ணகாமாட்சி அம்மன் ஆலய பிரதம குருவும், முன்னாள் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதம குருக்களுமாகிய

*வேதாகம சங்கிரகர்,*
*முத்தராகலாவித்தகர்*

பிரம்மஸ்ரீ **சுவாமிரத்ன சர்மா சுந்தரேசக் குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஐயா அவர்களின் ஆத்மா வேங்கடேச வரதராஜப் பெருமாளின் பாதார விந்தங்களில் நித்தியமாக இருக்க எல்லாம் வல்ல வேங்கடேசப் பெருமாளைப் பிரார்த்திக்கின்றோம்.

P.சிவபாஸ்கரன் குடும்பத்தினர்.
சாரங்கா நகை மாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி, ஐ.ம.சு.கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி தேசியப்பட்டியல் உறுப்பினர் விவரம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 01

பிரதான கட்சிகளான இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு, ஐ.தே. கட்சி ஆகியன தமது தேசியப்பட்டியலில் இடம்பெறுபவர்களின் விவரங்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் கையளித்துள்ளனர்.

பட்டியலில் இடம்பெற்றிருப்போர் விவரம் வருமாறு :

இலங்கை தமிழரசுக் கட்சி

சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பேராசிரியர் கே.சிற்றம்பலம், பொறியியலாளர் வே.சிவயோகன், சட்டத்தரணி ஆர்.எம், இமாம், டேவிட் நாகநாதன் (வவுனியா), சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா (திருமலை), டாக்டர் கந்தையா சர்வேஸ்வரன், கே.ஏ. அகிலன் (வவுனியா), கூட்டுறவாளர் பி.கனகசபாபதி.

ஐ.ம.சு. கூட்டமைப்பு

பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க அமைச்சர்களான டி.எம். ஜயரத்ன, டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல். பீரீஸ் எம். எச் மொஹமட், பேராசிரியர் விஸ்வ வர்மபால டியூ.குணசேகர, பேராசிரியர் திஸ்ஸவிதாரண, கீதாஞ்சன குணவர்த்தன, எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோருடன் முத்து சிவலிங்கம், ஷண் முகம் ஜகதீஸ்வரன், அச்சல ஜாகொட, எம்.எப்.எம். முஸம்மில், டபிள்யூ. ஜே.எம் லொக்கு பண்டார, விநாயகமூர்த்தி முரளிதரன், அநுருத்த ரத்வத்தே, ஓமல்பே சோபித்த தேரர், ஜே.ஆர் பீ.சூரியப்பெரும, ஜே.பிரியந்த பண்டார, பேராசிரியர் ராஜீவ் விஜேசிங்க, லெஸ்லி தேவேந்த, சந்திரசேகரன் ஷண்முகநாதன் ஏ.எச். எம் அஸ்வர், மாலினி பொன்சேகா, கலாநிதி ஹரிச்சந் திர விஜேயதுங்க, சரத் கோன்கஹே யூ. எல். ஷாஹுல் ஹமீட் மற்றும் கமலா ரணதுங்க .

ஐக்கிய தேசியக்கட்சி

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, ருக்மன் சேனநாயக்க, கே.என். சொக்சி, இரான் விக்ரமாரத்ன ஆகியோருடன் திலக் மாரப்பன, ஹர்சத சில்வா, எம். சுவாமிநாதன் ஆர். யோகராஜன் (1)

## சகல வேட்பாளர்களும் சொத்து விவரங்களை வெளியிடக்கோருகிறார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, மார்ச் 01

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தமது சொத்துக்கள், கடன்கள் விவரங்களை தேர்தல் ஆணையாளரிடம் பிரகடனம் செய்ய வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களும், சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களும், வேட்பாளர்களும் சொத்துக்கள், கடன்கள் சட்ட மூலத்தைக் தமது கவனத்திற் கொண்டு அதன்பிரகாரம் செயற்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ரி)

# கூட்டமைப்பில் நான் இருந்திருந்தால் புலிகள் அழிந்திருக்க மாட்டார்கள்

## ஆனந்தசங்கரி கூறுகிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக நான் இருந்திருந்தால் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிய விட்டிருக்கமாட்டேன். கள்ள வாக்குகளை அள்ளிப்போட்டு விடுதலைப்புலிகள் எம்.பிக்களாக்கியவர்கள்தான் புலிகள் இயக்கம் அழிந்து போகக் காரணமாக விளங்கினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு யாழ்.செயலகத்தில் வெள்ளிக்கிழமை வேட்புமனுத்தாக்கல் செய்துவிட்டு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எனது கட்சி போட்டியிடவுள்ளது. இதில் என்னை மக்கள் ஆதரவளிக்காமல் ஒதுக்கிவிட்டாலும் பரவாயில்லை. அது மக்களைப் பொறுத்தது. இருப்பினும் எனக்குள் இருக்கும் தேசிய உணர்வை வெளிப்படுத்தத்தேர்தலில்போட்டியிடுகிறேன்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள எம் மக்கள் இன்னும் தம் சொந்த இடங்களில் மீளக்குடியேறாமல் நலன்புரி நிலையங்களில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களுக்குத் தையல்மெசினும், சைக்கிளும் கொடுத்துவிட்டு ஏதோ உதவி செய்கிறோம் என்று அரசாங்கம் பூச்சாண்டி காட்டுகிறது. வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது எந்தவோர் அரசியல்வாதியும் குரல்கொடுக்கவில்லை. நான் மட்டும் குரல்கொடுத்தேன்.

அந்த இறுதி யுத்தநேரத்தில் வன்னியில் 50 ஆயிரம் மக்கள் மட்டுமே உள்ளனர் என்று அரசாங்கம் சர்வதேசத்திற்கு கதையளந்து கொண்டிருந்தது.

அப்போது வன்னியில் 3 லட்சம் மக்கள் சொல்லொணாத் துயரத்தினை அனுபவித்து தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சர்வதேசத்திற்கு நான் எடுத்துரைத்தேன்.

எனவே எனது அரசியலின் அடுத்தகட்ட நகர்வுக்காக மக்கள் என்னை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (50-9)



திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான வேட்பாளர்கள் திருகோணமலை சிவன்கோயில் வழிபாட்டை முடித்து வேட்புமனுத்தாக்கல் செல்லத் தயாராகும் போது எடுக்கப்பட்ட படம்.

# அடிப்படைக் கொள்கைகளிலிருந்து தமிழ்க் கூட்டமைப்பு விலகிவிட்டது

## மூத்த தலைவர்களே அதற்குக் காரணம் என்கிறார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், மார்ச் 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகி விட்டது. அதற்கு மூத்த தலைவர்கள் தான் காரணம்.

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும், அகில இலங்கை தமிழ்க் காங் கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ் வாறு தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் கடந்த வெள்ளியன்று வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்தக் கொள்கையில் இருந்து விடுபட்டுச் சென்று கொண்டிருக்கின்றது.

இதனால்தான் எமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பதே கூட்டமைப்பின் அத்திவாரக் கோட்பாடுகளாக இருந்தது.

இத்தகைய கோட்பாடு கடந்த 2001 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்திலும், 2004 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

### சம்பந்தன் சொன்னது

ஆனால் இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் அத்தகைய கோட்பாட்டில் இருந்து தடம் மாறிவிட்டார்கள்.

கடந்த வாரம் சம்பந்தரைச் சந்தித்துக் கதைத்த போது, அவர் என்னிடம் சில விடயங்களைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

அதாவது தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக பின்னடைவைச் சந்தித்துள்ளனர். இனிமேலும் தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கடைப் பிடிக்க முடியாது.

சர்வதேச சமூகம் எதை விரும்புகிறதோ அதைத்தான் நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை. அதுதான் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் எந்தக் கோட்பாட்டை வைத்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்களோ அதை தமிழ் மக்கள் என்றுமே கைவிடத் தயாரில்லை என்ற உறுதி யான நிலைப்பாட்டை சம்பந்தரிடம் தெளிவு படுத்தினேன். அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமை ஏற்பதாக இல்லை. அதனால் தான் அதைவிட்டு வெளியேறினோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி வெற்றி பெறுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை முன் வைத்துத் தான் எமது அரசியல் செயற்பாடுகள் அமையும் - என்றார். (9)




### நியமனங்கள் குறித்து கண்டிப்பான உத்தரவு ஆணையாளரால் விடுக்கப்பட்டது

நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவிருக்கும் ஏப்ரல் 8ஆம் திகதிக்கு முன்னர் எந்தவித நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்களை செய்யவேண்டாம் என்று கண்டிப்பான உத்தரவை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க விடுத்துள்ளார்.

அமைச்சுச் செயலர், மாகாணசபைகளின் பிரதம செயலர்களுக்கு இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகளை அடுத்து இந்த உத்தரவை விடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (1)

# 30 வருட காலப்போராட்டத்திற்கான இறுதித்தீர்வை இந்த நாடாளுமன்றத் தேர்தல் எமக்குப் பெற்றுத்தரும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 01

30 வருட கால எமது போராட்டத் திற்கு இறுதித் தீர்வைப் பெற்றுத்தரப் போகின்ற தேர்தலாக இந்த நாடாளுமன்றத் தேர்தல் அமையவுள்ளது.

மக்களோடு மக்களாக நின்று சேவை புரிந்த உறுப்பினர் களை வேட்பாளர்களாக்கி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளரும் யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பின் முதன்மை வேட்பாளருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளரைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :

எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தல் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானது மக்களோடு மக்களாக நின்று மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்த உறுப்பினர்களை வேட்பாளராக முன்நிறுத்தி தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது.

அனேகமான கட்சிகள் இம்முறை புது முகங்களை அறிமுகம் செய்துகொண்டு தேர்தலை எதிர்கொள்கின்றன.

நாம் வெற்றிலைச் சின்னத்தில் இணைந்து போட்டியிட்டு அரசாங்கத்துடன் ஒரு இணக் கப்பாட்டு அரசியலை நடத்தி அதன் மூலம் தமிழ்மக்களின் அரசியல், அபிலாசைகளை வென்றெடுப்பதற்குப் பாடுபடுவோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமது அணி வெற்றிபெற்றால் நாம் அனைத்துத் தமிழ்க்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஒரே குரலாக ஒலிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தல் எமது 30 வருட காலப்பிரச்சனைக்கு தீர்வு கூறப்போகின்ற தேர்தலாக அமைந்துள்ளது ஆகவே மக்கள் உண்மை நிலையினை உணர்ந்து சரியான தலைமையைத் தெரிவு செய்யவேண்டும். (50-09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வெள்ளை உள்ளம் படைத்த எம் தெய்வமே!
ஓராண்டு ஆனாலும் எம்
ஈரவிழிகள் காயவில்லை
கட்டி அணைத்தவளோ கதறுகிறாள்,
வளர்த்தவர்களோ வாடி அலறுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி
திருமதி குலசிங்கம் சிவராணி.
லண்டன் - 00442083302576.

கந்தசாமி குடும்பம்,
நீர்வேலி மேற்கு,
மாசுவன் சந்தி.
0214921800

## கண்ணீர் அஞ்சலி

### சண்முகம் அமிர்தலிங்கம் (J.K.S.)

(உரிமையாளர், சண்முகம் புடைவைக்கடை, றம்பைக்குளம், வவுனியா)

சண்முகம் புடைவைக்கடை உரிமையாளரும் எமது உற்ற நண்பருமாகிய சண்முகம் அமிர்தலிங்கம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.திருமதி பத்மகுமாரன்,
உரிமையாளர், போகாஸ் ரெக்ஸ்,
வினு ரெக்ஸ்.

(C/565178)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம் , மார்ச்.1

வரணி குடமியன் பகுதியில் இடம்பெற்ற உழவு இயந்திரம்-மிதிவண்டி விபத்தில் குடும்பப் பெண் காயமடைந்தார்.

இந்த விபத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ். பாமினி (வயது 30) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (04-207)

## வயோதிபப் பெண்ணை கடித்தது விசர்நாய்

யாழ்ப்பாணம் , மார்ச்.1

வீதியில் சென்ற வயோதிபப் பெண்ணை விசர்நாய் கடித்துக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் அண்மையில் வரணி, தாவளைப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த சி.பூமணி (வயது 65) என்பவரே விசர் நாயால் கடியுண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (04-207)

## மெய்வன்மைப் போட்டி

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவியும், முல்லைத்தீவு அரசாங்க அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்க நிறைவேற்று உறுப்பினர் ரி.சிவநாதன் கலந்து கொள்வார். (201-ரி)

## தேவை

யாழ்.நகரில் உள்ள ஐஸ்கிறீம் நிறுவனம் ஒன்றுக்கு திறமை, அனுபவம் உள்ள பெண் வேலையாள்கள் தேவை. பாதுகாப்பும் மன நிறைவான ஊதியமும் கொடுக்கப்படும்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இல. 10, பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். தொ.பே. 0777770916

## வேலையாள் தேவை

தமிழ், ஆங்கில Computer Typing, Photoshop, Corel Draw தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.

Fine Graphics, 146, Ramanathan Road, Jaffna.

## யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

எமது கல்லூரிக்கு க.பொ.த உயர்தரத்திற்கு தமிழ்ப்பாடம் கற்பிப்பதற்குத் தகுதியுடைய ஆண் ஆசிரியர் தேவை.

தகைமைகள்: பட்டப்படிப்பினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
வேதனம்: ரூபா 5000.00 இத்துடன் இலவச தங்குமிட உணவு வசதி

**விண்ணப்ப முடிவு திகதி: 10.03.2010**

**விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:**
அதிபர்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி.
இளவாலை.

தொ.பே: 0213216454

(சி/565159) **அதிபர்.**




## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை யோகேஸ்வரன்



தாவடி தெற்கு, நெல்லொருபதி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகேஸ்வரன் 25.02.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-உத்தமிப் பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா- பூரணம் தம்பதியரின் மருமகனும், ரஜீகரனின் (லண்டன்) அன்புத் தந்தையும் துவாரகியின் அன்பு மாமனாரும் ரதுசன், சந்தோசன் ஆகியோரின் அன்புப் பேரனும், கணேசு- நாகேஸ்வரி, காலஞ்சென்ற சீவரத்தினம்-மற்றும் மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வரத்தினம்-இந்திரபூபவதி (நாவற்குழி) ஆகியோரின் சம்பந்தியும் புஸ்பலீலா, காலஞ்சென்ற வர்களான சண்முகராசா, சிவராசா ஜெயராசா மற்றும் யோகராசா, கதிர்காமநாதன், செல்வராசா, புஸ்பரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(01.03.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லொருபதி பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
(மகன்).

(95194)

## கூறுவிலை கோரல்

இலங்கை வங்கி-நெல்லியடிக் கிளையால் 11.02.2010 பிரசுரிக்கப்பட்ட கூறுவிலை கோரலில் ஏற்பட்ட விளக்கக்குறைவும், குழப்பமும் காரணமாக நிகழ்ந்த தடங்கலுக்கு வருந்துகின்றோம். அதன் காரணமாக குறிப்பிட்ட கூறுவிலை கோரல் இத்தால் ரத்துச் செய்யப்பட்டு மீண்டும் புதிய கோரிக்கை பிரசுரிக்கப்படுகின்றது.

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைக்காக கொள்வனவு செய்யப்பட்ட திரையரங்கு கட்டடத்தினை (லக்ஷ்மி) இடித்து அப்புறப்படுத்துவதற்கான ஒப்பந்த வேலைக்குரிய நிபந்தனைகள்:

மேற்படி திரையரங்கை இடித்து சகல பொருள்களையும் அப்புறப்படுத்திச் சுத்தப்படுத்த வேண்டும். அங்குள்ள மீள் பாவனைக்குரிய பொருள்கள் சகலதையும் ஒப்பந்தகாரர் தனது பாவனைக்கு எடுத்துக் கொள்ளலாம். அதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கூறுவிலைகளைப் பரிசீலித்து தகுந்த ஒப்பந்தகாரருக்கு இவ் வேலையை ஒப்படைப்பார். இவ்வேலை சம்பந்தமாக இலங்கை வங்கி வடமாகாண உதவிப்பொதுமுகாமையாளரின் தீர்மானமே முற்றும் முடிவுமானதுமாகும்.

அ. இடித்து அழிக்கும் வேலை கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கி இருக்கும்

01. கட்டடத்தின் கூரையினை அகற்றல்.
02. அத்திவாரத்தின்மேல் உள்ள சுவர் மற்றும் கொங்கிறீற் பகுதிகளை இடித்தழித்தல்.
03. கொங்கிறீற் உள்ளடங்கலாக முழு அத்திபாரத்தினையும் இடித்தழித்து அகற்றல்.
04. கட்டடத்தினை இடித்தழிக்கும்போது ஏற்படும் குழிகள் ,பள்ளங்கள் அனைத்தையும் வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட கிறவல் (Gravel) மூலம் நரப்பி உரம்போடுதல் (மொங்கான்) வேண்டும்.
05. இடிபாடுகளை அகற்றிச் சுத்தப்படுத்தியபின் காணியினை மட்டப்படுத்தல்.

ஆ. இவ் இடித்தழித்தல் வேலைக்கான கூறுவிலை மேற்படி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கி இருப்பதுடன் மொத்தக் கூறுவிலையின் பெறுமதி இடித்தழிப்பு வேலை ஆரம்பிப்பதற்கு முன் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

இ. தெரிவு செய்யப்படும் இடித்தழிப்பு வேலைக்கான ஒப்பந்தகாரர் மீளப் பெறக்கூடிய தொகையாக ரூபா 50000 வைப்புப் பணம் செலுத்த வேண்டும். இப்பணம் இடித்தழிப்பு வேலை திருப்திகரமான முறையில் பூரணப்படுத்தப்பட்ட பின் விடுவிக்கப்படும்.

ஈ. இடிபாடுகள் எதுவும் காணியில் மீதமிருப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

உ. இடித்தழிக்கும் வேலை வங்கியின் உத்தியோகத்தர்கள் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.

ஊ. வேலை நடைபெறும் போது அயலில் இணைந்திருக்கும் கட்டடங்களுக்கு சேதமேற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கூறுவிலைகள் யாவும் இலங்கை வங்கி நெல்லியடிக்கிளையில் உள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் தங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஒரு கடித உறையில் சீலிட்டுப் போடுதல் வேண்டும். கூறுவிலை கோரல் பெட்டி 10.03.2010 (புதன்கிழமை) பிற்பகல் 4மணிக்கு நெல்லியடி கிளையில் வைத்துத் திறக்கப்படும். கூறுவிலை கோருவதற்காகக் காணியைப் பார்வையிட வேண்டிய தேவையேற்படின் இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை முகாமையாளரை அலுவலக நேரத்தில் சென்று சந்திக்கவும்.

**முகாமையாளர்,**
**இலங்கை வங்கி, நெல்லியடி.**

(C/565155)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயம்



சென்றவாரத் தொடர்ச்சி...

மேலும் சில உதவிகள்ள லயன் தியாகராஜா, சேவைக்கால ஆலோசகர் மகாதேவன் போன்றோரும் பாட சாலை அரங்கத்தைப் பழைய மாணவன் ஒருவரும் வழங்கியுள்ளனர். பாடசாலைக்கென்று கணனிக் கூடத்தை அமைப்பதற்கு மேலதிக மாகாண க் கல்விப் பணிமனையினரும் பொறியியல் பகுதியையும் உள்ளக வீதியையும் அமைப்பதற்கு யாழ்.மாநகரசபையினரும் பொறியியல் பகுதியினரும் தமது ஆரம்பப் பணியினை மேற்கொண்டுள்ளனர். இந்த வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் போன்றோர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு கைகோர்த்துள்ளனர் என்று அதிபர் குறிப்பிட்டுள்ளார். மேலும் மதிய உணவை வழங்கும் உலக உணவுத் திட்டத்தினர் பெரும் பங்கேற்புதுடன் Dr. டான் முத்துவேல் அவர்கள் மாதாந்தம் ஒரு தொகை பணத்தை மதிய உணவிற்காக வழங்கி வருவதை மாணவர் சமூகம் மறக்க முடியாது என்றும் அதிபர் கூறியுள்ளார். இப்பாடசாலை மாணவர்களிடம் பல திறமைகள் வெளிப்படுவது காணக்கூடியதாகவுள்ளது. 2000ஆம் ஆண்டுற்குப் பின்னர் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற 12 பேரும் தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சென்ற 6 பேரும் பாடசாலையில் க.பொ.த. சாதாரணம் வரை கற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இப்பாடசாலையில் பல சங்கங்களும், மன்றங்களும், குழுக்களும் இயங்குகின்றன. அவையாவன முகாமைத்துவக் குழு, ஆசிரியர் தரமட்டம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், இந்துமா மன்றம், மாணவர் முதல்வர் சபை, தமிழ் மன்றம், கணித, விஞ்ஞான மன்றம், சுற்றாடல் முன்னோடிக் குழு, சுகாதாரக்குழு, சிறிய நண்பர்கள் குழு, சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம் போன்றவையே ஆகும். இப்பாடசாலை முன்னேற்றத்தில் எத்தனை சாதனை படைத்தாலும் சில குறைபாடுகள் பாடசாலையில் காணப்படுகின்றன. அதாவது மூடப்படாத வகுப்பறைகள், தளபாடப் பற்றாக்குறை என்பவையே இப்பாடசாலையில் காணப்படும் குறையாகவுள்ளதென அதிபர் குறிப்பிடுகின்றார்.


தர்சா சந்திரகுமாரன்
யாழ் நகர் வலம்

இப் பாடசாலையின் எதிர்காலத் திட்டம் பற்றி அவரிடம் கேட்டபோது எதிர்கால எதிர்பார்ப்பாக மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வழமை[...] யான வகுப்புகள் நீக்கப்படுமென்றும் [...] தற் போதுள்ள க.பொ.த.சித்தி வீதம் 50 ஆ[...] காணப்பட்டது. எதிர்காலத்தில் 75 வீதத்தையாவது அண்மிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் காணப்படுவ தாக அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உயர்தர கலைப்பிரிவு ஆரம் பிக்கப்பட வேண்டும் என்றும் தற்போது கவிஞர் ந.சத் தியபாலன் அவர்களின் வழிகாட்டலில் வெளிவந்துகொண்டிருக்கும் 'வேல்' என்னும் காலாண்டு சஞ்சிகையின் சிறப்பம்சம் பற்றி அனைவரும் அறிய வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கையினை தாம் மேற்கொள்வதாகவும் அதிபர் தெரிவித்திருந்தார்.

மேலும், நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயம் எதிர்காலத்தில் மிகவும் வளர்ச்சி பெற்ற பாடசாலையாகவும் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறும் சகல மாணவரும் சமூகத்தில் தனித்துவமாகவும் மிளிர்வார்கள் என்று நிச்சயம் நம்பலாம்.

(முற்றும்)

# இன்றும் நிலைத்திடும் நல்லூர் இராசதானியின் எச்சங்களை இனியாவது பாதுகாப்போம்

சென்றவாரத் தொடர்ச்சி....

மந்திரி மனை

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோயிலுக்குச் சற்றுத் தெற்காக நல்லூரின் பாரம்பரிய வரலாற்றை நினைவுபடுத்தும் வகையில் கம்பீரமான முகப்புத் தோற்றத்துடன் இம்மந்திரிமனை அமைந்துள்ளது. நீண்டகாலம் அர்ச்சகரின் இல்லமாக இருந்த இம்மனை தற்போது தனிமையாக்கப்பட்டு ஒரு வரலாற்று நினைவாலயம் என நினைக்கும் அளவிற்குக் காட்சியளிக்கின்றது. இதன் கட்டட அமைப்பும், மரத்திலான சிற்ப வேலைப்பாடுகளும் நூதனமான கலைமரபைப் பிரதிபலிக்கின்றது. இதன் பொதுவான வெளித்தோற்ற அமைப்பு, கலைமரபு ஒல்லாந்தர் காலக் கலைமரபைப் பிரதிபலித்து நின்றாலும்,அதில் சுதேசக் கலைமரபும் கலந்து நிற்பதைக் காணலாம். ஆனால் இதை நேரில் பார்வையிடும் ஒருவருக்கு இது அன்னியரின் நினைவுச் சின்னமாகத் தென்பட்டாலும் அதை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் ஒல்லாந்தர் காலத்திற்கு முன்னரே யாழ்ப்பாண மன்னர் காலக் கட்டடத் தொகுதி இங்கிருந்ததென்ற உண்மையைக் கண்டு கொள்ள முடியும். அத்தகைய ஒரு வரலாற்றுப் பாரம்பரியம் இவ்விடத்திற்கு இருந்தமையால்தான் பிற்காலத்தில் ஒல்லாந்தர் காலக் கட்டடங்கள் பல இங்கே அமைக்கப்பட்டன எனலாம். தற்போது இப்பழைய கட்டடத் தொகுதிகள் சில இடிந்த நிலையிலும் ஒல்லாந்தர் காலம் மாற்றியமைக்கப்பட்ட நிலையிலும் உள்ளன. இதற்கு இங்கிருக்கும் பழைய கிணறு ஒன்றை ஆதாரமாகக் காட்டலாம். இக்கிணற்றின் ஒரு பகுதி மந்திரி மனைக்கு உள்ளேயும், மறுபகுதி வெளியேயும் அமைந்துள்ளது. இக்கிணற்றிற்கும் யாழ்ப்பாண மன்னர் கால யமுனா ஏரிக்கும் இடையே சுரங்கப்பாதை அமைக்கப்பட்டிருந்ததாயும்,சில காலங்களில் இக் கிணற்றில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டதாயும் கூறப்படுகின்றது. தற்போது பாதுகாப்புக் காரணங்களால் இது அடைக்கப்பட்டுவிட்டது.

மேலும் இம்மனையின் பின்புறத்தில் நில அறையொன்றும், அதற்கு மேல் மூடு சாந்தினால் அமைக்கப்பட்ட மண்டபமும் இருந்ததாகத் தெரிகின்றது. ஆனால் தற்போது இவை இடிந்த நிலையில் மூடுண்டு காணப்படுகின்றன. இவ் இடத்தில் இருந்து வீட்டிற்குச் செல்லும் சுரங்கவாசல் ஒன்று பிற்காலத்தில் அடைக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. வீட்டுக்குள்ளே இருந்த நிலஅறையும் அதற்குள் இறங்கிச் செல்ல இருந்த படிக்கட்டுக்களும் பிற்காலத்தில் அடைக்கப் பட்டதாகத் தெரிகின்றது. இவ்வாறான கட்டடத் தொகுதிகள் சில யாழ்ப்பாண மன்னர் காலத்தில் கட்டப்பட்டவை என்பது தொல்லியலாளர் பலரின் பொதுவான கருத்து ஆகும்.


மந்திரி மனை

சங்கிலியன் தோப்பு கல்தோரணவாசல்

முத்திரைச் சந்திக்கு வடக்கே சில யார் தூரத்தில் வலது பக்கமாக இத்தோரண வாசல் அமைந்துள்ளது. நீண்டகாலம் கவனிப்பார் அற்ற நிலையில் இருந்த இக் கட்டடத் தொகுதி தற்போது நல்லூரில் இருந்த இராசதா னியை நினைவு படுத்தும் ஒரு சின்னமாகப் பார்க்கப்படு கின்றது. அண்மைக் கால கலைவிழா மலர்களையும் தமிழ் மன்னர் கால வர லாற்று நூல்களையும்அலங்கரித்த இந்த நினைவுச் சின்னம் யார் காலத்தில் கட்டப்பட்டது என்பதில் கருத்து முரண் பாடு நிலவுகின்றது. சிலர் இதனைச் சங்கிலிய மன்னன் அரசமாளிகை வாசல் எனவும்; வேறு சிலர் யாழ்ப்பாண மக்களின் அடிமை வாழ்வுச் சின்னம் எனவும் கூறியுள்ளனர். இக் கட்டடமும் கலைமரபும் ஒல்லாந்தர் காலத்திற்குரியவை என்பதில் ஐயமில்லை. இதையொத்த கலைமரபுடைய கட்டடத் தொகுதிகள் பலவற்றை இன்னும் பறங்கித் தெருவில் உள்ள வீடுகளில் காணலாம். ஆனாலும் இதற்கு முன்னோடியாகக் தமிழ் மன்னர்களின் இராசதானி இந்த இடங்களில் இருந்ததுதான் முக்கிய காரணம். இவற்றின் பின்னால் எமது தமிழ் மன்னர்களின் வரலாற்றுச் சாதனைகள் மறைந்து கிடக்கின்றன.

இந்த இடத்தை ஆராய்வதன் மூலம் அவற்றைக் கண்டுகொள்ளலாம். அந்த வகையில் சங்கிலியன் தோப்புக் கல் தோரண வாசல் அன்னியர் ஆதிக்க நினைவுச் சின்னமாக இருப்பினும் அதன் பின்னால் நல்லூர் இராசதானியின் வரலாறு மறைந்துள்ளது எனலாம். இதனால் இவற்றைப் பாதுகாப்பது அவசியமாகின்றது. 1957ஆம் ஆண்டு இப்பகுதியில் ஆய்வு மேற்கொண்ட சண்முகநாதன் அவர்கள், இக் கட்டட இடிபாடுகள் இடையே சங்கிலி மன்னன் கால அரண்மனையின் அத்திபாரங்கள் இருப்பதாகச் சுட்டிக் காட்டினார். இன்னும் இங்குள்ள குளத்தையும் வைரவர் கோவில் அத்திபாரங்களையும், செங்கட்டிகளையும், ஒடுகளையும், மட்பாண்டங்களையும் அவதானிக்கலாம் இவற்றுட் பல தமிழ் மன்னன் காலத்திற்குரியவகையாகும்.

(அடுத்தவாரம் யமுனா ஏரி)


சங்கிலியன் தோப்பு கல்தோரண வாசல்

ஆ. பிரியந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1169 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 04 13 41 44

26-02-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 214,844 | 20/- | 4,296,880/- |
| 2 இலக்கங்கள் | 19,750 | 40/- | 790,000/- |
| 1 இல. + லக்கினம் | 19,552 | 60/- | 1,173,120/- |
| 2 இல. + லக்கினம் | 1,809 | 200/- | 361,800/- |
| 3 இலக்கங்கள் | 527 | 1000/- | 527,000/- |
| 3 இல. + லக்கினம் | 48 | 10,000/- | 480,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,028,800/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 256,537 | | 8,528,800/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,959,700/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ஏ.சரத் தர்மசிரி அனுராதபுரம்

கைத்தொலைபேசி வெற்றியாளர்: என்.நிஷாந்த டி சில்வா அம்பலாங்கொடை

2010 மார்ச் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 501020976-6-33 |
| கண்டி | 501013972-2-31 |
| புத்தளம் | 501014353-0-35 |
| நுவரெலியா | 501025475-5-15 |
| பதுளை | 501014262-1-19 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

## சேவை

சகலவிதமான குளிரூட்டிகள் (A/C), குளிர்சாதனப் பெட்டிகள் (FRIDGE) ஒரு வருட உத்தரவாதத்துடன் வீடுகளில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0771341991 (95122)

## தவறிவிட்டது

அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்த அரசரத்தினம் சயந்தன் என்பவரது தே.அ.அட்டை (இல 790033671V) 01.02.2010 அன்று யாழ்ப்பாணத்துக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே: 0778435102 (95172)

## பிரத்தியேக வகுப்பு (கணிதம்)

தரம் 06இலிருந்து O/Lவரை உங்கள் நேர வசதிக்கேற்ப விசேடமாக கற்பிக்கப்படும்.

தொ.பே.இல: 0719422983 (95174)

## சுழிபுரம் பிரதேசத்தில் புதிய காவலரண்கள்

சுழிபுரம், மார்ச் 01

சுழிபுரம் பிரதேசப் பிரிவில் புதிதாக மூன்று காவல் நிலையங்களை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் புதிய காவல் நிலையங்களை அமைத்துத் தங்கியுள்ள இராணுவத்தினர் தாம் தங்கியுள்ள இடங்களை அழகுபடுத்தல், வீதி, இடங்களை செப்பனிடுதல் ஆகிய கருமங்களைச் செய்து வருகின்றனர்.

வீதியின் இரு மருங்குகளிலும் அழகிய பூங்கன்றுகள் நடப்பட்டு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

சுழிபுரம், பறாளை வீதியிலுள்ள மேல் வீட்டோடு உள்ள இல்லம், மூளாய் செல்வா வாசிகசாலைக்கு அருகாமையாகவுள்ள இல்லம், பனிப்புலம் காலையடி வேலவர் இல்லத்திற்கு அருகாமையாகவுள்ள இல்லம் ஆகியவற்றையே இராணுவத்தினர் காவல் அரண்களாகப் பயன்படுத்துகின்றனர்.

## வலி.கிழக்குப் பகுதியில் நெல் அறுவடை ஆரம்பம்

கோப்பாய், மார்ச் 01

வலி.கிழக்கு தரவை பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் நிலவிய காலநிலையினால் விளைச்சல் நல்ல முறையில் கிடைத்துள்ளதாகவும் காலநிலை குழப்பாததால் விளைச்சலிலும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நெல் மூடை ஒன்று 2ஆயிரம் ரூபா தொடக்கம் 2ஆயிரத்து500ரூபா வரை இனங்களிற்கு ஏற்ப விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (1-72)

## சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

வசாவிளான், பலாலி தெற்கை நிரந்தர முகவரியாகவும், கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உரும்பிராயைத் தற்காலிக முகவரியாகவும்கொண்ட இராமலிங்கம் சுப்பிரமணியம் என்பவரின் சடலம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சுமார் 5அடி உயரம், கறுப்பு நிறம், இடது கால் இல்லாத இச் சடலத்தை உரியவர்கள் அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு அவர் கேட்டுள்ளார். (6)

## நடிகர்கள் தேவை

வீதி நாடகம் ஒன்றில் நடிப்பதற்கு ஆர்வமுள்ள ஆண், பெண் இரு பாலருக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

★சுய விவரங்களோடு உடன் விண்ணப்பிக்கவும்.★

ஆற்றுகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும். பகுதிநேரமாகவோ, முழுநேரமாகவோ பங்குபற்றலாம்.

தொடர்புகளுக்கு:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 0718724067 (C/565189)

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி
## இறைச்சிக் கடைகளை ஏலத்தில் விடுதல்

கரைச்சிப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கீழ்வரும் பொதுச் சந்தைகளில் இறைச்சிக் கடைகள் 15.03.2010ஆம் திகதி தொடக்கம் 14.04.2010 ஆம் திகதி வரையான ஒரு மாத காலப்பகுதிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன. இந்த பகிரங்க ஏலத்தில் ஈடுபட விரும்புவோர் தங்களை பிரதேச சபை அலுவலக நேரத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஏல விற்பனை 11.03.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறும்.

**பொதுச் சந்தைகள்**

1. உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்கால் சந்தை
2. ஜெயந்தி நகர் சந்தை
3. கிளிநொச்சி பொதுச் சந்தை
4. பரந்தன் பொதுச் சந்தை

**கோரப்படும் இறைச்சிக் கடைகள்**

★ கோழியிறைச்சிக் கடை
★ மாட்டிறைச்சிக் கடை
★ ஆட்டிறைச்சிக் கடை

**நிபந்தனைகள்**

* இறைச்சி வெளிமாவட்டங்களில் இருந்து பொது சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கொண்டுவரப்படுதல் வேண்டும்.
* விற்பனை செய்யும் இடம் சித்தி பெற்றவராலேயே அமைக்கப்படல் வேண்டும்.
* கேள்விப் பணம் ரூபா 250.00 ஆகும். இப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது
* சுகாதார சுற்றாடல் சமூக, பிரதேசசபை சட்டதிட்டங்களுக்கு ஏற்ப விற்பனை நிலையம் அமைக்கப்பட வேண்டும்.
* வைப்புப் பணமாக ரூபா 5000.00 செலுத்துதல் வேண்டும். இது சேவை முடிந்ததும் மீளளிக்கப்படும்.

பொன்.நித்தியானந்தம், சிறப்பு ஆணையாளர்.

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி
## கட்டட பட வரைஞர்களை பதிவு செய்தல்

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள / திருத்தம் செய்ய வேண்டியுள்ள கட்டடங்களுக்கான வரைபடங்கள் வரைவதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

01. NDT/NCT 9 (சிவில்) சான்றிதழ் அல்லது NDT/NCT (Draftsmen) சான்றிதழ் பெற்றவர்கள். அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமை புரியும் தொழில்நுட்ப அலுவலர்/பட வரைஞர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
02. பதிவுக் கட்டணமாக ரூபா ஆயிரத்து ஐந்நூறு செலுத்த வேண்டும் (1,500.00).
03. பிரதேசசபை எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
04. முடிவு திகதி 15.03.2010 ஆகும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவர விண்ணப்பங்களை தமது மூல ஆவணப் பிரதியுடனும், கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுடனும் கரைச்சிப் பிரதேசசபைக்கு கையளித்தல் வேண்டும். பரிசீலனைக்காக மூல ஆவணம் கொண்டு வருதல் வேண்டும்.

ஒரு வருட காலத்திற்கு பின் தங்கள் சேவையானது புதுப்பிக்கப்படல் வேண்டும்.

பொன்.நித்தியானந்தம்,
சிறப்பு ஆணையாளர்.
(C/565173)

## மஹஜன சம்பத

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

26.02.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2210

வெற்றி எழுத்து D வெற்றி எண்கள் 1 3 6 5 9 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D 1 3 6 5 9 5 | ரூபா.19,540,544/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 1 3 6 5 9 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 3 6 5 9 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | 6 5 9 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 144 |
| 4 பரிசுகள் | 5 9 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1379 |
| 5 பரிசுகள் | 9 5 | ரூபா. 100/= | பரிசுகள் 13772 |
| 6 பரிசுகள் | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 136542 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 1 3 6 5 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | 1 3 6 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 135 |
| 9 பரிசுகள் | 1 3 6 | ரூபா. 100/= | பரிசுகள் 1397 |
| 10 பரிசுகள் | 1 3 | ரூபா. 50/= | பரிசுகள் 13643 |
| 11 பரிசுகள் | D | ரூபா. 20/= | பரிசுகள் 54534 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 12,534,570.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 20,783,440.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
...34/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




பிரான்ஸில் வசிக்கும் றொகான் ஸ்ரனிஸ்குமாரி தம்பதியரின் செல்வப் புதல்வன் செலான் றோகித் (ராஜா) இன்று (01.03.2010) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை பாசமிகு அம்மப்பா, அம்மம்மா, மாமா, சித்தி, பூட்டியம்மா, அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உறவினர்கள் அனைவரும் யேசு அப்பாவின் அருள்பெற்று பல்கலைகளும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வே.இரத்தினகுமார் (அம்மப்பா)
இ.சறோஜினிதேவி (அம்மம்மா)
80/6, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்குப் பின்னரான இலங்கைப் போக்கு

**சர்வதேச நெருக்கடித் தவிர்ப்புக் குழு இலங்கை நிலைவரம் தொடர்பாக வெளியிட்ட பிந்திய அறிக்கை இது. 'புதினப் பலகை' இணையத் தளத்துக்காகத் தி.வண்ணமதி இதனை மொழிபெயர்ந்திருந்தார்.**

புலிகளுக்குப் பின்னரான உலகத் தமிழர் அமைப்புகள் வெளிப்படைத் தன்மையுடனும் ஜனநாயகப் பண்புடனும் வளர்கின்றன

கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக சுதந்திரத் தமிழ்த் தாயகத்தை அமைப்பதற்கான ஆயுதப் போராட்டத்திற்கு தங்களது நிதி மற்றும் கோட்பாட்டு ரீதியான ஆதரவை வழங்கி வரும் புலம் பெயர் வாழ் தமிழர்கள், மறைமுகமாக இலங்கையின் அரசியல் போக்கைத் தீர்மானித்திருக்கிறார்கள்.

மே 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தோற்கடிக்கப்பட்டமை புலம் பெயர் தமிழர்களின் இது போன்ற செல்வாக்கைப் பெரிதும் குறைத்திருந்தாலும், இலங்கைக்கு வெளியே வாழுகின்ற பெரும்பான்மையான தமிழர்கள் இலங்கையில் தமிழர்களுக்கான தனியான தாயகம் அமைவதற்கே தொடர்ந்தும் ஆதரவு வழங்குகிறார்கள்.

நாட்டின் எதிர்கால முனைப்புக்களில் புலம் பெயர் வாழ் தமிழர்கள் காத்திரமான பங்கு வகிப்பதை அவர்களது பணம் உறுதிப்படுத்தும்.

எவ்வாறிருப்பினும், நாட்டின் அரசமைப்பில் சட்ட திருத்தங்களைக் கொண்டு வருவதன் ஊடாகத் தமிழர்களதும் ஏனைய சிறுபான்மையினரதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை இலங்கை அரசும் மேற்கொள்வதற்குச் சர்வதேச சமூகம் எத்தகைய அழுத்தத்தைப் பிரயோகிக்கப் போகிறது என்பதிலும், வருகின்ற மாதங்களில் நாட்டின் தமிழர்களுடன் கொழும்பு அரசும் எத்தகைய உடன்பாட்டுக்கு வரப்போகிறது என்பதிலுமே புலம் பெயர் வாழ் தமிழர்கள் இலங்கையில் வகிக்கப் போகும் பங்கின் தன்மை தங்கியிருக்கிறது.

அதே நேரம் - புலம் பெயர் நாடுகளில் வசிக்கும் சுமார் 100 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களால் இலங்கையில் மீண்டும் ஒரு கிளர்ச்சியைத் தோற்றுவித்துவிட முடியாது.

ஆனால், இலங்கையில் மீண்டுமொரு கிளர்ச்சி தானாக உருவெடுக்குமிடத்து, புலம் பெயர் வாழ் தமிழர்களின் பணமும் அவர்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்குள் இருக்கும் நிலையும் இது போன்று முளை விடும் கிளர்ச்சிகள் வேகமாக வளர்வதற்கு வழி செய்துவிடும்.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், புலம் பெயர் வாழ் தமிழர்கள் மத்தியில் கோபம் மற்றும் சோர்வடைந்த மன நிலையே காணப்படுகிறது.

இலங்கைத் தமிழர்களது நலனுக்காகவே செயற்படும் ஓரேயொரு அமைப்பாகப் பெரிதும் கருதப்பட்ட புலிகள் இயக்கம் தொடர்பில் மாறுபட்ட சில கருத்துக்களும் நிலவுகின்றன.

புலிகளது அவமானகரமான தோல்வி, போர் உக்கிரமடைந்திருந்த இறுதி மாதங்களில் தமிழ் மக்களது இறப்பு வீதம் பெரிதும் அதிகரித்திருந்தமை மற்றும்ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை என்பன தாங்கள் வலுவிழந்துவிட்டோமோ என்ற எண்ணத்தைப் புலம் பெயர் வாழ் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

தவிர, மேற்குலக நாடுகள் தங்களை ஏமாற்றிவிட்டதென எண்ணும் இவர்கள், தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்கள். சில சமயங்களில் இவர்களிடத்தே பழிவாங்கும் எண்ணமும் மேலோங்கிக் காணப்படுகிறது.

புலிகளின் ஆட்சியை எதிர்த்தவர்கள் யாரோ அவர்களை அச்சுறுத்தும், ஏன் சில சந்தர்ப்பங்களில் அவர்களைக் கொலை செய்யும் கட்டமைப்பு பெரிதும் குழம்பிப் போய் இருக்கிறது.

தாங்கள் தோல்வியடையப் போகிறோம் என்பது நீண்ட நாள்களுக்கு முன்னரே புலிகளுக்குத் தெரிந்திருந்தாலும், எவ்வாறாயினும் வென்றுவிடுவோம் என போரின் இறுதி நாள்களிலும் அவர்கள் கூறி வந்தமையானது அந்த அமைப்பின் நம்பகத் தன்மை பெரிதும் பாதிக்கப்படுவதற்கு வழி செய்ததோடு தமிழ்ச் சமூகத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த பிடி தளர்வதற்கும் காரணமாகியது.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையில், தமிழீழம் என்ற தனியான ஒரு நாடு உருவாக வேண்டும் என்ற கோட்பாட்டுக்குப் புலம்பெயர் வாழ் தமிழர்கள் தங்களது முழுமையான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கி வருகிறார்கள்.

இவ்வாறான சிந்தனையினைப் புலம் பெயர் தமிழர்கள் கொண்டிருப்பது அவர்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான இடைவெளியை இன்னமும் விசாலமாக்கியிருக்கிறது.



பல தசாப்தங்களாகத் தொடர்ந்த உள் நாட்டுப் போரினால் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் செழிப்பிழந்துவிட்டன.

சுதந்திரத் தனி நாட்டுக்கான முனைப்புக்களை மேற்கொள்வதற்குப் பதிலாகப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட நாட்டின் தமிழர் வாழும் பகுதிகளில் மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கரிசனையே புலம் பெயர் வாழ் தமிழர்கள் மத்தியில் தற்போது அதிகம் காணப்படுகிறது.

ஆயுதப் போராட்டத்திற்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணத்திற்குப் புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் வரவேற்பில்லை.

தமிழர்கள் தொடர்பான பொதுவானதோர் அரசியல் நிலைப்பாட்டை எடுப்பதற்குப் புலிகள் என்றொரு பக்கம் தற்போது இல்லாத நிலையில், இனப் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எட்டுவதற்கான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பிரேரணையை தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகள் முன்வைக்கிறார்கள்.

புலிகளமைப்பு சந்தித்த பெருந் தோல்வியின் தன்மையை ஏற்றுக்கொள்ள விரும்பாத - அதே நேரம் சுதந்திரத் தனி நாட்டுக்கான சாத்தியம் இன்னமும் இருக்கிறது என வாதிடும் - புலம் பெயர் வாழ் தமிழர்களை நிர்வகிக்கும் தலைவர்கள், இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்களை உண்மையான தமிழர்களது பிரதிநிதிகள் என்பதை ஏற்க மறுக்கிறார்கள்.

அரசுடன் இணைந்தியங்கும் துரோகிகள் என்றோ அல்லது மக்களது உரிமை தொடர்பில் துணிந்து குரல் கொடுக்க முடியாத பலமற்றவர்கள் என்றோ விவரிக்கிறார்கள்.

தமிழர்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதற்குப் புதிய வகையான போராட்டத்திற்கான தேவை எழுந்திருப்பதை புலம் பெயர் தமிழ்த் தலைமைகள் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்கின்றன.

இதற்கமைய, புலம் பெயர் நாடுகளில் புலிகள் அமைப்புக் கொண்டிருந்த கட்டமைப்புகளைப் போலல்லாமல், வெளிப்படைத் தன்மையுடனும் ஜனநாயகப் பண்புகளுடனும் செயற்படக்கூடிய அமைப்புக்கள் புலம் பெயர் நாடுகளில் தற்போது அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர்களுக்கான சுதந்திரத் தனி நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையை மேற்கு நாடுகள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்களுக்குப் போதிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதே அமைக்கப்பட்டிருக்கும் இந்த நிறுவனங்களின் பிரதான பணி.

நாடு கடந்த தமிழீழ அரசை அமைப்பதற்கான முனைப்பு, ஈழத் தமிழர்களுக்குத் தனி நாடு தான் ஒரே தீர்வு என்பதற்கான மக்கள் ஆதரவைக் கோரும் - பல்வேறு மேற்கு நாடுகளிலும் இடம் பெறும் - சுதந்திரமான கருத்துக் கணிப்பு, இலங்கையில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்குவதில்லை என்ற புறக்கணிப்பு மற்றும் இலங்கை அரசு புரிந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கான ஆதரவு போன்ற முனைப்புக்களையும் இந்த அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

ஆனால், போரின் இறுதி நாள்களில் புலிகள் புரிந்த குற்றங்கள், புலம் பெயர் நாடுகளில் இந்த புலிகளின் அமைப்புகள் முன்னர் புரிந்த குற்றங்கள் தொடர்பில் கருத்துகளை வெளியிடாமல் மௌனமாக இருக்கும் இந்த அமைப்புகள் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கான தங்களது பங்களிப்புத் தொடர்பிலும் கருத்துகள் எதனையும் வெளியிடாமல் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடு கடந்த தமிழீழ அரசு என்பதை தமிழ் மக்கள் வெளிப்படையாகக் கேட்காவிட்டாலும் அது வெளிநாட்டிலிருந்து நிர்வகிக்கப்படும் ஒரு அரசை ஒத்திருப்பதால், எல்லா நாடுகளும் அதனை சற்று தொலைவிலேயே வைத்திருக்கின்றன.

முனைப்புக்களிலும் அந்த அமைப்பு ஈடுபட்டிருந்தமையினால், புலிகள் தோற்கடிக்கப்பட்டமையினால் சந்தோசமடையும் சிறு கூட்டமும் புலம் பெயர் வாழ் தமிழர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது.

கடந்த தசாப்தங்களில் புலம் பெயர் நாடுகளில் புலிகள் ஏற்படுத்தியிருந்த நிதி திரட்டல் கட்டமைப்பு அந்த அமைப்பின் அழிவுடன் மோசமாக நலிவடைந்து விட்டாலும் தற்போதும் செயற்படு நிலையிலேயே இருக்கிறது.

எவ்வாறிருப்பினும், புலம்பெயர் நாடுகளைத் தளமாகக் கொண்டு புலிகள் தங்களை மீளவும் கட்டி எழுப்புவதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே காணப்படுகிறது.

இலங்கையிலிருந்து செயற்பட்ட புலிகளின் தலைவர்கள் இறந்துவிட்டார்கள் அல்லது கைது செய்யப்பட்டுவிட்டார்கள்.

அந்த அமைப்பின் வெளிநாட்டுக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு

## பகுதி - I

✱ 1-20 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து பெற்ற வருமதி உண்டியல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்டது. இதை பதிவு செய்வதற்கான மூல ஆவணம் எது?
   1) இயக்குநர் தீர்மானக்கடிதம் 2) கணக்காளர்தீர்க்ககடிதம்.
   3) வரவுத்தாள். 4) மறுப்பு அறிவிப்பு பத்திரம்.
   5) கைச்சாத்து.

02. உதிரிப்பாகங்கள் ஒரு வருடத்திற்கு மேலாக பாவனை செய்யக்கூடியதாக இருந்த போதும் இவைகள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே இதன் கிரயம் இலாபநட்டக் கணக்கில் முழுமையாக பதிவழிக்கப்பட்டுள்ளது. இதற்கான கணக்கீட்டினைப் பின்வரும் எந்த கணக்கீட்டு எண்ணக்கருவின் கீழ் கையாளப்படுகிறது?
   1) முன்னெச்சரிக்கை. 2) இணைதல். 3). கால அளவு.
   4) பொருண்மை. 5) அட்டுறு.

03. வியாபாரமொன்று ஒரு குறிப்பிட்ட வகையான இருப்புக்களின் 5,000 அலகுகளை ரூபா 250,000 இற்கு கொள்வனவு செய்து அதில் 4,000 அலகுகளை அலகு ஒன்று 70 ரூபா விலையில் விற்பனை செய்தது. இந்த விற்பனையில் இருந்தது அவர் உழைத்த மொத்த இலாபமும், அதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கருவும் யாது?
   1) மொத்த இலாபம் 30,000, அட்டுறு கோட்பாடு.
   2) மொத்த இலாபம் 30,000, இணைதல் கோட்பாடு.
   3) மொத்த இலாபம் 80,000, பாதுகாப்பு கோட்பாடு
   4) மொத்த இலாபம் 80,000, இணைதல் கோட்பாடு.
   5) மொத்த இலாபம் 80,000, தொடர்ந்தியங்கல் கோட்பாடு.

04. கொடுத்த காசிலும் பார்க்க செலவு அதிகமாக இருப்பதற்கு காரணம்,
   1) இறுதி அட்டுறு, ஆரம்ப அட்டுறு.
   2) இறுதி அட்டுறு, ஆரம்ப முற்பணம்.
   3) இறுதி முற்பணம், ஆரம்ப அட்டுறு.
   4) கொடுத்த காசு, ஆரம்ப அட்டுறு.
   5) கொடுத்த காசு, இறுதி அட்டுறு.

05. ABC கம்பனியின் கணக்கேடுகளில் காணப்படும் கீழ்வரும் நாட்குறிப்பு பதிவுக்கான மிகவும் சாத்தியமான கொடுக்கல்வாங்கல் யாது?

| | வரவு | செலவு |
|---|---|---|
| R.குமரன் க/கு | 350,000 | |
| தேய்மான ஏற்பாட்டு க/கு | 250,000 | |
| அலுவலக உபகரண க/கு | | 500,000 |
| இலாபநட்ட க/கு | | 100,000 |

   1) ABC கம்பனி அலுவலக உபகரணம் ஒன்றினை ரூபா 100,000 நட்டத்தில் விற்பனை செய்தது.
   2) ABC கம்பனியின் ரூபா 500,000 ஏட்டுப் பெறுமதியினைக் கொண்டிருந்த அலுவலக உபகரணம் ஒன்றினை ரூபா 350,000 இற்கு கொள்வனவு செய்தது.
   3) R.குமரன் கம்பனி ரூபா 500,000 கிரயமான அலுவலக உபகரணம் ஒன்றினை ரூபா 150,000 கழிவுடன் கொள்வனவு செய்தது.
   4) ABC கம்பனி ரூபா 250,000 ஏட்டுப் பெறுமதியுடைய அலுவலக உபகரணம் ஒன்றினை ரூபா 350,000 விலையில் கடனுக்கு விற்பனை செய்தது.
   5) ABC கம்பனி ரூபா 500,000 கிரயமான அலுவலக உபகரணத்தை ரூபா 350,000 இற்கு விற்பனை செய்தது.

06. நிதியறிக்கைகளைப் பற்றிக் கூறும் கூற்று எது?
   1) SLAS3 2) SLAS5 3) SLAS22 4) SLAS 23 5) SLAS21

07. அணிலும் பசிலும் பங்காளர்களாவர். அணில் தனது மூலதனத்தை விட ரூபா 300,000 ஐ பங்குடமைக்கு கடனாக வழங்கியிருந்தார். 2008 ஆம் வருடத்தில் இக்கடன் மீதான வட்டியை செலுத்துவதற்கு முன்பு இப் பங்குடமையினால் உழைக்கப்பட்ட தேறிய இலாபம் 85,000 ஆகும். இதற்கமைய பங்குடமையிலிருந்து 2008ஆம் வருடத்திற்கான அணிலின் வருமானம் எவ்வளவு?
   1) 42,500/= 2) 26,700/= 3) 35,000/= 4) 42,523/= 5) 342,523/=

08. வரையறுத்த மிதிலாக் கம்பனி VAT இற்காக பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் விற்பனைகள் மூலம் சேகரிக்கப்பட்ட ' பெறுமதி சேர்த்த வரி'யின் மொத்தத்தொகை 188,000/= ஆகும். கொள்வனவுக்காகச் செலுத்திய ' பெறுமதி சேர்த்த வரி' ரூபா 138,000 ஆகும். இதனால் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தேறிய பெறுமதி சேர்த்த வரி ரூபா 50,000 ஆகும். கம்பனியின் நோக்கில் ரூபா 188,000, ரூபா 138,000, ரூபா 50,000 என்பன முறையே,
   1) வருமானம், செலவு, பொறுப்பு.
   2) செலவு, வருமானம், பொறுப்பு.
   3) பெறுவனவு, கொடுப்பனவு, உரிமை.
   4) பொறுப்பு,சொத்து, பொறுப்பு.
   5) வருமானம், சொத்து, பொறுப்பு.

09. ஒரு நிறுவனத்தின் இலாப கணிப்பு மிகச் சரியாக இருப்பது எப்போதெனில், அதன் இலாபம்,
   1) ஒவ்வொரு காலத்திற்கும் தனித்தனியாகக் கணிக்கப்படும்போது.
   2) காசு அடிப்படையில் கணிக்கப்படும்போது.
   3) அட்டுறு அடிப்படையில் கணிக்கப்படும்போது.
   4) வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது.
   5) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள், நியமங்கள்ஆகியவற்றின் அடிப்படையில் கணிக்கப்படும்போது.

10. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் சமன் வியாபாரத்தின் 2009 மே மாதத்திற்கான சம்பளப்பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.
   ஊழியர்களின் மொத்த சம்பளங்கள் 100,000/=
   ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே வரி செலுத்துதலின் கீழ் கழிக்கப்பட்ட வரி 2,000/=
   ஊழியர்களால் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு 8,000/=
   தொழில் தருனரால் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு 12,000/=
   2009 மே மாதத்திற்கான இலாபநட்டக்கணக்கில் காணப்படும் ஊழியர்களுக்கு

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

செலுத்த வேண்டிய தேறிய சம்பளம், சம்பளம், ஊழியர் சேமலாபநிதியும் யாதெனில்,

| | செலுத்த வேண்டிய தேறிய சம்பளம் | சம்பளம் | ஊழியர் சேமலாப நிதி |
|---|---|---|---|
| 1) | 98,000/= | 120,000/= | 20,000/= |
| 2) | 88,000/= | 108,000/= | 22,000/= |
| 3) | 90,000/= | 100,000/= | 12,000/= |
| 4) | 92,000/= | 100,000/= | 8,000/= |
| 5) | 90,000/= | 112,000/= | 12,000/= |

11. நிறுவனமொன்றின் கணக்காண்டு காலத்தில் வங்கி மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 786,363.78 ஆக இருந்தது. அதேவேளையில் உரிமையாளர் குறித்த ஆண்டில் ரூபா 100,000 இனை மூலதனமாகக் கொண்டுவந்தார். அத்துடன் நிறுவனம் வங்கியிலிருந்து எடுத்திருந்த நீண்டகாலகடன் ரூபா 753,736.39 ஐக் கொடுப்பனவு செய்து அக்கடனை முடிவுறுத்தினார். அத்துடன் ரூபா 323468.47 இற்கு மோட்டார் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்திருந்தார். இதற்கு மேற்கொள்ளப்பட்ட பெறுமானத் தேய்வு 129,421 ரூபா ஆகும். குறித்த ஆண்டில் வங்கி மீதி நீங்கலாக தொழிற்படு மூலதன அதிகரிப்பு ரூபா 589,363.87 ஆக இருந்ததெனில் தொழில் முயற்சியினால் உழைத்த இலாபம்/நட்டத்தை காண்க.
   1) ரூபா 1,326,512.04 2) ரூபா 1,444,623.75
   3) ரூபா 1,484,246.08 4) ரூபா 1,523,148.05
   5) ரூபா 1,323,511.04

12. ராகவன் நிறுவனம் தொடர்பாக 2008.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| மூலப்பொருட்கள் இருப்பின் வீழ்ச்சி | 150,000 |
| மூலப்பொருட்கள் கொள்முதல் | 1,620,000 |
| மூலப்பொருட்கள் திருப்பி அனுப்புதல் | 80,000 |
| வெளிக்காவுதல் | 128,000 |
| உட்காவுதல் | 753,000 |
| நேர்கூலி | 743,000 |
| உற்பத்தி மேந்தலை | 429,200 |
| புத்துருவாகும் பொருள் அதிகரிப்பு | 58,800 |
| பெற்றக்கழிவு | 32,000 |

   உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் என்ன?
   1) 3,006,400/= 2) 2,696,000/= 3) 2,878,400/=
   4) 2,974,400/= 5) 2,996,000/=

13. முதன்வரையப்பட்ட நிதிக்கூற்றுக்கள் எவ்வளவு காலப்பகுதிக்குள் தயாரிக்கப்பட வேண்டும்?
   1) 3 மாத காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படல் வேண்டும்.
   2) 6 மாத காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படல் வேண்டும்.
   3) 30 நாட்களுக்குள் தயாரிக்கப்படல் வேண்டும்.
   4) ஒரு வருட காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படல் வேண்டும்.
   5) 5 மாத காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படல் வேண்டும்.

14. A.Aகம்பனி வெளிநாட்டிலிருந்து ஒரு வகையான பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்கிறது. இது தொடர்பான தகவல்கள்பின்வருமாறு:
   பொருளின் விலை 863.33 சதம்.
   இறக்குமதி செய்த பொருட்களின் எண்ணிக்கை 1000 அலகுகள்.

| | |
|---|---|
| இறக்குமதித் தீர்வை | 1037.89 சதம். |
| துறைமுக கட்டணம் | 1028.46 சதம். |
| கப்பல் கட்டணம் | 4121.12 சதம். |
| உட்சுமைக் கூலி | 732.39 சதம். |
| வியாபரக்கழிவு | 421.78 சதம். |
| அரச மானியம் | 2593.48 சதம். |

   பொருளின் கொள்வனவுக் கிரயத்தைக் காண்க.
   1) 868,077.76/= 2) 863,330/= 3) 867,234.10/=
   4) 870,249.36/= 5) 86,286.78/=

15. கீழே தரப்பட்டுள்ள செலவுத் தொடைகளிலிருந்து மூலதன செலவாக காணக்கூடிய செலவுகளின் தொடையினைத் தெரிக.
   1. பாவித்த பொறியொன்றினை கொள்வனவு செய்து உடன் மேற்கொள்ளப்பட்ட பாரிய திருத்தச் செலவு
   2. உற்பத்திப் பொறியினைப் பொருத்துவதில் ஈடுபட்ட ஊழியர்களுக்கான ஊதியம்.
   3. பாரிய கட்டடமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய திருத்தச் செலவு.
   4. நிர்மாணிக்கப்பட்ட பொறியின் மீதான பரீட்சார்த்த உற்பத்தி செலவு.
   5. கம்பனிக்கு ஒரு புதிய முகாமையாளரினை ஆட்சேர்ப்பதற்கான விளம்பரச் செலவு.
   1) 1, 2, 3. 2) 1,2,3,4 3) 2,3,4 4) 1,2,5 5) 1,2,4

16. எஸ். அன். வியாபாரத்தின் உரிமையாளரான வசந்தன் தனது சொந்தத் தேவைக்காக வியாபாரத்தின் இருப்புக்களிலிருந்து ரூபா 15,000 கிரயமான தொக்குகளை எடுப்பனவு செய்திருந்தார். ஆனால், இது தொடர்பான பதிவுகள் எதுவும் ஏடுகளில் இடம்பெற வில்லை. இந்த பதிவு செய்யாத நடவடிக்கையின் விளைவினால் ஏற்பட்ட தாக்கம்,
   1) மொத்த இலாபம் ரூபா 15,000 அதிகமாகக் காட்டப்படுவதுடன் இருப்புக்கள் ரூபா 15,000 இனால் குறைவாகக் காட்டப்படும்.
   2) மொத்த இலாபம் ரூபா 15,000 குறைவாகக் காட்டப்படுவதுடன் இருப்புக்கள் ரூபா 15,000 இனால் அதிகமாகக் காட்டப்படும்.
   3) எடுப்பனவு ரூபா 15,000 குறைவாகக் காட்டப்படுவதுடன் இருப்புக்கள் ரூபா 15,000 இனால் குறைவாகக் காட்டப்படும்.
   4) எடுப்பனவு ரூபா 15,000 குறைவாகக் காட்டப்படுவதுடன் மொத்த இலாபம் ரூபா 15,000 இனால் குறைவாகக் காட்டப்படும்.
   5) இறுதி இருப்புக்கள் ரூபா 15,000 அதிகமாகக் காட்டப்படுவதுடன் எடுப்பனவு ரூபா 15,000 இனால் குறைவாகக் காட்டப்படும்.

17. ரஞ்சித் வியாபார நிலையத்தின் காசு புத்தகத்திலுள்ள 2009.03.31 வங்கி நிரல் மீதி ரூபா 9,600 ஆகும். இத்திகதியில் வங்கிக்கூற்று மீதியும் காசு புத்தகவங்கி மீதியும் இணங்கவில்லை. இதற்கான காரணம்,
   ✱ காசோலைகள் வைப்புச் செய்யப்பட்டது வசூலிக்கப்படாமல் இருந்தது 7,000/=
   ✱ வங்கியில் நேரடியாக 2,000/= காசோலை வைப்புச் செய்யப்பட்டது.
   ✱ கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை 4,000/=
   ✱ காசு புத்தகத்தில் பதியப்படாத வங்கிக்கட்டணம் 100/=
   2009.03.31 இல் காசு புத்தகத்தின் சரியான மீதி,
   1) 8,500/= 2) 10,700/= 3) 11,500/= 4) 7,700/= 5) 5,500/=

தொடர்ச்சி மறுபக்கத்தில்.....

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி.

"2010 உயர்தர மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு - பகுதி I: தொடர்ச்சி......

18. கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் பட்டியலுடன் கடன்பட்டோர் பேரேட்டுக் கட்டுப்பாட்டு கணக்கை இணக்கியபோது பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப் பட்டன.
 * விற்பனை நாளேடு ரூபா 50,000 இனால் உயர்வாகக் காணப்பட்டது.
 * கடன்படுநர் ஒருவரின் தனிப்பட்ட கணக்கு ரூபா 4,000 இனால் குறைவாக காட்டப்பட்டது.

 இப்பிழைகளைத் திருத்துவதற்குக் கீழே தரப்பட்டுள்ள சீராக்கங்களில் எதனை மேற்கொள்ளுதல் வேண்டும்,

| | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு | கடன்படுனர் மீதிகளின் பட்டியல். |
|---|---|---|
| 1) | 5,000/= ஐ செலவு வைத்தல். | 4,000/= இனால் குறைவடைதல். |
| 2) | 5,000/= ஐ வரவு வைத்தல். | 4,000/= இனால் அதிகரித்தல். |
| 3) | 50,000/= ஐ செலவு வைத்தல் | 4,000/= இனால் அதிகரித்தல். |
| 4) | 5,000/= வரவு வைத்தல். | 4,000/= இனால் அதிகரித்தல். |
| 5) | 5,000/= ஐ செலவு வைத்தல். | மாற்றமில்லை |

19. இறைவன் வியாபாரிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் வருமாறு:

| | 2008.01.01 | 2008.12.31 |
|---|---|---|
| மொத்தச் சொத்துகள் | ? | ரூ.845,000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | ரூ.565,000 | ரூ.735,000 |

 2008 ஆம் ஆண்டு காலத்தில் உரிமையாளரின் வியாபாரத்தில் ஈடுபடுத்திய மேலதிக மூலதனம் 40,000/=, உரிமையாளரினால் வியாபாரத்திலிருந்து எடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்தச் செலவுகள் ரூபா 60,000. 2008 ஆம் ஆண்டு காலத்தில் வியாபாரத்தினால் உழைக்கப்பட்டிருந்த இலாபம் 75,000 எனின், 2008.01.01இல் உள்ள மொத்த சொத்துக்களின் பெறுமதி யாது?
 1) 620,000/= 2) 620,333/= 3) 621,000/= 4) 620,010/= 5) 621,010/=

20. வரையறுத்த அருணா நிறுவனத்தின் அறவிடமுடியாக்கடன், ஐயக்கடனிற்கான ஏற்பாடு ஆகியவற்றின் மீதிகள் வருமாறு:

| | 31.03.2006 | 31.03.2007 |
|---|---|---|
| ஐயக்கடனுக்கான ஏற்பாடு | 10,000/= | 12,000/= |
| அறவிடமுடியாக்கடன் | 20,000/= | 23,000/= |

 31.03.2007 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கணக்கில் அறவிட வேண்டிய அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் எனபவற்றின் பெறுமதி யாது?
 1) 5,000/= 2) 25,000/= 3) 30,000/= 4) 35,000/= 5) 40,000/=

21. தொடர் இருப்பெடுத்தலில் பயன்படும் ஆவணங்கள் 02 தருக.
 1) .............................. 2) ..............................

22. பங்காளர் ஒருவர் இளைப்பாறும் நேரத்தில் அவருக்கு கொடுக்க வேண்டிய தொகை கொடுக்கப்படாமல் இருப்பின், இத் தொகையை இவர் கடனாக விடுவதற்கு ஒப்புக்கொள்வாராயின் இதற்காக வேண்டப்படும் கணக்கீட்டுப் பதிவுகளைத் தருக.

 ..............................................................................

23. பெறுமானத் தேய்விடக்கூடிய சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுகளிலுள்ள பிரதான 2 வெளிப்படுத்தலைத் தருக.

 ..............................................................................

24. லால், நிஹால், சுனில் மூவரும் இலாபங்களையும் நட்டங்களையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளும் பங்காளர்களாவர். சுனில் வணிக நிறுவனத்திலிருந்து ஓய்வுபெற ஏனைய 2 பங்காளர்களும் இலாபங்களையும் நட்டங்களையும் சமமாகப் பகிர்ந்து வணிகத்தைத் தொடர்ந்து நடத்தினர். நிறுவனத்தின் ஏடுகளில் நன்மதிப்புக்கணக்கிலான மீதி ரூபா 42,000 ஆக இருந்தது. சுனில் ஓய்வுபெற்றதும் நிறுவனத்தின் நன்மதிப்பு 30,000 ஆக பெறுமானமிடப்பட்டது. பங்காளர்கள் அப்புதிய பெறுமானத்தை நிறுவனத்தின் ஏடுகளில் பேணிவரத் தீர்மானித்தனர். நன்மதிப்புக் கணக்கினை செம்மையாக்குவதற்கான பதிவுகளைத் தருக.

 ..............................................................................

25. இருப்புகளுக்கான கிரயத்தில் அடங்கும் கூறுகள் எவை?

 ..............................................................................

26. 2009.12.31 இல் இருந்தபடியான ரூபா. 5,000 ஆக அமைந்த அட்டுறு நானாவிதச் செலவுகள் கடன்கொடுத்தோர் கணக்கிற் பதியப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது. இத் தொகை 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டு நானாவிதச் செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. 2010.12.31 இல் இருந்தபடி அட்டுறு நானாவிதச் செலவுகளும் முன்னதாகப் பணம் செலுத்தப்பட்ட நானாவித செலவுகளும் முறையே 1,000/=, 2,500/= என்பவையாகும். இச் செம்மையாக்கங்களைப் பதிவதற்கான நாட்குறிப்பு பதிவினைத் தருக.

 ..............................................................................

27. கம்பனியின் சரக்கிருப்பு பின்வரும் உருப்படிகளைக் கொண்டுள்ளது.

| உருப்படி | தொகை | கிரயம் ரூபா | தேறிய, தேறக்கூடிய பெறுமதி |
|---|---|---|---|
| A | 40 | 300 | 250 |
| B | 100 | 400 | 450 |

 உருப்படி அடிப்படையில் கம்பனியின் சரக்கிருப்பின் பெறுமதி யாது?

 ..............................................................................

28. மாருதி வியாபார நிறுவனத்தின் கணக்காண்டு Dec 31 இல் முடிவடைகின்றது. 2009.04.15 ஆம் திகதியன்று இந் நிறுவனத்தில் நடந்த தீ விபத்துக் காரணமாக ரூபா 108,000 கிரயமான இருப்புக்கள் தவிர எஞ்சிய இருப்புகள் அழிவடைந்து விட்டன. இந் நிறுவன கணக்கேடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பெறவிட்டன.

| | ரூபா |
|---|---|
| கொள்வனவு | 600,000 |
| கொள்வனவுத் திரும்பல் | 20,000 |
| உள்வந்த வண்டி கூலி | 180,000 |
| விற்பனை | 954,000 |

 இந் நிறுவனம் விற்பனையில் 33 1/3% இலாபமாக சேர்க்கப்படுகின்றது. தீயழிவு நிகழ்ந்த தினத்தில் நிறுவனத்திலிருக்க வேண்டிய இருப்பு?

 ..............................................................................

29. பங்காளர் மூலதன கணக்கிற்கும் நடைமுறைக் கணக்கிற்கும் இடையிலான 2 வேறுபாடுகளைத் தருக.

 ..............................................................................

30. பங்குடமை ஒன்றின் கணக்காண்டு Dec 31இல் முடிவடைகின்றது. பங்காளரொருவர் July 31 ஆம் திகதி முதல் Dec 31ஆம் திகதிவரை ரூபா 30,000 படியாக ஒவ்வொரு மாதமும் இறுதித் திகதியில் பற்றினார். பற்று மீதான ஆண்டு வட்டி12% எனின், பற்றுக்கான வட்டி யாது?

 ..............................................................................

* 31-35 வரையான கூற்றுக்கள் 'சரியா' அல்லது 'பிழையா' எனக் கூறுக.

31. வருமானச் செலவுக்கணக்கு 'செலவு' மிகையினைக் கொண்டிருக்குமாயின், அம் மிகையின் அளவுக்கு குறித்த அமைப்பின் தேறிய சொத்து குறைவடைந்து விட்டதாகக் கருதப்படும். ( )

32. கடன்பட்டோர் மீதி ரூபா 75,000 இல் ஐயக்கடனுக்கான ஏற்பாடு செய்த 15% கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவில் பதியப்பட்டது. ( )

33. தொழில் முயற்சி ஒன்றின் குறித்த கால இடைவெளியில் தேறிய சொத்துக்களில்/ உரிமையாண்மையில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு இலாப உழைப்பு மட்டுமே காரணமாகும். ( )

34. வியாபார இலாபநட்ட கணக்குகளை தயாரிக்கும்போது வருமான கணக்கும், சொத்துக்கணக்கும் மூடப்படும். ( )

35. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அழிவடையும்போது அல்லது களவாடும் போது செலவாகக் கருதப்படும். ( )

* 36-40 வரையான கூற்றுக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இடைவெளியை நிரப்புக.

36. நீண்டகால சொத்துக்களின் கிரயத்தை அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் ஒழுங்கு முறையாகப் பகிர்வு செய்து இப்பகிர்வு தொகையை அவ்வருடத்திற்கு செலவாகக் காட்டுதல் ........................ எனப்படும்.

37. உரிமையாளரின் எடுப்பனவினை கொள்வனவு கணக்கிலிருந்து கழித்துக் காட்டப் படுவதற்கு ........................ காரணமாகிறது.

38. இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 05 இன் படி சிபார்சின் மிகச் சிறந்த முறையின் கீழ் இருப்புக்களின் கிரயமானது .................... அல்லது .................... என்ற கிரய சமன்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

39. உழைக்கப்படாத வருமானத்திற்காக பெற்ற காசானது ஐந்தொகையில் ............ ஆகக் காட்டப்படும்.

40. கடன் விற்பனையின்போது எழும் அறவிடமுடியாக்கடனை பதிவதற்கான மூல ஆவணம் ........................ ஆகும்.

## கணக்கீடு பகுதி - II

01. அமலன்,கமலன்,லவணன் இலாபநட்டங்களை முறையே 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து ஒரு பங்குடமையில் இருந்தனர். அமலன் மாதாந்தம் ரூபா 10, 000 சம்பளம் பெற்றுள்ளார். எல்லாப் பங்காளரும் வருடாந்தம் 10% வட்டி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
 31.03.2007 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விவரம் | வரவு(000') | செலவு(000') |
|---|---|---|
| 01.04.2006 இல் மூலதனக் கணக்கு மீதிகள் | | |
| அமலன் | | 5,000 |
| கமலன் | | 4,000 |
| லவணன் | | 2,000 |
| 01.04.2006 இல் நடைமுறைக்கணக்கு மீதிகள் | | |
| அமலன் | | 200 |
| கமலன் | | 100 |
| லவணன் | 50 | |
| 01.04.2006 இல் சரக்கிருப்பு- கிரயத்தில் | 990 | |
| கொள்வனவுகள் | 4,600 | |
| நிலமும் கட்டடமும் - கிரயத்தில் | 7,500 | |
| இயந்திரங்கள்- கிரயத்தில் | 2,500 | |
| மோட்டார் வாகனங்கள்- கிரயத்தில் | 2,700 | |
| முதலீடு | 105 | |
| 01.04.2006 இல் பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| நிலமும் கட்டடமும் | | 400 |
| இயந்திரங்கள் | | 600 |
| மோட்டார் வாகனங்கள் | | 850 |
| விற்பனைகள் | | 13,300 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 150 | |
| வாடகை | 440 | |
| விற்பனைத் திருப்பம் | 500 | |
| கொடுத்த, பெற்ற கழிவுகள் | 160 | |
| விற்பனைச் செலவுகள் | 485 | |
| நிர்வாகச் செலவுகள் | 3,495 | |
| கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் | 4,200 | 1,415 |
| அறவிடமுடியாக் கடன்கள் | 500 | |
| 01.04.2006 இல் ஐயக்கடன் ஏற்பாடு | | 420 |
| உட்காவுகைக் கூலி | 220 | |
| நன்மதிப்பு | 350 | |
| கடன்கணக்கு -அமலன் | | 300 |
| பற்றுக்கள் - அமலன் | 125 | |
| | 260 | |
| | | 685 |
| | 29,330 | 29,330 |

பின்வரும் மேலதிக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

1) 31 மார்ச் 2007 இல் காணப்பட்ட சரக்கிருப்பு கிரயம் ரூபா 860,000 ஆகும். இச் சரக்குகளை ரூபா 150,000 கிரயம் கொண்ட பழுதடைந்த சரக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும் இச்சரக்குகளை ரூபா 90,000 அற்கு திறந்த சந்தையில் விற்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
 வியாபார நிறுவனத்தில் 31 மார்ச் 2007 இல் இருந்த சரக்குகள் நேரடியாக கணக்கெடுக்கப்பட்டு, கிரயத்தில் பெறுமதி இடப்பட்டுள்ளன.விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பட்ட ஆனால் ரூபா 165,000 விற்பனை விலையிலான சரக்குகள் ஐந்தொகை தினத்தில் விநியோகஸ்தர்களிடம் இருந்தன. இச்சரக்குகளின் திருப்பியனுப்பும் திகதிகள் ஐந்தொகை தினத்தில் முடிவுறாதவைகளாக காணப்பட்டது. இச்சரக்குகள் கிரயத்துடன் 10% இலாபம் வைத்து விலையிடப்பட்டுள்ளன.
2) நிலத்தின் கிரயம் ரூபா. 5,500,000 ஆகும். வருடாந்த பெறுமானத்தேய்வு வீதங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கட்டடங்கள் கிரயத்தில் | 5% |
| இயந்திரங்கள் கிரயத்தில் | 10% |
| மோட்டார் வாகனங்கள் கிரயத்தில் | 20% |

3) வாடகை கணக்கு 11 மாதங்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது.
4) மேலும் ரூபா 200,000 அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்படல் வேண்டும். மேலும் ஐயக்கடனுக்கான ஏற்பாடாக கடன்பட்டோர் கணக்கின் மிகுதியாக உள்ள மீதியின் 10% இற்கு சீராக்கம் செய்தல் வேண்டும்.
5) அமலுனுக்கு செலுத்திய சம்பளங்கள் ரூபா 100,000 ஆனது நிர்வாகச்செலவுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6) அமலன் 31 மார்ச் 2007 இல் இளைபாறத் தீர்மானித்துள்ளார். இந் நோக்கத்திற்காகக் பங்காளர்கள் சொத்துக்கள், பொறுப்புக்களைப் பின்வருமாறு மீள் மதிப்பிட சம்மதித்துள்ளனர்.
 1. நிலமும் கட்டடமும் ரூபா 7,500,000 பெறுமதியில் மீள்மதிப்பிடல் 200,000 பெறுமதியில் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வாகனத்தின் கிரயம் ரூபா. 300,000 ஆக இருப்பதுடன் கையேற்ற தினத்தில் அதன் புத்தகப் பெறுமதி ரூபா 175,000 ஆகும்.

-தொடர்ச்சி நாளை வெளிவரும்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்குப் பின்னரான....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புற நிலையில், புலிகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் புலம் பெயர் வாழ் தமிழர்களது அரசியல் செயற்பாடுகள் எவ்வாறிருக்கின்றன என்பதையே பெரும்பாலான மேற்கு நாடுகள் தொடர்ந்தும் அவதானிக்கும்.

புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் முன்னர் குறை கூறி வந்த, புலம் பெயர் நாடுகளில் வசிக்கும் கல்விமான்களுடன் மாத்திரமே தொடர்புகளைப் பேணுவதற்கு அந்த நாடுகளின் அதிகாரிகள் விரும்பினாலும், புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற, பிரிவினைவாதத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் அமைப்புகளுடன் விரும்பியோ, விரும்பாமலோ தொடர்புகளைப் பேணும் நிலைக்கு மேற்கு அரசுகள் தள்ளப்பட்டிருக்கின்றன.

ஆனால், தமிழர்களுக்குத் தனியான தாயகம் என்ற புலிகள் கொண்டிருந்த கோட்பாட்டைப் புலம் பெயர் வாழ் தமிழர்களும் கொண்டிருக்கும் வரை, இலங்கையில் நீதியும் நீடித்து நிலைக்கக் கூடியதுமான அமைதி ஏற்படும் விடயத்தில் புலம் பெயர் வாழ் தமிழர்களால் காத்திரமான பங்கு எதனையும் வகிக்க முடியாது போகும்.

போரின் இறுதி மாதங்களில் மிகப் பெரும் அழிவுகள் ஏற்பட்ட துன்பகரமான நிகழ்வைக் கண்ணுற்ற அதே நேரம் இது விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய அரசுகளும் வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தமையை அவதானித்தமையாலும் பெரும்பாலான தமிழர்கள், குறிப்பாக மேற்கு நாடுகளிலேயே பிறந்து அங்கேயே கல்விகற்கும் இளந்தலைமுறையினர் பெரும் ஏமாற்றமடைந்து காணப்படுகிறார்கள்.

புதிய வழியிலமைந்த போராட்ட முனைப்புக்களுக்கு இது வழிகோலி விடுமோ என்ற அச்சம் தொடர்புடைய அரசுகள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது.

போர் உக்கிரமடைந்து காணப்பட்ட இறுதி மாதங்களிலும் போர் முடிவடைந்த பின்னரான நாள்களிலும் எதிர்ப்புப் போராட் டங்களில் ஈடுபட்ட தமிழர்கள் தங் களைத் தாங்களே மாய்த்துக் கொண்ட தோடு, இலங்கைத் தூதரகங்கள் மீதான தாக்குதல்களையும் முடுக் கிவிட்டார்கள்.

வெளிநாடுகளில் வசிக்கும் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களிடையேயான பதற்றம் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்பட்டது.

இதுபோன்ற நிகழ்வுகள் தற்போது இடம்பெறுவது பெரிதும் குறைந்திருந்தாலும் மேற்கு நாடுகளில் வசிக்கும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரவாதம் முளைவிடும் சாத்தியத்தை நாம் முற்றாகப் புறந்தள்ளிவிடமுடியாது.

பிரிந்துசெல்வதே ஒரே தீர்வாக அமையும் என்ற தங்களது நிலைப் பாட்டைப் புலம்பெயர்வாழ் தமிழர்கள் வெளிப்படுத்துவது அவர்களுக்குள்ள ஜனநாயக உரிமையே.

ஆனால் தமிழீழம் என்ற கோட்பாட்டுக்கு உள்நாட்டு ஆதரவோ அல்லது சர்வதேச ஆதரவோ இருப்பதாகத் தெரியவில்லை.

வன்முறைசார் பாதையையே புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்தும் விரும்புகிறார்கள் என்ற எண்ணம் இலங்கை அரச அதிகாரிகள் மத்தியில் இருக்கும் அதேநேரம், தனிநாடுதான் ஒரே தீர்வு எனப் புலம்பெயர்வாழ் தமிழர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருவதானது இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பவற்றைத் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருப்பதற்குத் துணைபோவதாகவே அமையும்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் அமைதி நீடித்து நிலைப்பதை உறுதிப்படுத்தவேண்டுமெனில் தமிழர்களின் துன்ப துயரங்களைப் போக்கும்வகையிலான நடவடிக்கையை இலங்கை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

தமிழர்கள் ஓரங்கட்டப்படுவது மற்றும் அவர்களுக்கான பாதுகாப்பின்மை ஆகிய இன முரண்பாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகாணவேண்டும்.

நாட்டின் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ ஜனவரி 2010 முதல் விடுத்துவரும் அறிக்கைகளைக் கூர்ந்து அவதானித்தால், அரசியல் மற்றும் அரசமைப்புச் சீர்திருந்தங்களைத் தனது அடுத்து பதவிக்காலத்திற்குள் அவர் மேற்கொள்வதற்கான சாத்தியம் அரிதாகவே காணப்படுகிறது.

தமிழ் மற்றும் ஏனைய சிறுபான்மையினருக்கு ஆட்சியதிகாரத்தில் முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்ற மனநிலை மாற்றம் அதிகாரத்திலுள்ளவர்கள் மத்தியில் தாமதமாகவும் அரைகுறை மனதுடனுமே ஏற்படும்.

இதுபோன்ற மனநிலை மாற்றத்திற்கு இலங்கையின் அரசியல் அதிகாரச் சமநிலையில் மாற்றம் ஏற்படுவதோடு சர்வதேசத்தின் அவதானத்துடன்கூடிய, காத்திரமான அழுத்தங்களும் பிரயோகிக்கப் படவேண்டியமை அவசியமானது.

இலங்கையில் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்கள் கிடைப்பதற்கான உதவிகளை வழங்கும் விடயத்தில் இந்தியா, ஜப்பான், மேற்கு நாடுகள் மற்றும் பல்தேசிய நிறுவனங்களால் காத்திரமான உதவிகளை வழங்க முடியும்.

அதேநேரம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள் முளைவிட்டமைக்கான அடிப்படைக் காரணங்கள் எவையோ அவற்றை இலங்கை அரசு கண்டறிந்து தீர்ப்பதற்குப் போதுமான அழுத்தங்களைக் கொழும்பின் மீது மேற்குறித்த தரப்புகளால் பிரயோகிக்க முடியும்.

நீண்ட நெடுங்காலமாகவே தாம் பெரும்பான்மையாக விளங்கும் பிராந்தியம் எதுவோ அதன் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் அர்த்தமுள்ள பங்கை வகிப்பதற்கும், எந்தவிதமான கட்டுப்பாடுகளோ அழுத்தங்களோ இன்றி தங்களது கருத்தை வெளிப்படுத்துவதற்கும் ஏற்ற அரசியல் சூழலமைவு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு முதலில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

இதுபோன்ற நிலைமை ஏற்படுத் தப்படுவதற்கு முன்னர், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கொழும்புதான் நினைத்தவாறு அபிவிருத்திப்பணியை மேற்கொள்வதற்கு அனுமதிக்கக்கூடாது.

போர் உக்கிரமடைந்திருந்த இறுதி மாதங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளப்படுவதற்கு உதவி வழங்கும் நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டும்.

இலங்கையின் அனைத்து இனங்களினதும் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாகவும் நாட்டின் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் முனைப்பாகவும் இடம்பெற்றுவரும் அரசியல் அதிகாரத் துஷ்பிரயோகத்தையும் மனித உரிமை மீறல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடனேயே இலங்கைக்கான உதவிகள் வழங்கப்படவேண்டும்.


## கண்ணீர் அஞ்சலி

தாவடியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டன் கிறவுளி மாநகரில் சொர்ண காமாட்சி அம்மன் ஆலய பிரதம குருவும் முன்னாள் தாவடி தெற்கு திருவருள் மிகு ஸ்ரீ நெல்லுருபதி விநாயகர் தேவஸ்தான பூசகரும் தற்போது பிரதம குருக் களுமாகிய **வேதாகம சங்கிரகர், முத்ராகலா வித்தகர்**

**பிரம்ம ஸ்ரீ**

**சுவாமி ரத்னசர்மா**

**சுந்தரேசக் குருக்கள்**



அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**விநாயகரின் பிள்ளை**
**வெங்கடேசனின் பக்தன்**
**காமாட்சியின் செல்ல மகன்**
**மொத்தத்தில் வேதாகமத்தில் வித்தகன்**

தாவடி தெற்கு ஸ்ரீ நெல்லுரு பதி
விநாயகர் தேவஸ்தான நிர்வாக சபை
தாவடி வாழ் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**16.01.1989**

★ஜே.வி.பியுடன் பேச்சு வார்த்தை நடத்தும் முயற்சியில் ஜனாதிபதி பிரேமதாஸ அக்கறை காட்டிவருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

★1987 ஒக்ரோபர் இராணுவ நடவடிக்கையின்போது யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் மரணமான ஊழியர்களின் குடும்பங்களுக்கான நட்டஈடு இன்று வழங்கப்படுமென வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சுச் செயலாளர் தெரிவிப்பு.

**17.01.1989**

★யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய விருத்திக்கான பல திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க சர்வதேச நிறுவனங்கள் முன் வருகை.

★காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை, லங்கா சீமெந்து நிறுவனம் ஆகியவை அடுத்த வாரம் முதல் முழு அளவில் இயங்கும் எனத் தெரிவிப்பு.

**18.01.1989**

★தென்னிலங்கையில் அஹூன்கல என்ற இடத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் பாதுகாப்பற்ற கடவையில் 'எக்ஸ்பிரஸ் ரயில்' ஒன்று டன் மோதி விபத் துக்கு உள்ளானதில் 52 பேர் உயிரிழப்பு. நூற்றுக்கும் அதிகமானோர் காயம்.

★மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட வடபகுதி மக்களின் அடகு நகைகள் மீண்டும் அடுத்த வாரம் முதல் மீளளிக்கப்படுமெனத் தெரிவிப்பு.

★தேர்தலில் வாக்களித்தமைக்காக ஜே.வி.பியிடமிருந்து மன்னிப்புக் கோருகிறோம் என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளுடன் ஆயிரம் பேர் வரை அனுராதபுரத்தில் ஊர்வலம்.

**20.01.1989**

★யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருந் தெருக்களை நவீனமுறையில் நிர்மாணிக்கும் பணிக்கென தனியார் நிறுவனமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிப்பு.

★மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்துக்கு நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் செல்லுபடியாகாது என அறிவிக்கும்படி கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்.

★ஐந்து இராணுவ கொமாண்டோக்கள் தென்பகுதி தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிப்பு.

★தென்பகுதியில் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் மூவர் இனந்தெரியாதவர்களால் சிரச்சேதம் செய்யப்பட்டதாக தெரிவிப்பு.

**22.01.1989**

★தமிழ்ப் பகுதியில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட புதிய நியமனங்கள், பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் என்பன இரத்துச் செய்யப்படக்கூடுமென அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிப்பு.

★நாட்டின் வளர்ச்சிக்காகத் தாம் எவருடனும் சரி சேர்ந்து பணி புரியத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

**23.01.1989**

★யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் காலமானார்.

★தமிழக சட்டசபைத் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டபடி திராவிட முன்னேற்றக் கழகம் பெரு வெற்றி.

★ யாழ். மாநகரம் திட்டமிட்டபடி மீண்டும் கட்டியெழுப்பப்படும் என வடக்கு- கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு.

**24.01.1989**

★வடபகுதி மக்களுக்கு வீடமைப்புக் கடன்களை மீண்டும் வழங்குவது குறித்து இலங்கை வங்கி ஆராய்ந்து வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிப்பு.

★இலங்கை தமிழர் பிரச்சினையில் தி.மு.க இதுவரை கடைப் பிடித்து வந்த கொள்கையில் மாற்றம் இருக்காது. இலங்கைத் தமிழரின் உரிமைகளுக்காக குரல் கொடுப்போம் எனத் தமிழக முதலமைச் சராகப் பதவியேற்கவுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு.

**25.01.1989**

★வவுனியாவிலும் திருகோணமலையிலும் புதிதாக இரண்டு தொழில்நுட்பக் கல்லூரிகள் அமைக்க அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

★வடமாகாணத்தில் வீதி அமைப்பு வேலைகளை மேற்கொள்ளுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் நிதி ஒதுக்கீடு.

**26.01.1989**

★வடமாகாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சுயவேலை வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க மக்கள் வங்கி முடிவு.

★வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு பொதுச்சேவை ஆணைக்குழு வொன்று மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்னவால் நியமிப்பு.

**27.01.1989**

★இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் பிற இயக்கங்களுடன் இந்திய அரசு பேச்சு நடத்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்ற கருணாநிதி தெரிவிப்பு.

★தென்மாகாணத்தில் அரசியல் கொலைகளும் வங்கிக் கொள்ளைகளும் கடந்த சில தினங்களாக அதிகரித் திருப்பதைத் தொடர்ந்து அரச படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

**28.01.1989**

★1983 வன்செயலால் நாடு முழுவதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி உதவிகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி பிரேமதாஸ வங்கிகளுக்குப் பணிப்பு.

★தமக்கு உண்டாக்கப்பட்டிருக்கும் உடல், உள உழைச்சல்கள் ஒழிக்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென வடபகுதி இளைஞர்கள் விரும்புகின்றனர் என ஜனாதிபதி பிரேமதாஸவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட் டுள்ளது.

**29.01.1989**

★ஜனாதிபதி பிரேமதாஸவின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர் களில் ஐந்தில் ஒரு பகுதியினருக்கே இவ் வருடத்தில் உதவி வழங்கப்படுமெனத் தெரிவிப்பு.

★நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச சுயேச்சைக் குழுவொன்றினை அழைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படுவதாக தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு.

# வீதிகளிலும், சந்திகளிலும் வாகனங்களை நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறு செய்ய வேண்டாம்

## வர்த்தகர்கள், சாரதிகள் ஆகியோரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 01

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள வீதிகளிலும், சந்திகளிலும் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதித்துள்ள பிரதேச சபைச் செயலாளர்; வீதிகளை ஆக்கிரமிக்கும் வகையில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக பொருள்களை காட்சிப்படுத்த வேண்டாமெனவும் வர்த்தகர்களைக் கோரியுள்ளார்.

இதுபற்றி பிரதேசசபைச் செலாளர் திருமதி பு.சிவலிங்கம் கூறுகையில்-

குடாநாட்டிற்கும் தென்னிலங்கைக்குமான ஏ-9 தரைப்பாதை போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டதாலும், வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்கள் குடாநாட்டில் மீளக் குடியேற் றப்பட்டதைத் தொடர்ந்தும், உல்லாசப் பயணிகளின் வருகையாலும் பிரதான வீதிகளில் வாகனப் போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பிரதான வீதியோரங்கள் சந்திகள், சந்தைகளுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்தி வைப்பதாலும், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வீதிகளை ஆக்கிரமிக்கும் வகையில் பொருள்களை காட்சிப் படுத்தி வைப்பதனாலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன், விபத்துக்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டாகின்றன.

எனவே மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள வீதிகள், சந்திகள், சந்தைகள் ஆகிய இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் வீதிகளை ஆக்கிரமிக்கும் வகையில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக பொருள்களைக் காட்சிப்படுத்துவதை தவிர்த்து சபைக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (50-ரி-115)

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு சுயாதீன சர்வதேச நிதியம்

இலங்கையின் வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்காக சுயாதீன சர்வதேச நிதிய மொன்று உருவாக்கப்பட்டுள்ளது என பிரிட்டனின் 'கொன்சவேட்டிவ்' கட்சி தெரிவித்துள்ளது.

லண்டனில் நடைபெறும் சர்வதேச தமிழர் பேரவையின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ள கட்சியின் நிழல் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

'கொன்சவேட்டிவ்' கட்சியின் நிழல் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கின் உட்கட்டமைப்புப் புனர்நிர்மாணத்திற்காக சுயாதீன சர்வதேச நிதியமொன்றை உருவாக்கியுள்ளார்.

அவரது இந்தத் திட்டத்திற்கு இலங்கையிலும், இங்கும்(லண்டனிலும்) பரந்துபட்ட ஆதரவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்தாகியுள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் தமது நாட்டில் அதிகளவு தேவைகளுடன் உள்ளவர்களுக்கு உதவுவதற்கான சந்தர்ப்பத்தை இது வழங்கும். - என் றார்.(சி)

# இணையத்தளங்களை தடைசெய்ய நிதியுதவியா? உலக வங்கி மறுப்பு

கொழும்பு, மார்ச் 01

இலங்கைத் தொலைத் தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கட்டமைப்பில் அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கி வழங்கியுள்ள நிதியைப் பயன்படுத்தி இணையத்தளங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என உலக வங்கி, இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியுள்ளது.

உலக வங்கி இணையத்தளங்களை தடைசெய்யும் பணிக்காக நிதியுதவியை அளிக்கவில்லை என அந்த வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புகளை ஒழுங்குப் படுத்தும் ஆணைக்குழு தனது கட்டமைப்பில் அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட நிதியுதவியை வேறு பணிகளுக்கு பயன்படுத்த முடியாது. சீன நிபுணர்களின் உதவியுடன் இலங்கை இணையத்தளங்களை பார்வையிடுவதைத் தடுப்பதற்காக கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது என வெளியாகி செய்திகளையடுத்து உலக வங்கி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

# பொன்சேகாவின் உதவியாளர்கள் எட்டுப்பேர் வியாழனன்று விடுதலை

கொழும்பு, மார்ச் 01

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகாவின் உதவியாளர்கள் 8 பேரை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வியாழனன்று விடுதலை செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த சில நாள்களின் பின்னர் குற்றப் புலனாய்வு பிரிவினால் பொன்சேகாவின் ரீட் அவனியூ அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவத்தினர் உட்பட எட்டு பேரையே நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று குற்றம்சாட்டியே குற்ற புலனாய்வுப் பிரிவினர் இவர்களைக் கைது செய்திருந்தனர்.

எனினும் குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாத நிலையில் இவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

இது இவ்வாறிருக்க, கொழும்பு உயர் நீதிமன்ற கட்டடத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர் என கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக போதிய ஆதாரங்களை முன்வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு எதிராக போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாமல் போனால் அவர்களை விடுவிக்க வேண்டுமென நீதிவான் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவேளை கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பாகவே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

(அ-சி)

# இந்தோனேஷிய அகதி முகாமில் இலங்கையர்கள் உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 01

இந்தோனேஷிய அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் சிலர், முறையான மீள்குடியேற்றக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் ஓசியானிக் வைக்கிங் கப்பலிலிருந்து வெளியேறியவர்களுக்கு பல்வேறு நாடுகளில் குடியேற அனுமதி வழங்கப்பட்டதைப் போல, தமக்கும் தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியாவின் டன்ஜுன் பினாங் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 இலங்கையர்களும், 8 ஆப்கானிஸ்தானியர்களும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கிடையில் குறித்த 10 இலங்கையர்களும் நேர்மையான அகதிகள் என உறுதி செய்யப்பட்டதன் பின்னரும், சுமார் ஒரு வருட காலமாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## பெப்ரவரி 28 முதல் மார்ச் 06 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். நீண்ட நாட்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சனி, குரு, சூரியன், புதன், சுக்கிரன், கேது ஆகிய கிரகங்கள் சாதகமாக இருப்பதால், எந்த வேலையையும் தங்கு தடையின்றிச் சுலபமாக முடித்துக் கொள்வீர்கள். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்ளலாம். அதேநேரத்தில், வரும் பணத்தை சில கடன் பிரச்னைகளை தீர்க்கவோ அல்லது மருத்துவ ரீதியான விஷயங்களுக்கோ பயன்படுத்தலாம். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்களும் முடிவுக்கு வரும். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். உறவுப் பெண்கள், சகோதரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். உத்தியோகஸ்தர்கள் உயர்வு காண்பர். அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். நெடுநாள்களாக செல்ல நினைத்த இடங்களுக்கு செல்வதன் மூலம் முக்கிய வேலைகள் முடிவுக்கு வரலாம்.

### இடபம்

இந்தவாரம் ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நீங்கள் கேட்காமலேயே உங்களுக்குச் சிலர் உதவி செய்யலாம். பெண்கள் வகையில் சந்தோஷ மான அனுபவங்களைப் பெறலாம். புதியவர்களின் நட்பு கிடைக்கும். குழப்பங்கள், தடுமாற்றங்கள், மறதியால் அவதி போன்ற பிரச்சினைகளை சந்திக்கலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். குருவும், சனியும் பாதகமான நிலையில் இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விஷயங்களில் அக்கறையோடும், பொறுப்போடும் செயற்பட வேண்டும். அலட்சியமாகச் செயற்பட்டால், அவதி, பொல்லாப்பிற்கு ஆளாகலாம். திடீர் பயணங்களால் பணம் கரைவதோடு, பணிபுரிவோர் இடமாற்றங்களாலும், அரசியல் தொடர்புடையவர்கள் பொறுப்பு மாற்றங்களாலும் அவதிப்படலாம். எதையும் நினைத்த வேகத்திற்கு செய்ய முடியாமல் போகலாம். தன ஸ்தானாதிபதி மற்றும் ஐந்தாம் வீட்டிற்கு அதிபதியான புதன், சாதகமான நிலையில் சஞ்சரிப்பதால் உறவினர்களுடன் ஏற்பட்ட பகை விலகிப் பாசம் கூடும். மாமன், மைத்துனர்கள் உங்களின் முயற்சிகளுக்கு துணையாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். சூரியன் சாதகமான நிலையில் இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், இளைய உடன் பிறப்புக்களால் தொல்லை உண்டு. பணவரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சில காரியங்களில் தீவிரமாக இறங்கி விட்டு, பின்னர் ஏன் இதைச் செய்தோம் என, வருத்தம் அடைவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆளாகலாம்.மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். நான்காம் இடத்தில் சனி இருப்பதால், வீண் செலவுகள், விரயச் செலவுகள் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய குறைவுகளாலும் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். எந்த விஷயத்திலும் ஆத்திரம், அவசரம் காட்டாமல் நிதானமாக யோசித்து செயல்படுவது நன்மை தரும். சிலர் உங்களை நம்பிப் பணப் பொறுப்புகளை ஒப்படைப்பர். மனைவி, குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோ ஷம் அடைவீர்கள். சகோதரிகள் உதவிகரமாக இருப்பர். சிலர், பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். தந்தை வழி உறவுகளால் பிரச்சினைகள் உருவாகலாம். அரசியல்வாதிகள் குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். அரசு காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும்.

### கடகம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்க போட்ட திட்டம் நிறைவேறும். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். சூரியன் எட்டாம் இடத்தில் இருப்பதால், தகப்பனார், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விஷயங்களில் கவனம் அவசியம். பணிபுரிவோர் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். புதன், சுக்கிரன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், உறவுப் பெண்கள், சகோதரிகள், தாயார் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். சில விஷயங்களில் எதிர் பாராத மாற்றங்களைச் சந்திக்கலாம். உங்களை கண்டு கொள்ளாமல் இருந்த உறவினர்கள், இப்போது உறவு நாடி வரலாம். பணத் தேவைகளை எந்த வகையிலாவது பூர்த்தி செய்து கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். ராகு சாதகமாக இருப்பதால், மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். போட்டி, எதிர்ப்புகள் இல்லாமல் எந்த வேலையையும் முடிப்பீர்கள். நீண்ட தூரம் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். செவ்வாய் பாதகமான நிலையில் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் வகையில் தொல்லையுண்டு.

### சிங்கம்

இந்த வாரம் காரிய வெற்றி உண்டு. குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் அனைத் தையும் நீங்களே செய்வீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். பெண்களால் உதவி கிடைக்கும். பொழுதுபோக்கு விஷயங்களில் நாட்டம் செல்லும். ராசியை குரு பார்ப்பதால் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மனக்கவலைகள் நீங்கி, எப்போதும் தெம்பு, உற்சாகமாக செயற்படுவீர்கள். அதேநேரத்தில், ஏழாம் இடத்தில், சூரியன், சுக்கிரன், புதன் இருப்பதால், தம்பதியர் இடையே அடிக்கடி கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டு, அதனால், மனஸ்தாபம் உருவாகலாம். பெண்கள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். நண்பர்கள், உறவினர்கள், மாமன், மைத்துனர்கள் உதவிகள் கிடைப்பதில் சிரமம், இழுபறி நீடிக்கலாம்.செவ்வாய் சாதகமற்ற நிலையில் இருப்பதால், உடன் பிறப்புக்கள், பங்காளிகள், நிலம், பூமி தொடர்பான விஷயங்களிலும் கவனம் அவசியம். தாயார் வழியிலும் அன் புத் தொல்லை உண்டாகலாம். அலைச்சல் உண்டு.

### கன்னி

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். சில விஷயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். நீண்ட நாட் களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். ஜென்மத்தில் சனியும், சுகஸ்தான அதிபதியான குரு ஆறாம் இடத்திலும் இருப்பதால், எந்த வேலையும் சுலபத்தில் முடியாமல் இழுத்தடிக் கலாம். தொழில் ரீதியான விஷயங் களால் அடிக்கடி மனம் நோகலாம். பெரிய மனிதர்கள் வழியில் உதவிகள் கிடைப்பதும் தள்ளிப் போகலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்ற முடியாமல் சாக்குப்போக்கு சொல்லிச் சமாளிப்பீர்கள். சுபபோகங்களுக்காக செலவிடுவதும், மருத்துவ செலவுகளும் அதிகரிக்கும். ஆறாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், கணவன் மனைவியர் கடும் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசி தீர்த்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். தொழில் விஸ்தரிப்புக்காகவோ, மற்ற விஷயங்களுக்காகவோ சிலர் கடன் வாங்க நேரிடலாம். செவ்வாய் லாபஸ்தானத்தில் இருப்பதால், இளைய உடன் பிறப்புக்கள் உதவிக்கரமாக இருப்பர். பங்காளிகளுடன் ஏற்பட்ட சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடிக்க முற்படுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும்.

### துலாம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, தடுமாற்றம், கவனக் குறைவு, காரியத் தடை, பேராசையால் நஷ்டம், பிள்ளைகளால் தொல்லை போன்ற பிரச்சினைகளை சந்திக்கலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். புதிய அனுபவங்களைப் பெறலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் நீங்களும் கலந்துகொள்ளலாம். விரய ஸ்தானத்தில் சனி இருப்பதால், பணம் பல வகையிலும் கரைந்து கொண்டிருக்கும். தொழில் ரீதியான விஷயங்களில் எச்சரிக்கையாக செயற்பட வேண்டியது அவசியம். அதேநேரத்தில், குரு சாதகமான நிலையில் இருப்பதால், எந்த காரியங்களையும் தங்கு, தடையின்றி முடித்துக் கொள்வீர்கள். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மூத்த உடன் பிறப்புக்கள் உங்களின் உதவி நாடி வரலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மற்றவர்கள் உங்களைப் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். புதன் பாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள் தொடர்பான வகை யில் தொல்லைகளே. காரிய வெற்றி உண்டு. பணவரவுகளை பெறலாம்.

### விருச்சிகம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்களுடன் வெளியிடங் களுக்கு செல்லலாம். ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். சந்திராஷ்டமம் என்பதால், மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். விமர்சனங்களைச் சந்திக்கலாம். மறதி, குழப்பத்தால் சிரமப்படலாம். ராசிக்கு அதிபதியான செவ்வாய், பாதகமான நிலையில் இருப்பதால், தேக ஆரோக்கிய விஷயங்களில் அக்கறை அவசியம். அதற்காக சிறு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். சகோதரர்கள், பங்காளிகளாலும் பிரச்சினைகள் ஏற்படலாம். நிலம், பூமி விவகாரங்கள் எளிதில் முடிவுக்கு வராமல் இழுத்தடிக்கலாம். இரண்டாம் இடத்தில் ராகு இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் கடும் பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். நான்காம் இடத்தில் புதன் இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். சூரியனும் அதே வீட்டில் இருப்பதால், ஓய்வில்லாமல் பரபரப்பாக செயற்பட நேரிடலாம். இதோ, அதோ என, பல வேலைகள் உங்களுக்கு நெருக்கடி கொடுக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்களால் ஆறுதல் அடைவீர்கள். கலகலப்பான அனுபவங்களை பெறலாம்.

### தனுசு

இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்களுக்காகவோ மற்றவர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கலாம். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் சந்தோஷம் அடையலாம். மூன்றாம் வீட்டில் சூரியன் இருப்பதால், எந்த வேலையும் இழுபறி இல்லாமல் படபடவென முடிவுக்கு வரும். மற்றவர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் முன்னேற்றம் காண்பர். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். வீடு, மனையை சீரமைக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். எட்டாம் வீட்டில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். கோபம், வேகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் அவ்வப்போது நடக்கலாம் என்பதால், பொறுமையாக செயல்படுவது நல்லது. பறர் சொல்லும் வார்த்தைகள் உண்மையானதா என, அலசி ஆராய்ந்து முடிவெடுப்பது நல்லது. தண்டச் செலவு நேரும்.

### மகரம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியில் செலவுகளையும், அவர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையவும் நேரிடலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலையும் உருவாகலாம். தண்டச் செலவுகளையும் செய்ய நேரிடலாம். பணவரவுகளைப் பெறலாம்.எந்த வேலையையும் சிரமம் இல்லாமல் எளிதாக முடித்துக் கொள்வீர்கள். குரு, சுக்கிரன், புதன் சாதகமாக இருப்பதால், பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். சண்டை போட்ட தம்பதியர் இடையே ஒற்றுமை உண்டாகும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். கேது ஆறாம் இடத்தில் சாதகமாக இருப்பதால், மாற்று மதத்தினர் உதவிக்கரமாக இருப்பர். எந்தக் காரியத்தையும் துணிச்சலாக செய்யும் வல்லமை அதிகரிக்கும். ஒன்பதாம் இடத்தில் சனி இருப்பதால், தந்தை உடல் நலன் தொடர்பான விஷயங்களில் கவனம் அவசியம். கடன் பிரச்சினைகளால் சிலர் அவதிப்படலாம். ஏழாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், கணவன் மனைவி உறவில் அவ்வப்போது உரசல்கள் உருவாகலாம். சிறிய விஷயங்களுக்கு கூட சிலர் பெரிய அளவில் கோபத்துக் கொள்ளலாம். மூத்த உடன் பிறப்புக்களால் தொல்லை, சிரமங்களுக்கு ஆளாகலாம்.

### கும்பம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். பணிபுரிவோர் சக ஊழியர்கள் விடுமுறையால் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களுக்காக செலவு செய்யலாம். அஷ்டமத்துச் சனியால் எதிலும் இடர்பாடு, முட்டுக் கட்டை, நினைத்து நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடத்தல், வாய்ப்புகள் கைநழுவிச் செல்லுதல், வீண் பழிகள், உறவினர்கள், நண்பர்களின் விமர்சனங்களுக்கு ஆளாகுதல், ஏமாற்றம் போன்றவற் றைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான வருமானமும் திருப்தி தரும் வகையில் இருக்காது. ஜென்ம ராசியில் சுக்கிரன் இருப்பதால், மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோற்றம் அளிப்பீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் அணிந்து பிறர் மத்தியில் உங்களின் செல்வாக்கை காட்டுவீர்கள். ராகு சாதகமாக இருப்பதால், இழுபறியாக இருந்த சில காரியங்கள் முடிவுக்கு வரும். செவ்வாய் 6 இல் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். தொழில் ரீதியாக பரபரப்பாக செயல்பட நேரிடலாம். உடன் பிறப்புக்கள் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வர். நிலம், பூமி விவகாரங்களிலும் சுமுகமான நிலைமை காணப்படும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் இல்லை. வியாபாரிகள் போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம்.

### மீனம்

இந்த வாரம் மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமை அடைவீர்கள். கடனாக கொடுத்த பணம் திரும்ப வரலாம். கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆட்படலாம். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் ஏற்படலாம். மற்ற வர்களின் வேலைகளுக்காக அலையலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். ஏழாம் இடத்தில் சனி இருப்பதால், உடல் ரீதியான விஷயங்களில் கவனம் அவசியம். கடும் வேலை நெருக்கடிகளால் அடிக்கடி அலுப்பு, சலிப்பு ஆட்கொள்ளும். சிறிய விவகாரங்கள் கூட பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். புதன், சுக்கிரன் விரய ஸ்தானத்தில் இளைய உடன் பிறப்புகள், தாயார், தாய் வழி உறவுகள், மனைவி, மைத்துனர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். அவர்கள் வீட்டு காரியங்களுக் காக நீங்கள் கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். ஐந்தாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், எதிலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம். சொத்து விவகாரங்களில் கவனம் அவசியம். சூரியன் விரய ஸ்தானத்தில் இருப்பதால், தந்தை வழியில் எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம். அரசுக்கு வரி அல்லது கட்டணம் கட்டுவதற்கான கணிசமான பணத்தை செலவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போரில் 93 ஆவது போட்டியின் விருதுவழங்கிய போது....



நேற்று முன்தினம் முடிவடைந்த பொன் அணிகளின் போரில் முதல் இனிங்ஸ்சில் வெற்றி பெற்ற யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் அணித்தலைவருக்கு கல்லூரி அதிபர்கள் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் ஆட்ட நாயகனாகத் தெரிவான யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் மிலாண்டோவுக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்படுவதையும், சிறந்த இணைப்பாட்ட வீரர்களுக்கான விருதினை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபரிடம் இருந்து அக்கல்லூரியின் வீரர்கள் நிகேதன், நிரோசன் ஆகியோர் பெறுவதையும் முதல்வரிசைப் படங்களில் காணலாம்.

சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை கமில்ரன் பெறுவதையும் சிறந்த பந்துவீச்சாளராகவுக்கு தெரிவான சஜீந்திரனுக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் விருதுவழங்குவதையும், விசேட பரிசினை கவாஸ்கர் பெறுவதையும் இரண்டாம் வரிசைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:நேசன், தமிழினியன்)

# 'பொன் அணிகளின் போர்' சமநிலையில் முடிந்தது; சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரு புதிய சாதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 01

பொன் அணிகளின் 93ஆவது துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் சமநிலையில் முடிவடைந்துள்ள போதிலும் சமகாலத்தில் இரண்டு புதிய சாதனைகளும் நிலை நாட்டப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டு சென்.பற்றிக்ஸ் கல்லூரியால் பெறப்பட்ட 285 எனும் அதிகூடிய ஓட்டங்களும், 1975 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி பெற்ற 320 எனும் அதிகூடிய ஓட்டமும் சென்பற்றிக்ஸ் கல்லூரியால் முறியடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஆட்டம் ஆரம்பித்த வேளையில் களமிறங்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஹமில்டன் 144 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரியலக்சன் வீசிய பந்தை ஆட முற்பட முனைந்து 'எல்.பி. டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மிலாண்டோ களமிறங்கித் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தார். நிதானமாக நின்று விளையாடிய போதிலும் மிலாண்டோ-மைக்கல் இணைப்பாட்டமாக 71 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், மிலாண்டோ 72 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பெற்று நிகேதனின் பந்து வீச்சில் பிரியலக்சனிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து நவதீபன் களமிறங்கி மைக்கலுடன் இணைந்து கொண்டார். மைக்கல் 138 பந்துகளில் 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஸ்ரீகுகனின் பந்து வீச்சுக்கு நிகேதனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

கவாஸ்கர் களமிறங்கியதைத் தொடர்ந்து விரைவாக ஓட்டம் பெறப்பட்டது. 8 பந்துப் பரிமாற்றங்களில் 45 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் நவதீபன் 33 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரியலக்சனின் பந்து வீச்சில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து எரிக்பிரதாப் களமிறங்கினார். இந்நேரத்தில் கவாஸ்கர் 42 பந்துகளை சந்தித்து 33 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஓட்டம் பெற எத்தணித்த வேளையில் கோமளதரனால் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார்.

தொடர்ந்து சஜீந்திரன் களமிறங்கி 19 பந்துகளில் 19 ஓட்டங்களைப் பெற்றநிலையில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் வெளியேறினார்.

இறுதி ஆட்டக்காரராக கிளின்ரன் களமிறங்கி 05 பந்துகளில் 04 ஓட்டங்களுடனும் எரிக்பிரதாப் 34 பந்துகளில் 19 ஓட்டங்களுடனும் இருந்த வேளையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் நவதீபன் ஆட்டத்தை இடைநிறுத்தி யாழ்ப்பாணக் கல்லூரியை இரண்டாவது இனிங்ஸ்சில் துடுப்பெடுத்தாடும்படி வேண்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பிரியலக்சன் 28 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 80 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிரோசன் 25 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 55 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும்,

பிரசாத் 3 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், நிகேதன் 15 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 51 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும்,ஸ்ரீகுகன் 13 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 47 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பிரசாத்தும்,பிரசோபனனும் களமிறங்கி துடுப்பாட்டத்தை ஆரம்பித்தார்கள். 6.3ஓவர்களில் 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரசாத் 23 பந்துகளில் 11 ஓட்டங்களுடன் சஜீந்திரன் வீசிய பந்தை தடுத்து விளையாட முற்பட்டு சஜீந்திரனிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.

முதலாவது ஆட்டக்காரராக களமிறங்கிய பெஞ்சமின் துடுப்பாட்டத்தை ஆரம்பிக்க பிரசோபனன் 17 பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கவாஸ்கரின் பந்தை [illegible] வேளையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இரண்டாவது ஆட்டக்காரராக பென்டில்கரன் களமிறங்கினார். இவர் 31 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கமில்ரன் வீசிய பந்தை அடித்து ஓட்டம் பெற எத்தனித்த வேளையில் கவாஸ்கரினால் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார்.

நிகேதன் துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட வேளையில் 4 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று கமில்ரனின் பந்தை தடுக்க முற்பட்ட நிலையில் விக் கெட்டை இழந்து வெளியேறினார்.

தொடர்ந்து ஸ்ரீகுகன் களமிறங்கி துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நிலையில் பெஞ்சமின் 40 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கமில்ரனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நிரோசன் களமிறங்கி ஸ்ரீகுகனுடன் இணைந்து நிலைமையை உணர்ந்து இருவரும் நிதானமாக விளையாடினார்கள். 23.2 ஓவர்களில் இணைப்பாட்டமாக 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நிரோசன் 76 பந்துகளில் 42 ஓட்டங்களுடன் கமில்ரனின் பந்து வீச்சில் விக்கெட்டை இழந்து வெளியேறினார்.

தொடர்ந்து சீராளன் களமிறங்கி ஒரு பந்தில் ஒரு ஓட்டத்துடனும் ஸ்ரீகுகன் 80 பந்துகளில் 12 ஓட்டத்துடனும் இருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

பொன் அணிகளின் போரின் 93 ஆவது போட்டியின் ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல் லூரியின் மிலாண்டோ ஜெனீபர் தெரிவானார்.

சிறந்த பந்து வீச்சாளர்களாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் சஜீந்திரனும், யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரிய லக்சனும் தெரிவு செய்யப்பட்டனர் சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் கமில்ரன் மைக்கல் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

சிறந்த சகலதுறை வீரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் நிரோஜனுக்கு சிறந்த களத்தடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மிலாண்டோவுக்கும் சிறந்த இணைப்பாட்ட ஜோடியாக யாழ்ப்பாணக் கல்லூரியின் நிகேதன், நிரோஜன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

விசேட பரிசுகளை சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கவாஸ்கரும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நிகேதனும் பெற்றனர். (6-86-23)

## மஞ்சிக் கிண்ண வடமாகாண சம்பியனாகின வவுனியா பொலிஸ், காங்கேசன்துறை ஐக்கிய வி.க.

மஞ்சிக் கிண்ணத்திற்கான மாவட்ட மட்ட கரப்பந்தாடப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா பொலிஸ் அணியும் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தன.

வட மாகாணங்களில் உள்ள மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்பட்ட இப் போட்டி கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இதில் வவுனியா பொலிஸ் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

ஐந்து செற்களைக் கொண்ட இவ் ஆட்டத்தில் முதற் சுற்றில் வவுனியா பொலிஸ் அணி 25:18, 25:23 என வெற்றிபெற ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் இரண்டாவது சுற்றை 25:19, 25:21 எனக் கைப்பற்றியது.

வெற்றியைத் தீர்மானிக்கும் ஐந்தாவது சுற்றில் கடுமையான போட்டி நிலவிய போதும் வவுனியா பொலிஸ் அணி 15:13 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

பெண்கள் பிரிவில் சங்கானை விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:17, 25:19,25:20 எனும் அடிப்படையில் புள்ளிகளைப் பெற்று மாகாண சம்பியன் பட்டத்தை வென்றது. (06-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளமே நோன்பின் உன்னத அடையாளம்”

கிறிஸ்தவர்களாகிய எமது திருவழிபாட்டு ஆண்டுச்சக்கரத்தில் புதியதொரு காலத்தினை தபக்காலமாக ஆரம்பித்துள்ளோம். “தபம்” எனும் பதத்தினை நினைவு கூரும் போது பட்டினி இருத்தல், உடலை ஒறுத்தல் போன்ற செயற்பாடுகள் எம்மில் பலருக்கு முதலிடமாய் அமைகின்றன. இவை தபத்திற்கு ஒரு வெளியடையாளமாக இருப்பினும் இதுதான் தபம் என்ற உணர்வில் நாம் வாழ்ந்துவிட முடியாது.

நாம் ஏன் தபம் செய்கின்றோம்? என்ற வினாவை எம் உள்ளத்தில் ஆழப்பதித்து சிந்திப்போமாகில் எசாயா இறைவாக்கினர் கூறும் உண்மை புலப்படும். அதாவது கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை எனவே நோன்பின் வழி நம் குற்றங்களை உணரவும், அவற்றிலிருந்து மனமாற்றம் பெறவும் இறைவனுடன் ஒப்புரவாகவும் தகுந்த காலமாக அமைவதே தபக்காலமாகும்.

எம்மை பல அறச் செயல்களினூடாக புதுப்பிற்கும் இப்புனித காலத்தை நாம் எவ்வாறு பயன்படுத்துகின்றோம்? என்பது அடுத்து சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

## தவக்காலச் சிந்தனை



செப, தப, தர்ம முயற்சிகளில் நாம் ஈடுபட்டாலும் எம் உள்ளம் எம் பாவ நிலைகளை முழுமையாக உணர்ந்து இறைவனிடம் திரும்பி வர வேண்டும். இறை உறவை பகைக்கும் “ நான் ” என்ற அகந்தையை அகற்றி “நாம்” எனும் அன்பினை உள்ளங்களில் ஊற்றெடுக்கச் செய்ய வேண்டும். அடுத்திருப்பவரில் நாம் கொள்ளும் பகைமைச் சுவரைத் தகர்த்து ஒற்றுமையின் அடித்தளத்தை இட்டு வாழ்வதன் மூலம் இறைவனுடன் ஒப்புரவாகும் உண்மையை வெளிக்கொணர வேண்டும். மேலும் எம்மில் உள்ள ஏற்றுக்கொள்ளாமை, மன்னிப்பளியாமை, அன்பு செலுத்தாமை, பகிர்ந்து வாழாமை, நீதி நிலை நாட்டாமை போன்ற துன்மாதிரிகளுக்காக உண்மையான மனமாற்றம் பெற எம் தப, செப, தர்ம முயற்சிகள் வழிவகுப்பதன் ஊடாக எம் பாவ நாட்டங்களுக்குப் பரிகாரம் புரிந்து இயேசுவின் தியாகம் நிறைந்த அன்பில் எம் வாழ்வையும் இணைக்க இந்த தபக்காலம் எம் அனைவருக்கும் உன்னத காலமாக அமைவதாக.

எஸ்.எம் வுளோறன்ஸ்.


## வாடகைக்கு

யாழ்ப்பாணம், கண்டி றோட், கச்சேரியடியில் உள்ள 211ஆம் இலக்கத்தில் உள்ள 12,000 ச.அடி வரையான வீடு ஒன்று 10 பரப்புக் காணியில் அமைந்துள்ளது. இது அரச, அரசசார்பற்ற நிறுவனம் ஏதாவது ஒன்றுக்கு வாடகைக்கு நீண்டகால, குறுங்கால அடிப்படையில் 01.03.2010இல் இருந்து வாடகைக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு: த.சிவானந்தராசா,
வவுனியா. தொ.பே.இல.: 024 4589905
த.சிவலிங்கம்
தொ.இல.: 021 3735047

(95161)

## காணி தேவை

கட்டுடை சந்திக்கும் கூழாவடிக்கும் பலாலி பிரதான வீதியில் கோண்டாவிலுக்கும் உரும்பிராய்க்கும் இடையில் காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
ம.குணரத்தினம்
077 9001382.


## முக்கிய அறிவித்தல்

குமாரசாமி பாலசுப்பிரமணியம் ஆகிய என்னால் தியாகராஜ பிள்ளை ஸ்கந்தராசா, அழகதோட்டம், கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை என்பவருக்கும் வரதராசா ஞானகணேசன், யாழ்ப்பாணக் கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை என்பவருக்கும் கடந்த 26ஆம் திகதி கார்த்திகை மாதம் 1999ஆம் ஆண்டு 584ஆம் இலக்கத்தில் யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதியில் இருக்கும் பின்வரும் வரி மதிப்பு இலக்கங்களைக்கொண்ட (133, 141, 141 1/1, 141½, 143, 145, 151, 153, 155, 157, 159, 161) எனது ஆதனங்களைப் பராமரித்து ஆட்சி செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை கடந்த 30ஆம் திகதி தை மாதம் 2010ஆம் ஆண்டில் இருந்து நீக்கி விட்டேன் என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

மேலும் வரதராசா ஞானகணேசன், பிரதானவீதி, வட்டு தென். மேற்கு, வட்டுக்கோட்டை என்பவரை 30ஆம் திகதி தைமாதம் 2010ஆம் ஆண்டு 2742 என்ற இலக்கத்தில் வழங்கிய அற்றோணித் தத்துவ மூலம் மேற்படி ஆதனங்களைப் பராமரித்து ஆட்சி செய்து சட்ட நடவடிக்கை எடுக்க அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

குமாரசாமி பாலசுப்பிரமணியம்,
Dr.திருமதி சிவானந்தி நாகேந்திரன்
39, விவேகானந்தா வீதி,
வெள்ளவத்தை கொழும்பு.

(சி/565184)

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

### சொத்துக்கள், உடைமைகள் அடையாளம் காணலும், உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்குட்படுத்தலும்

கௌரவ ஆளுநர், வடமாகாணம் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைவாக கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் தமிழீழவிடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றவற்றினால் பயன்படுத்தப்பட்ட காணிகள், கட்டடங்கள், உடைமைகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு, கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எமது சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவ்வாறான காணிகள், கட்டடங்கள், சொத்துக்கள் எதுவும் இனங்காணப்பட்டாலோ அல்லது இது தொடர்பாக முறைகேடுகள் நடைபெற்றிருந்தாலோ கரைச்சிப் பிரதேச சபைக்கு தெரியப்படுத்துமாறு கோரப்படுகின்றது.

மேலும் மேற்படி காணிகள், கட்டடங்கள், சொத்துக்கள் யாராவது பிழையாக கையகப்படுத்தி இருப்பின் கரைச்சிப் பிரதேச சபைக்கு கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இது தொடர்பாக ஏதாவது முறைகேடுகள் நடைபெற்றிருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்பதையும் தெரியப்படுத்துகின்றேன்.

பொன்.நித்தியானந்தம்,
சிறப்பு ஆணையாளர்.

(C/565174)




புவே செற்
வீட்டுக்கு மற்றும் ஹோட்டலுக்கு
ரூ.3,950/-இலிருந்து
டயிடஸ் ஸ்ரோஸ்
2439422


## கைத்தறி அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடல் செயலகத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 1

குடாநாட்டின் கைத்தறி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக (கச்சேரி) கேட்போர் கூடத்தில் வடமாகாண தொழிற்றுறைத் திணைக்கள பணிப்பாளர், புடைவைக் கைத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரால் நடத்தப்படவுள்ளது.

சகல தனியார் கைத்தறி நெசவாளர்களும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கைத்தொழில் திணைக்கள மாவட்ட அலுவலர் பொ.பௌராஜ் கேட்டுள்ளார். (1)

## கணிதபாட மதிப்பீட்டு நிலைய மீள் பரீட்சை மார்ச் 18 இல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட கணிதபாட நிலைய மதிப்பீட்டில் தோற்றிய மாணவர்களுக்கான மீள் பரீட்சை மார்ச் மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றிய தரம் 6 - 10 வரையான மாணவர்களின் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு ஆசிரியர்களுக்கான செயலமர்வும் நடத்தப்பட்டது. எனவே தற்போது தரம் 7 - 11 வரை கல்வி கற்கும் இம்மாணவர்களை மீள் பரீட்சைக்குத் தயார்படுத்துமாறும் பாடசாலை அதிபர்களையும் கணித பாட ஆசிரியர்களையும் அவர் கேட்டுள்ளார். (196)


## இதய பூர்வமான வாழ்த்துக்கள்



உயர்திரு.
திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்
(சிரேஷ்ட முகாமையாளர்,
ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)

தொழிலில் நான் இடர்ப்பட்டபோது தனது நலன் பாராது எல்லா வேளைகளிலும் உதவிக்கரம் நீட்டி, தகுந்த ஆலோசனைகள் வழங்கி என்னை மேன்நிலைப்படுத்திய திரு.திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம் அவர்கள் தனது வாழ்நாளில் சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

விவா மின்பொருள்
இரும்பு வாணிபம்
க.சசிகுமார்
கைதடிச் சந்தி, கைதடி.

## தவறிவிட்டது

61, மருதடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய சுந்தரலிங்கம் பன்னீர்ச்செல்வன் என்பவரின் தேசிய அ.அட்டை(732512110V), விசேட அ.அட்டை (0901025051), சாரதி அனுமதிப்பத்திரம், வேலை அ.அட்டை, வர்த்தக வங்கி Atm Card என்பன பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 59, மருதடி வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.: 021 222 7286



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2100 திகதி 27-02-2010

ஆங்கில எழுத்திற்கும் K

வெற்றி எண்கள் 11 26 27 65 போனஸ் இல: 19

ஜக்பொட் பரிசு ரூ. 18,975,550/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 173807 | 20/- | 3,476,140/- |
| 2 இல | 12322 | 100/- | 1,232,200/- |
| 3 இல | 272 | 1,000/- | 272,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6834 | 40/- | 273.360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 525 | 1,000/- | 525,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 18,975,550/- | 18,975,550/- |
| 1 இல + போனஸ் இல | 8256 | 100/- | 825,600/- |
| 2 இல + போனஸ் இல | 391 | 500/- | 195,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 328 | 200/- | 65,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13.500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 26,344,450/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 202768 | | 26,944,450/- |

ஆஸிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - L.R. காமினி பியனந்த - மெதிரிகிரிய.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K.W. சரத் - காலி.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 301674462-2-18 |
| அம்பாறை | 301670817-5-02 |
| கொழும்பு | 301668813-7-29 |
| யாழ்ப்பாணம் | 301667420-4-05 |
| வவுனியா | 301676597-6-39 |
| கொழும்பு | 301686001-5-46 |
| கொழும்பு | 301686771-8-18 |
| மட்டக்களப்பு | 301668832-4-43 |
| கண்டி | 301673453-2-37 |
| அநுராதபுரம் | 301678197-6-31 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.10,000,000/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீலாதுன் நபி தினப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு யாழ். ஒஸ்மானியக் கல்லூரியில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்:
நிகழ்வில் கல்லூரியின் அதிபர் எம்.எஸ். ஏ.எம். முபாரக் தலைமையுரையாற்றுவதையும் நிகழ்வின் பிரதம விருந்தினர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு, இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் எம்.எஸ். அப்துல் பாரி உரையாற்றுவதையும்- யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும்- மாணவிகளின் நடன நிகழ்வொன்றையும், நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கவிநேசன்)

# வடமாகாணப் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

அச்சுவேலி, மார்ச் 01

வடக்கு மாகாணத்தில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2, இலங்கை அதிபர் சேவைவகுப்பு 3 ஆகிய தரங்களுக்கு பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கி அதிபர் பொறுப்புக்களை வழங்குவது தொடர்பான ஏற்பாடுகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் அதிபர் பதவி உயர்வு நியமனத்துக்குரியவர் மற்றும் பாடசாலை வெற்றிடங்கள் தொடர்பான விவரங்களைக் கண்டறிவதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் தலைமையில் மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் எஸ்.பொன்னம்பலம் மேற்படி விடயம் தொடர்பாக ஒவ்வொரு கல்வி வலயங்களுக்கும் விஜயம் செய்து அதிபர் பதவி உயர்வு பாடசாலை பொறுப்புக்களுக்கு புதிய அதிபர்களை நியமித்தல் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண வலயத்தில் தங்கியிருந்து மேற்படி விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் திரட்டப்படும் தகவல்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறு திப்பட்டியல் தயார் செய்து சீர் செய்த பின்னரே சம்பந்தப்பட்டவர்களுக்கு அது தொடர்பான நியமனக் கடிதங்களும் பாடசாலைப் பொறுப்புக்களும் கையளிக்கப்படவுள்ளன.

தற்பொழுது தேர்தல் காலம் என்பதால் பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் கடிதங்கள் கையளிக்கப்படுவதுடன், இரண்டாம் தவணை ஆரம்பத்திலேயே அவர்களுக்குப் பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படும் என கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (04-11)

## அச்சுவேலி மத்திய கல்லூரியில் முறைசாராக் கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.01

அச்சுவேலி மத்திய கல்லூரியில் முறைசாராக் கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளதால் பாடசாலையை விட்டு விலகியவர்கள் கல்லூரியில் அல்லது யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தில் உரிய படிவங்களைப் பெற்று எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

கணனி மென்பொருள், கணனி வன்பொருள்,சிங்களம்,மனை முகாமைத்துவம் ஆகிய பாட நெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன. (ரி)

# அம்மா! பிச்சை போடுங்கள்!!

## நல்லூரில் அதிகரிக்கும் பிச்சைக்காரர்கள்

யாழ்ப்பாணம், மார்ச்.01

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடல் பகுதியில் பிச்சையெடுத்து தர்மம் சேகரிப்போரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளின் ஆரவார ஓசையையும் மீறி 'அம்மா பிச்சை போடுங்கள்' என்ற வேண்டுதலும் ஒலிப்பதை அவதானிக்க முடிந்தது.

தற்போது நல்லூர்ப் பகுதிக்குத் அதிகளவான மக்கள் தினமும் வருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகளும் நல்லூருக்கே பெருமெடுப்பில் படையெடுக்கின்றனர். இவ்வாறான மக்கள் கூட்டத்தை நம்பி பிச்சை எடுப்போரும் நல்லூர்ப் பகுதியில் திரளத் தொடங்கியுள்ளனர். படையெடுக்கின்றனர். (04-224)







# வீடுகளை விடுதிகளாக மாற்றி அமைப்போர் பிரதேச சபையின் அனுமதியைப் பெற வேண்டும்

## வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் அறிவிப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 01

வலி தென்மேற்கு பிரதேசத்தில் குடியிருக்கும் வீடுகளை விடுதிகளாக மாற்றி அமைக்கும் உரிமையாளர்கள் உடனடியாக பிரதேசசபையுடன் தொடர்பு கொண்டு உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம்.

உல்லாசப் பயணிகளின் வருகையைத் தொடர்ந்து குடியிருக்கும் வீடுகள் விடுதிகளாக மாற்றப்பட்டு வருவது குறித்து பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:

ஏ.9 தரைப்பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கையிலிருந்து தினசரி பல நூற்றுக்கணக்கான உல்லாசப் பயணிகள் குடாநாட்டை நோக்கி வந்த வண்ணம் இருக்கிறார்கள். இவர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகள் யாழ். நகரில் போதியளவு இன்மையால் நகருக்கு அண்மித்த பிரதேசங்களில் உள்ள வீடுகளை நோக்கி அவர்கள் செல்வதனால் அப் பகுதிகளிலுள்ள வீடுகள் விடுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

இதனைப் போன்றே வலி.தென் மேற்குப் பிரதேசத்திலும் உள்ள குடியிருக்கும் வீடுகள் விடுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. எனவே வீடுகளை விடுதிகளாக மாற்றி அமைத்து வரும் வீட்டு உரிமையாளர்கள் பிரதேச சபையின் கீழுள்ள உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (50-ரி-115)

# புள்ளி விவரவியல் உதவியாளர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிப் பயிற்சியாளர்களிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 01

தொகை மதிப்புப் புள்ளி விவரத் திணைக்கள யாழ்ப்பாணம்,வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் புள்ளி விவரவியல் உதவியாளர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற் காக 2005ஆம் ஆண்டு பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின் கீழ் பணி புரிபவர்களிடம் இருந்தே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை மார்ச் மாதம் 05ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பணிப்பளார் நாயகம் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், 15/12, மேட்லண்ட் சந்திர வட்டம் த.பெ.இலக்கம் 563, கொழும்பு -07 என்ற முகவரிக்கு பதிவுத் தாபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண் டும்.

2005ஆம் ஆண்டு பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தின் கீழ் அரச சேவைக்கு அல்லது மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். புள்ளி விவரவியல், கணிதம், பொருளியல், கணனி, விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம், குடியியல், பூகோளசாஸ்திரம், சமூகவியல் ஆகிய விடயங்களுள் ஒரு விடயத்தில் அல்லது பல விடயங்களு டன் கூடிய பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுள்ள பட்டம் அல்லது பல்கலைக் கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட வணிகத் துறை பட்டம் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் மொழிமூலம் கடமையாற்றுவதற்கு ஆற்றல் கொண்டுள்ள அலுவலராக இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மாவட்டத்தில் ஐந்து வருடங்கள் கடமைபுரிவதற்கு இணக்கம் தெரிவித்தல் வேண்டும் எனவும் தொகைமதிப்பு புள்ளிவிவரத்திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் கோரப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பதவிக்கென வெற்றிடம் நிலவும் மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்கள் வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டம்- வடமராட்சி கிழக்கு, வலிகாமம் வடக்கு, யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்கள், காரைநகர், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள். வவுனியா மாவட்டம்- மாவட்டச் செயலாளர் அலுவலக புள்ளி விவரவியல் பிரிவு, வுனியா வடக்கு பிரதேச செயலகம். மன்னார் மாவட்டம்-மடு, மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி பிரதேச செயலகங்கள். கிளிநொச்சிமாவட்டம்-கண்டாவளை, கரைச்சி,பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசசெயலகங்கள்மற்றும மாவட்டச்செயலாளர் அலுவலக புள்ளி விவரவியல் பிரிவு. முல்லைத்தீவு மாவட்டம்- மாந்தை கிழக்கு, துணுக்காய், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலாளர் அலுவலக புள்ளிவிவரவியல் பிரிவு அம்பாறை மாவட்டம்- ஆலையடி வேம்பு, பொத்துவில், உகண,மஹஓய பிரதேச செயலகங்கள். திருகோணமலை மாவட்டம்- கோம ரங்க டவல,கந்தளாய், மொரவெவ, மூதூர்,பதவிசிறிபுர,வெருகல் (ஈச்சிலம்பற்று), தம்பலகாமம் பிரதேச பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலாளர் அலுவலக புள்ளி விவரவியல் பிரிவு மட்டக்களப்பு மாவட்டம்- கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகம். (04-236)

## மோசமான நிலையில் வீதி

யாழ்ப்பாணம், மார்ச்.01

கொழும்புத்துறை பிரதான வீதியின் மலைவேம்பு சந்தியில் இருந்து துறைமுகம் வரையான வீதி பல வருடங்களாகப் புனரமைப்பு செய்யப்பட்டமையால் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

அண்மையில் இவ் வீதி பொது மக்களில் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்ட பின்னரும் எந்தவித சீர் படுத்தல்களுமின்றி தொடர்ந்தும் மோசமான நிலையிலேயே இருப்பதாக பொதுமக்கள் தெரிக்கின்றனர். (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த 1968 ஆம் ஆண்டு, சதயம் 4 ஆம் காலில் பிறந்த விவாகரத்துப் பெற்ற, அரச திணைக்களத்தில் தொழில்புரியும் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர். ஜாதகம், குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:3988, மே/பா உதயன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 ★ 02 ★ 1936

உதிர்வு 12 ★ 03 ★ 2009

### திருமதி இராசேந்திரன் பரமேஸ்வரி (பூபதி)

திதி: 01.03.2010

ஆண்டு ஒன்று கடந்தாலும் மாண்டீர் என்று சொல்ல
மனசு மறுக்குதம்மா யோசிக்க யோசிக்க நிமிஷம்
கடந்தாலும் - உம் சிரித்த முகத் தோற்றம்
எம் நெஞ்சத்தைக் கடக்காது

என்றும் உங்கள் நினைவுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (95197)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 ★ 08 ★ 1938

உதிர்வு 11 ★ 03 ★ 2009

### ஸ்ரீமான் சரவணமுத்து இராசையா

(முன்னாள் உரிமையாளர், கைதடி ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ், முன்னாள் தலைவர், கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம்)

அன்பினால் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
பண்புக்கோர் இலக்கணமாய், பலருக்கு இனியவராய்
கொடைக்குச் சிறந்தவராய்
எமை ஊர் போற்ற வாழவைத்த அன்புத் தெய்வமே
உங்கள் ஆருயிர் அணைந்து ஓராண்டுகள் ஆனதே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்களை விட்டகலா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல கயிற்றசிட்டி முருகப் பெருமானை
வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
க.குருபரன் (பேறாமகன்),
உறவினரும்.

செல்வரத்தின வாசா,
கைதடி வடக்கு,
கைதடி. (95125)

## மரண அறிவித்தல்

### திருமதி சீதாதேவி விநாயகசேகரம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாதேவி விநாயகசேகரம் (27.02.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் நாகலிங்கம்-அன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-அமிர்தரட்ணம் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற விநாயகசேகரம் (P.H.I - கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலன், ஜோதிபாலன் (U.K.), இந்துமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரமணபிரபா (கனடா), ஜெனனி (U.K.), கிருசாந்தன் ஆகியோரின் மாமியாரும், சர்மிலி, திவ்யன், கவின், வருணி, ஹர்சா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான திருமதி முத்தையா, திருமதி சின்னத்துரை, கதிர்காமர், ராசையா, Dr. பரமநாதன், திருமதி பொன்னம்பலம், நடேசன் மற்றும் திருமதி ராஜரட்ணம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் ராமலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2010) திங்கட்கிழமை காலை களுபோவில ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப. 5 மணியளவில் அன் ரன்சன் வீதி, நெகித்திமலை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கிருஷாந்தன் (மருமகன்)
0777499284

கொழும்பு.

# 'ஸ்ரெச்சர்' இல்லாததால் நோயாளரை தூக்கிச் செல்லும் நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 01

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவசர நோயாளர்களை கொண்டு செல்லும் 'ஸ்ரெச்சர்' ஒன்று மட்டும் இருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் கொண்டுவரப்படும் பட்சத்தில் நோயாளர்களுடன் வருவோரே அவர்களை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு தூக்கிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விபத்தில் சிக்கி காயமடைந்த இருவரை ஓட்டோவில் ஏற்றி வந்த போது ஒரேயொரு ஸ்ரெச்சர் மட்டும் இருந்ததால் மற்ற நோயாளரை அங்கு நின்றவர்கள் தூக்கிச் சென்று அவசர சிகிச்சைப் பிரி வில் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதியில் பெருமளவு வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற இக் கால கட்டத்தில் வைத்தியசாலையில் ஒரேயொரு ஸ்ரெச்சரைப் பாவனையில் வைத்திருப்பது குறித்து விபத்தின் போது காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் பார்வையிட வந்தவர்கள் முணுமுணுத்ததைக் கேட்க முடிந்தது. (1-207)

## காணி விற்பனைக்கு

நல்லூர், ஆசீர்வாதப்பர் வீதியில்
1½பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொ.பே.இல: 0213008625

## தவறிவிட்டது

கல்திட்டி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா உதயரூபன் என்பவரது தே.அ.அட்டை (822014089V) 14.02.2010 அன்று மாதகலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல: 0774656332 (95198)

# நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 01

தென்மராட்சிப் பிரதேச வர்த்தக, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு இவ் வருடத்திற்கான முத்திரையிடும் பணி கடந்த 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட அளவைகள், நிறுவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் நான்காம் திகதி வரை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் முத்திரையிடும் பணிகளுக்கு சங்கத்தானை, மீசாலை, நுணாவில், மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக, வியாபார நிலையங்கள் தமது நிலையத்தில் உள்ள அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச வர்த்தக, வியாபார நிலையங்களின் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு எதிர்வரும் எட்டாம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் கொடிகாமத்தில் நடத்தப்படுமெனவும் மிருசுவில், உசன், கொடிகாமம், கச்சாய், வரணி, புத்தூர் சந்தி ஆகிய இடங்களைச் சேர்ந்த வர்த்தக, வியாபாரிகள் தமது அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடலாமெனவும் அளவை நிறுவைகள் திணைக்கள உத்தியோகத்தர் அறிவித்துள்ளனர். (1-207)

# பிராந்திய திட்டமிடல் கற்கை நெறி; வாய் மொழிப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்.பல்கலைக்கழகத்தில் பிராந்திய திட்டமிடல் முதுகலைமாணி கற்கைநெறியைத் தொடர்ந்த மாணவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருக்கிறது.

சம்பந்தப்பட்டவர்களைச் சமுகமளிக்குமாறு கற்கைநெறி இணைப்பாளர் கேட்டுள்ளார். (1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த
விளையாட்டு துறைசார் விற்பன்னர்
**சண் தயாளன்**
அவர்கள் யாழ்.கல்வி வலயத்தின்
விளையாட்டுத் துறையின் உதவிக் கல்விப்
பணிப்பாளர் ஆக பதவியுயர்வு
பெற்றதையிட்டு எமது பாடசாலை
சமூகத்தின் சார்பில் மனதாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம். (95183)

## புதிய சிங்கள அக்கடமி
### கோண்டாவில்

எமது புதிய வெளியீடு புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைவான வினாத்தாள்களை விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். அனைத்துப் பிரிவினருக்குமான சிங்கள வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

பிரிவு I திங்கள், புதன் 3.30 pm - 4.30 pm
பிரிவு II செவ்வாய், வியாழன் - 4pm - 5 pm

மாணவர்களின் வசதிகருதி நேரமாற்றம் கவனத்தில் கொள்ளப்படுவதோடு எண்ணிக்கை வரையறுக்கப்படும்.

புதிய சிங்கள அக்கடமி,
K.K.S. வீதி, கோண்டாவில். 021 3734049. (95199)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிப் பிரிவின்
நீண்டகால உறுப்பினரும் உள்ளக கணக்காய்வாளருமான
ந.தண்டாயுதபாணி அவர்களின் அன்பு மனைவி

### வசந்தாதேவி தண்டாயுதபாணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
தென்மராட்சிப்பிரிவு. (C/565194)

## நெஞ்சைவிட்டகலாத 3ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கனகரெத்தினம் சுரேஸ்குமார் (சுரேஸ்)

(அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம், கச்சேரியடி)

திதி: பிரதமை

அன்னை மடியில் 01.10.1980

ஆண்டவன் அடியில் 04.03.2007

ஆண்டுகள் மூன்று ஆனதுவே
ஏற்க முடியவில்லை உன் மறைவை
எங்கள் வீட்டு ஒளிவிளக்கே
உன் புன்னகையால் இன்பமுடன்
- வாழ்ந்து வந்தோம்
புன்னகையே பொய்யாகிப் போனதடா
- சுரேஸ்குட்டியே!
நீ இல்லாமல் நாங்கள் படும் வேதனையை
- அறிவாயோ
பாசத்தின் உறைவிடமே மகனே!
உன் அழகு வதனம் பார்க்க
ஆசையாய் உள்ளதையா
எப்போது வருவாய் எம்மோடு உறவாட
- எம் மகனே.

என்றென்றும் உன் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

கச்சேரி ஒழுங்கை,
கச்சேரியடி. (95450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலி பூகம்பத்துக்கு 300 பேர் பலி; அநேக கட்டடங்கள் தரைமட்டம்

சாண்டியாகோ(சிலி),மார்ச்1

லத்தீன் அமெரிக்க நாடான சிலியில் சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட கடுமையான பூகம்பத்தில் 300 பேர் உயிரிழந்தனர். ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

தென் அமெரிக்க நாடான சிலியின் தென்மத்திய பகுதியில் சனிக்கிழமை அதிகாலை 3.34 மணி அளவில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் சிலியின் 2 ஆவது பெரிய நகரமான கான்செப்ஷன் நகரின் வடகிழக்கே 90 கிலோ மீற்றர் தொலைவில், பூமியில் 35 கிலோ மீற்றர் ஆழத்தில்; இந்தப் பூகம்பம் மையம் கொண்டிருந்தது. அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் இந்தத் தகவலை வெளியிட்டது.



சிலியின் ஜனாதிபதி விமானம் மூலம் பூகம்ப அனர்த்தங்களைப் பார்வையிடுகிறார்.

மிகவும் சக்திவாய்ந்த இந்தப் பூகம்பம், ரிச்டர் அளவுகோலில் 8.8 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது. சமீபத்தில் 3 லட்சத்துக்கும் அதிகமானவர்களை பலிகொண்ட ஹெய்ட்டி பூகம்பத்தின் தாக்கம் 7.0 புள்ளிகள் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலியின் கான்செப்ஷன் நகரிலிருந்து 320 கி.மீ. தூரத்திலுள்ள தலைநகர் சாண்டியாகோ உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் இந்தப் பூகம்பத்தினால் குலுங்கின. பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. அதிகாலை நேரம் என்பதால், வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த மக்கள், அலறியடித்தபடி வெளியே ஓடி வந்தனர். அவர்கள் பீதியுடன் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தபடி கதறினார்கள்.

மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால், சாண்டியாகோ உள்ளிட்ட நகரங்கள் இருளில் மூழ்கின. சாண்டியாகோவிலுள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டது. தொலைபேசி கம்பங்கள் சாய்ந்து விழுந்ததால், தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

தலைநகர் சாண்டியாகோவிலுள்ள வரலாற்று மைய வளாகக் கட்டடங்களும் பூமி அதிர்ச்சியினால் சேதமடைந்தன. அருகிலுள்ள நெடுஞ்சாலைப் பாலம் ஒன்றும் நொறுங்கி விழுந்தது. இந்தப் பூகம்பத்துக்கு 300 பேர் பலியாயினர் என சிலியின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

அதிகாலை நேரம் என்பதால் மீட்புப் பணி பாதிக்கப்பட்டது. இடிபாடுகளுக்கிடையே மேலும் பலர் சிக்கி இருக்கலாம் என்பதால் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கூரிகோ நகரிலும் பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. சாண்டியாகோ நகரின் பல இடங்களில், கட்டட இடிபாடுகளும், உடைந்த ஜன்னல் கண்ணாடிகளும் சிதறிக்கிடந்தன. சாண்டியாகோ நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் 19 ஆவது மாடியில் அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 34 பேர் தங்கியிருந்தனர்.

''விளக்குக் கம்பங்கள் உட்பட தெருவிலுள்ள அனைத்துப் பொருள்களும் சரிந்து விழுந்தன. அந்தப் பகுதியே தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் சாய்ந்தது போன்ற அந்தப் பயங்கர காட்சி திகிலூட்டுவதாக இருந்தது'' என்று அவர்கள் தெரிவித்தனர்.



கட்டட இடிபாடுகளுக்குளிருந்து பெண் ஒருவர் மீட்கப்படுகிறார்.

இந்தப் பூகம்பத்தினால், அருகிலுள்ள அர்ஜென்டினாவின் சில நகரங்களிலும் கட்டடங்கள் குலுங்கியன. ஏறத்தாழ 50 வினாடிகள் நீடித்த இந்தப் பூகம்பத்தின் தொடர்ச்சியாக இரண்டரை மணி நேரத்தில் 11 முறை தொடர் பூமி அதிர்வுகள் ஏற்பட்டன. அவற்றில் சில ரிச்டர் அளவுகோலில் 6.0 அளவுக்குப் பதிவாகியிருந்தன.

பூகம்பத்தின் தன்மை பற்றி கருத்துத் தெரிவித்த அமெரிக்க புவியியல் ஆய்வு மையம், ரிச்டர் அளவுகோலில் 8 அல்லது அதற்கு மேல் வீரியம் கொண்ட பூகம்பத்தினால் மிகப்பெரிய அளவில் சேதம் உண்டாக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. இந்தப் பூகம்பத்தினால் பசிபிக் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு, 9 அடி உயரத்துக்கு அலைகள் சீறி எழுந்தன.

பூகம்பத்தின் தாக்கத்தினால், அதன் மையப் பகுதியான சிலி மற்றும் பெரு நாட்டின் கடல்பகுதியில் ஆழிப்பேரலை எழக்கூடும் என்று முதலில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர், ஈக்வேடார், கொலம்பியா, பனாமா, கோஸ்டாரிகா, அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய் தீவுகள் உள்ளிட்ட பசிபிக் கடல் பகுதி நாடுகளும், ஜப்பான், ரஷ்யா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளும் விழிப்புடன் இருக்கும்படி எச்சரிக்கை விடப்பட்டிருந் தது.

இதற்கிடையில், பின் அதிர்வுகளை தொடர்ந்து ஆழிப்பேரலை உருவாகி ஹவாய் தீவுகளை நோக்கி முன்னேறி வருகிறது எனவும், உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க அவசர நடவடிக்கை மேற்கொள்ளும்படியும், மாலையில் பசிபிக் ஆழிப்பேரலை மையம் எச்சரிக்கை விடுத்தது.

உலகின் மிகப்பெரிய தாமிர உற்பத்தி நாடான சிலியில் கடந்த 1960 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகின் மிகப்பெரிய பூகம்பத்தில் (ரிச்டர் அளவுகோலில் 9.5) 1600 இற்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். இதன் தாக்கத்தினால், சிலியின் 3 ஆயிரத்து 700 கி.மீ. தூர பசுபிக் கடல் பகுதி மட்டுமின்றி ஹவாய், ஜப்பான், பிலிப்பைன்ஸ் பகுதி வரை ஆழிப்பேரலையும் தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

## ஆழிப்பேரலை அபாயம்: பராக் ஒபாமா எச்சரிக்கை



நியூயோர்க்,மார்ச்1

அமெரிக்க கடலோரப் பகுதிகளை ஆழிப்பேரலை தாக்கும் அபாயம் உள்ளது. அதனால், அரசு அதிகாரிகளின் எச்சரிக்கைகளை மக்கள் கவனத்துடன் பின்பற்ற வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார்.

ஹவாய், அமெரிக்கன் சமோ, குவாம் ஆகிய பகுதிகளை (இன்று) திங்கட்கிழமை ஆழிப்பேரலை தாக்குவதற்கான வாய்ப்புண்டு என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில், ஒபாமா மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மேலும், எத்தகைய சேதத்திலிருந்தும் மக்களைக் காப்பாற்றும் வகையில் மீட்புக் குழுவினர் தயாராகவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் சக்திவாய்ந்த பூகம்பம்: ஆழிப்பேரலை எச்சரிக்கையால் பதற்றம்

டோக்கியோ,மார்ச்1

ஜப்பானில் யோரான் தீவு உள்ளிட்ட பகுதிகளில் சனிக்கிழமை சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. அதிகாலை 5.31 மணியளவில் பூமி குலுங்கியது. அப்போது பயங்கரச் சத்தம் கேட்டது. இதனால் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த மக்கள் அலறியபடி எழுந்தனர்.

பின்னர்தான் பூகம்பம் உலுக்கியமையை உணர்ந்தனர். இந்நிலையில், கடல் அலை வழக்கத்தை விட சீறி எழுந்தது. இதைத் தொடர்ந்து ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்பட்டது.

இதனால் வீடுகளிலிருந்து மக்கள் அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர். அவர்கள் பாதுகாப்புத் தேடி வீதிகளுக்கு ஓடினர். இதனால் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டன. சிறிது நேரத்தில் ஆழிப்பேரலை எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது. அதனால் பதற்றத்திலிருந்து மக்கள் விடுபட்டு அமைதியடைந்தனர்.

இப்பூகம்பத்தின் தாக்கம் 6.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. ஆனால், 7.3 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது என அமெரிக்காவின் புவியியல் மையம் அறிவித்துள்ளது.

இந்தப் பூகம்பத்தால் ஏற்பட்ட உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகியவை தொடர்பாக எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை. ஆனால், யோரான் தீவில் கடுமையான பூகம் பத்தின் தாக்கம் உணரப்பட்டது என இவான் பராகின் தெரிவித்துள்ளார்.

''ஜப்பான் வரலாற்றில் கடந்த 40 ஆண்டுகளில் இது போன்ற பூகம்ப தாக்கத்தை நான் உணர்ந்ததில்லை. சுமார் 6 வினாடிகள் பூமி குலுங்கியது'' என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜப்பானில் கடந்த 1995 ஆம் ஆண்டு 7.2 ரிச்டர் அளவில் கோப் துறைமுகத்தில் பூகம்பம் ஏற்பட்டது. அப்போது 6 ஆயிரத்து 400 பேர் பலியாயினர். தற்போது 7.3 ரிச்டர் அளவில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டுள்ளது. எனவே சேத மதிப்பு அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

### உலக அரங்கில்

## கடும் புயலால் பாதிப்பு ஐரோப்பிய நாடுகள்

ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், பிரான்ஸ், போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் கடுமையான புயல் வீசுகிறது. இதனால் வீதிகளில் மக்கள் நடமாட முடியவில்லை.

கடந்த வாரம் போர்த்துக்கலில் உள்ள மாடயிரா தீவில் வீசிய புயலுக்குப் பலர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் இங்கு தற்போதும் புயல் வீசுகிறது. மரங்கள் வேரோடு சாய்கின்றன. இதில் ஒரு சிறுவன் உயிரிழந்தான்.

ஸ்பெயினில் கனேரி தீவுகளில் புயல் தாக்கியது. அங்குள்ள லா பால்மா, குரேன் கனேரியா, டெனேரிப் ஆகிய இடங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. விமான போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. மரங்கள் முறிந்து விழுந்ததில் வீடுகள் சேதமடைந்துள்ளன. இங்கும் வீடு இடிந்ததில் ஒரு பெண் பலியாகியுள்ளார்.

பிரான்ஸிலும் இப்புயலின் தாக்கம் இருந்தது. புயல் காரணமாக மழை பெய்தது. தெற்கு பைரென்ஸ் பகுதியில் மரம் விழுந்த தில் ஒருவர் உயிரிழந்தார். மீட்பு நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

## சீனாவில் நடந்த வெடிவிபத்தில் 19 பேர் பலி; 50 பேர் படுகாயம்

சீனாவின் தென் பகுதியில் நிகழ்ந்த வெடி விபத்தில், 19 பேர் உயிரிழந்தனர்; 50 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து சின்குவா செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ''சீனாவின் தென் பகுதியில் அமைந்துள்ள குவாங்டாங் மாகாணத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது, மக்கள் தங்கள் வீட்டின் முன் பட்டாசுகளைக் கொளுத்தியும், வெடி வெடித்தும் மகிழ்ந்தனர். அப்போது அருகிலிருந்த மற்ற வெடிபொருள்களில் தீப்பற்றியதால், வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல்; மூவர் மரணம்; 26 பேர் படுகாயம்

பெஷாவர்,மார்ச்1

பாகிஸ்தானில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மூவர் பலியாயினர். 26 பேர் படுகாயமடைந்தனர். பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதி தகர்ந்துவிட்டது.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புற மாநிலத்திலுள்ள பெஷாவர் அருகே அமைந்துள்ள கரக் பகுதி பொலிஸ் நிலையத்துக்கு 3 பேர் ஒரு வானில் வந்துள்ளனர்.

அவர்களில் 2 பேர் இறங்கி விட்டனர். வெடிகுண்டுகள் ஏற்றப்பட்டு இருந்த இந்த வானை சாரதி ஓட்டிக்கொண்டு வந்து பொலிஸ் நிலையத்தில் மோதியுள்ளனர்.

இதில் 2 பொலிஸ்காரர்களும் ஒரு அப்பாவியும் பலியாயினர். 26 பேர் காயமடைந்தனர். இவர்களில் 14 பேர் பொலிஸ்காரர்கள் ஆவர்.

காயமடைந்த அனைவரும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை உயரும் என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் பொலிஸ் நிலையம் அருகேயுள்ள மசூதியும் சேதமடைந்தது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்கொலைத் தீவிரவாதிகளுடன் வந்த 2 பேரை இராணுவம் தேடிவருகிறது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

## கணவனின் சடலத்தை பாதுகாக்கும் மனைவி

ஜோகன்னஸ்பர்க்,மார்ச்1

நதியா செட்டி என்னும் பெண், இறந்த தனது கணவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையில், அவரது சடலத்தைப் புதைக்க மறுத்து கடந்த 7 மாதங்களாக வீட்டிலேயே பாதுகாத்து வருகிறார். இவர் ஓர் இந்திய வம்சாவளியாவார்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர் டாக்டர் குணசீலன் செட்டி. இவர் கடந்த ஆண்டு ஓகஸ்டில் மாரடைப்பால் மரணமடைந்தார். இவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையில், அவரது சடலத்தைப் புதைக்காமல் நதியா செட்டி அதை ஐஸ் பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வருகிறார்.

இதுவரை கணவரான குணசீலன் செட்டியின் சடலத்தைப் பாதுகாப்பதற்காக 8 இலட்சத்து 6 ஆயிரத்து 847 ரூபா செலவு செய்துள்ளார். மேலும் ஓராண்டு வரை கணவரின் சடலத்தைப் பாதுகாக்க அவர் முடிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்தை ஒழித்தால் மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுத் தொடரும்

## மன்மோகன் சிங் திட்டவட்டம்



புதுடில்லி, மார்ச் 01

பயங்கரவாதத்தை ஒழித்தால் மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சவுதி அரேபியாவுக்குப் புறப்படும் முன்பாக, சவுதிப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

டில்லியில் கடந்த 25 ஆம் திகதி வெளியுறவுச் செயலர்கள் நிலையிலான பேச்சு நடைபெற்றது.

அதுகுறித்து அதிகாரபூர்வமான தகவல் வெளியாகாத நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் இக்கருத்தைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளிடையே உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்று வழி ஏதும் கிடையாது. பேச்சு நடைபெற வேண்டும் என்றால், அந்நாடு பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும். மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகுதான் இரு நாடுகளிடையே மிகப் பெரும் இடைவெளி விழுந்தது.

இந்த நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருப்பதற்கு முக்கிய காரணமே அது இரு நாடுகளுக்குமே நன்மை விளைவிக்கும் என்பதால்தான். பயங்கரவாதம் இரு நாடுகளையுமே பாதிக்கும் என்பது தான். இந்த நிலையில் எப்போதும் மாற்றமில்லை. அண்டை நாடுகளுடன் நட்புறவையே இந்தியா விரும்புகிறது - என்றார்.

இரு நாடுகளின் வெளியுறவுத்துறை செயலர்கள் இடையிலான பேச்சில் முன்னேற்றம் எட்டப்பட்டதா என்று கேட்டதற்கு -

பேச்சை இந்தியா விரும்புகிறது என்பதை உணர்த்தவே, செயலர்கள் நிலையிலான பேச்சுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது உறுதியான நடவடிக்கையைப் பாகிஸ்தான் எடுக்காத பட்சத்தில் இந்தப் பேச்சு அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுவது மிகவும் கடினம் - என்று பிரதமர் பதிலளித்தார்.

செயலர்கள் நிலையிலான பேச்சில் பயங்கரவாதம் மட்டுமே பிரதானமாக விவாதிக்கப்பட்டது என மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் அதிகரித்துவரும் தலிபான் அச்சுறுத்தல்கள் இந்தியாவுக்கு எந்த அளவில் பாதிப்பை ஏற்படுத்தும்? குறிப்பாக ஜம்மு காஷ்மீரில் எவ்வித பாதிப்பு ஏற்படும் என்று கேட்டதற்கு -

பாகிஸ்தானைப் பாதிக்கும் விடயங்கள் அண்டை நாடான இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறினார்.

பிரிவினைவாதமும், பயங்கரவாதமும் இந்தியாவுக்கு மட்டும் அச்சுறுத்தலாக விளங்குவதில்லை. அது பாகிஸ்தானுக்கும் பெருத்த அச்சுறுத்தலாகும். இதை இரு நாடுகளும் ஒருங்கிணைந்து முறியடிக்க வேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது. பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் சக்திகளை தொடர்ந்து வீழ்த்த வேண்டும்.

காஷ்மீர் விவகாரத்தை பிரச்சினையில்லாமல் தீர்த்துக்கொள்ள இந்தியா தயாராக உள்ளது. ஆனால் அதற்கு முன்பாக பயங்கரவாதத்தை பாகிஸ்தான் கைவிட்டாக வேண்டும். ஜம்மு காஷ்மீர் மக்கள் தொடர்ந்து பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

# பெற்றோல், டீசல் விலையுயர்வை உடன் திரும்பப் பெற வேண்டும்

## மன்மோகன், சோனியாவுக்கு கருணாநிதி கடிதம்



சென்னை, மார்ச். 01

பெற்றோல், டீசல் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் உற்பத்தி வரி லீற்றருக்கு ஒரு ரூபா உயர்த்தப்படும் என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கடந்த வெள்ளிக்கிழமை பட்ஜெட் தாக்கலின்போது அறிவித்தார்.

இதனால், பெற்றோல் விலை லீற்றருக்கு 2 ரூபா 67 சதமும், டீசல் விலை லீற்றருக்கு 2 ரூபா 58 சதமும் உயர்ந்தது. இந்த விலை உயர்வு வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதலே அமுலுக்கு வந்தது.

திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், மத்திய ரயில்வே அமைச்சருமான மம்தா பானர்ஜி, பெற்றோல், டீசல் விலை உயர்வை திரும்பப் பெறுமாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், பெற்றோல், டீசல் விலை உயர்வு குறித்து பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அனைத்துத் தரப்பினரின் வளர்ச்சியையும் உள்ளடக்கிய மிகச் சிறந்த பட்ஜெட்டை தாக்கல் செய்ததற்காக மத்திய அரசுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் கொள்கைகளையும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட் (2010 - 2011) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேநேரத்தில், பெற்றோல், டீசல் விலை உயர்வைத் தொடர்ந்து ஏற்பட உள்ள பாதிப்புகள் குறித்தும் உங்களது கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த சில மாதங்களாக உணவுப் பொருள்களின் விலை உயர்வால் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவது உங்களுக்கு நன்கு தெரியும். டீசல் விலை உயர்வானது, உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

சாதாரண மக்கள், விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், டீசல் விலை உயர்வை மட்டுமாவது திரும்பப் பெற நீங்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார் முதல்வர் கருணாநிதி.

# பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து இந்தியா முழுவதும் வரும் 12 இல் போராட்டம்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு அறிவிப்பு



காசர்கோடு, மார்ச் 01

விலைவாசி உயர்வைக் கண்டித்து அனைத்து இடதுசாரிக் கட்சிகளையும் இணைத்து இந்தியாமுழுவதும்போராட்டம் நடத்தப்படும் - என்று மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த தலைவர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாடுவின் நூற்றாண்டு விழா கருத்தரங்கு, கேரள மாநிலம் காசர்கோட்டில் நடந்தது. மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் கரத் இதில் கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

மத்திய பட்ஜெட்டில், வசதி படைத்தவர்களை சந்தோஷப்படுத்துவதற்காக ரூபா 80 ஆயிரம் கோடிக்கு வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் சாமானிய மக்கள் மீது ரூபா 70 ஆயிரம் கோடிக்கு வரிகள் சுமத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக பெற்றோல், டீசல் மீது உயர்த்தப்பட்டுள்ள விலை உயர்வு, அனைத்து பொருள்களின் விலை உயர்வுக்கும் காரணமாகி விடும். மொத்தத்தில் விலைவாசி மேலும் அதிகரிக்கும்.

மத்தியில் ஆட்சி நடத்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளால், இப்போதே அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி அபரிமிதமாக உயர்ந்துள்ளது. வேலை இல்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது. விவசாயிகளுக்கான எதிரான கொள்கைகளை கடைப்பிடிப்பதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

மத்திய அரசின் இந்த மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து இந்தியா முழுவதும் அடுத்த மாதம் 12 ஆம் திகதி மார்க்சிஸ்ட் கட்சிப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்த இருக்கிறது. மேலும், அனைத்து இடது சாரி கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து பெரியளவில் போராட்டம் நடத்தவும் திட்டமிட்டு உள்ளோம்.

மாநிலங்களைப் பிரித்து, புதிதாக மாநிலங்கள் ஏற்படுத்துவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. அப்படி பிரிப்பதால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படும் - என்றார்.

## இந்தியச் செய்திகள்



ரயில்வே பட்ஜெட்டில் ஒரிசா மாநிலம் புறக்கணிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து புவனேஸ்வர் ரயில் நிலையத்தில் கலிங்கா சேனா அமைப்பினர் ரயில்களை இயக்கவிடாமல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது.......

# ஏப். 14ஆம் திகதி கப்டன் ரி.வி. ஒளிபரப்பு: புதுப்படங்களை வாங்குகிறார் விஜயகாந்த்




சென்னை, மார்ச் 01

நடிகர் விஜயகாந்தின் கப்டன் ரி.வி. ஏப்ரல் 14 ஆம் திகதி முதல் ஒளிபரப்பாகவுள்ளது. இதற்கான விழாவை பிரமாண்டமாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள் - என்று கப்டன் ரீ.வியின் செயல் தலைவர் எல்.கே.சுதீஷ் கூறியுள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சிகளிலேயே முதல் முறையாக திரைக்கு வந்து சில மாதங்களே ஆன புத்தம் புதிய திரைப் படம் என்ற அறிவிப்புடன் புதுப்படங்களை திரையிடும் தொலைக்காட்சிகளின் வரிசையில் தனது கப்டன் ரி.வியையும் இணைக்க முயற்சி மேற்கொண்டு வருகிறார் நடிகரும், அரசியல் கட்சி தலைவருமான விஜயகாந்த்.

நடிகர் விஜயகாந்தின் கப்டன் ரி.வி. வரும் ஏப்ரல் 14ஆம் திகதி முதல் ஒளிபரப்பாகவுள்ளது. இதற்கான விழாவை பிரமாண்டமாக நடத்த திட்டமிட்டிருப்பதாகக் கூறும் கப்டன் ரி.வி. செயல் தலைவர் எல்.கே.சுதீஷ், தினமும் 4 முறை நடுநிலை பிரழாத செய்திகளை வெளியிட இருக்கிறது எனவும் கூறியுள்ளார்.

மேலும் மற்ற சனல்களுக்கு இணையாக புதிய திரைப்படங்களை வாங்குவதற்காகவே பெரும் தொகையினை ஒதுக்கியிருக்கிறதாம் கப்டன் ரி.வி.

புதுப்படங்களின் சனல் உரிமையை பெற்று அந்தப் படங்களுக்கான உரிய விலை கொடுத்து வாங்குவோம் என்று சொல்லும் கப்டன் ரி.வி. தரப்பு இப்போதே புதுப்படங்களுக்கு விலைபேசும் வேலையையும் தொடங்கியிருக்கிறதாம்.

# இந்திய எல்லைக்குள் மீன்பிடித்த இலங்கை மீனவர் 6 பேர் கைது

சென்னை, மார்ச் 01

எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்த 6 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை கைது செய்துள்ளது.

கடல் எல்லை தாண்டி இந்திய எல்லைக்குள் இலங்கை மீனவர்களின் படகு ஒன்று மீன்பிடித்துக் கொண்டிருந்தது.

அதை இந்திய கடலோரக் காவல் படையினர் வழிமறித்தனர். அந்தப் படகில் இலங்கை மீனவர்கள் 6 பேர் இருந்தனர். அவர்களை கடலோரக் காவல்படையினர் பிடித்து சென்னைக்குக் கொண்டு வந்தனர். இலங்கை மீனவர்களின் படகையும் இழுத்து வந்தனர்.

சென்னைக்கு கொண்டு வரப்பட்ட மீனவர்கள் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். உரிய விசாரணை முடிந்ததும் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவர். கடந்த 6 மாதங்களில் மட்டும் 74 இலங்கைப் படகுகளில் 384 பேர் இந்திய கடல் எல்லைக்கு வந்துள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரை 24 படகுகளில் 124 இலங்கை மீனவர்கள் இங்கு வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மினி இன்போரெல்’ கண்காட்சியை பார்த்தவர்களின் கருத்துக்கள் சில

தகவல் தொழில்நுட்பத் தொடர்பாடல் யுகத்துக்குள் குடாநாட்டு இளையோரையும் நுழைய வைக்கும் திறவுகோலாக யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில்


கண்காட்சியை ஆர்வமுடன் பார்வையிடும் யுவதிகள்...

வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெற்ற ‘மினி இன்போரெல்’ கண்காட்சி அமைந்திருக்கிறது. இதன்போது பல நவீன விடயங்களை விலாவாரியாகவும் செய்முறை ரீதியாகவும் அறிந்து கொள்ள முடிந்ததோடு பரிசுகள் பலவற்றை அள்ளிக்கொள்ளவும் பார்வையாளர்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. இந்தக் கண்காட்சியில் பங்கு பற்றி பயன்பெற்ற பல்லாயிரக் கணக்கான இளையோரில் ஒருசிலரின் அனுபவங்கள் இங்கே பகிரப்படுகின்றன.

*சந்திரசேகரன் (வயது - 23)*
*(சிற்பக்கலைஞர், திருச்சி, இந்தியா)*



யுத்தம் முடிந்த பின்னர் யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இந்தியா வில் பலருக்குண்டு. ஆயினும் அதற்கான பொருளாதார வசதிகள் எல்லோரிடமும் இல்லாமையால் ஒரு சிலரே இங்கே வரமுடிகின்றது. அவ்வாறு யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மிகுதியால் வந்தவர்களில் ஒரு வனே நான். சுற்றுலாவாக இங்கு நான் வந்த இடத்தில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இந்தக் கண் காட்சி நடைபெறுவதாக பத்திரிகைகள் மூலம் அறிந்து பார்வையிட வந்தேன். வந்த இடத்தில் உண்மையிலேயே நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். இத்தனை



தொலைத்தொடர்பு வலையமைப்பை பார்வையிடுவோர்..

நாள்களும் யுத்தத்தின் காரணமாகப் பல்வேறு வகைகளிலும் இழப்புகளைச் சந்தித்த ஓர் இடத்தில் இவ்வளவு பிரமாண்டமான கண்காட்சியா? என ஒரு கணம் அதிசயித்துப் போனேன். இங்கு காட்சிக்கு வைக் கப்பட்ட பல நவீன தொடர்பாடல் சாதனங்களும் அவற்றின் பயன்பாடுகளும் எமது நாட்டில் இத்தொழில் நுட்பங்கள் 10 வருடங்களுக்கு முன்பே அறிமுகமாகிவிட்டன. ஆனால் இங்கு இத்தொழில்நுட்பங்களை அறிவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆயினும் இந்தக் கண்காட்சியில் அத்தகைய நவீன சாதனங்களின் எல்லாப் பக்கங்களையும் அக்குவேறு ஆணி வேறாக விளக்கிக் கூறினார்கள். இந்தியத் தமிழுக்கும் யாழ்ப்பாணத்துத் தமிழுக்கும் இடையேயான உச்சரிப்புத் தொனிவேறாக இருந்த போதும் கூட கண்காட்சியில் அளிக்கப்பட்ட விளக்கம் எம்மைக் கவரவே செய்தது. ஒரே இடத்தில் வெவ்வேறு வகை யான தொடர்பாடல் சாதனங்களைப் பார்வையிட முடிவதால் யாழ்ப்பாணத்து இளைஞர்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும் என்றே நம்புகின்றேன்.

*பா.பாலமுரளி (வயது - 35)*
*(ஆசிரியர், கோண்டாவில் ராமகிருஷ்ண மகா வித்தியாலயம்)*



மிகவும் பயனுள்ள கண்காட்சி. அதனை இங்கு ஆர்வத்தோடு திரண்டு வந்து பார்வையிட்ட பெருந் தொகையான மாணவர்கள் மூலம் அறிய முடிகிறது. புதிய தொடர்பாடல் சாதனங்களும், யுக்திகளும், முறைமைகளும் சீரான முறையில் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றுக்குரிய விளக்கங்களும் வழங்கப்பட்டன. எத்தனை முறை சந்தேகங்களைக் கேட்டாலும் எவ்வித முகச்சுழிப்பு மின்றி வளவாளர்கள் தந்த விளக்கங்கள் பார்வையாளர்களைக் கவரச் செய்தன. ஆனாலும் என்னைப் பொறுத்தவரை இங்கு காட்சிப்படுத்தப்பட்ட தொடர்பாடல் சாதனங்களை விடவும் காட்சிப்படுத்தப்படாத


பார்வையாளர்களுக்கு காட்சிப் பொருள்களை விளக்கும் ஏற்பாட்டாளர்...

நவீன தொடர்பாடல் சாதனங்கள், முறைமைகள் என் பன அதிகம் என்று நினைக்கிறேன். இன்று அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் உலகத்தில் நாம் இருக்கிறோம். உலகிலேயே துரித கதியில் - நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக - வளர்ந்துவரும் பல்வேறு துறைகளிலும் முன்னிலையில் நிற்பது தகவல் தொடர்பாடல் துறைதான். இத் துறை எப்போதுமே தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்கிறது. புது விடயங்களை உள்வாங்கிக் கொள் கிறது. அடுத்த கட்டத்தை நோக்கி வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் ஏற்கனவே யாழ்ப்


கண்காட்சியைப் பார்வையிடக் காத்திருக்கும் மாணவிகள்...

பாணத்தில் அறிமுகமாகிய பொருள்களும் நுட்பங்களுமே அதிகளவில் இங்குள்ள காட்சிக் கூடங்களில் அதிகளவு நிறைந்துள்ளன. புதிதாக ஒரு சில விடயங்களே


கணணி பற்றி விளக்கத்தைப் பெறும் பார்வையாளர்கள்...

இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. கணனி தொடர்பாடல் என்பவற்றில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கு இக் கண்காட்சி ஒரு வரப்பிரசாதமாக இருந்தா லும் கூட இத் துறையின் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு ஒரு வகையில் ஏமாற்றத்தையும் இக்கண்காட்சி தந்தே இருக்கிறது. இனிவரும் காலங்களில் இத்தகைய குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டும் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டும் எல்லோருக்கும் ஏற்றவகையில் தொழில்நுட்பக் கண்காட்சிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற வேண்டும் என்று கருதுகிறேன்.

*சிவாகரன் ஜனனி (வயது - 15)*
*(யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை)*



புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் எமக்கு மிகவும் உபயோகமாக இருந்தன. முக்கியமாக கணனி சம்பந்தமான அறிவு எமக்கு மேலதிகமாக தேவை என்று கருதும் நேரத்தில் நாம் கணனி பற்றிய அறிவுத் தேடலில் ஈடுபட்டிருந்த வேளையில் எமக்கு இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டு இருப்பது வரப்பிரசாதமே. முக்கியமாக இணையம் சம்பந்தமாகவும் கைத்தொலைபேசிகள் கணனியின் புதிய வகைகள் என்பன எமக்கு எமது மொழியிலேயே மிகவும் தெளிவாகவும் அது தொடர்பான அறிவுடையோராலும் எமக்கு


கற்கைநெறிகள் பற்றிய விளக்கமளிப்பின் போது...

கற்பிக்கப்பட்டமையும் மேலும் அது எமக்கு அருகில் குறிப்பாக எங்களுடைய பாடசாலையிலேயே எங்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகவே நான் கருதுகிறேன்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசம் தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சி நிலையை அடைந்தபோதும் இன்றுதான் எமக்கு இத்தகைய தொழில்நுட்பங்களும் எமது இடத்தில் ஏற்கனவே உள்ளவற் றைவிட மேலதிக தொழில்நுட்பங்களும் உள்ளன என்று நாம் அறியக்கூடியதாக இக்கண்காட்சி அமைந்துள்ளது.

இதனை மாணவர்கள் மாத்திரமல்ல ஏனையோரும் பார்த்தல் அவசியம். எனினும் இது தொடர்பான விரிவுரைகள் மாணவர்களாகிய எமக்கு மேலும் தேவையென்றே கருதுகின்றேன்.

---

# புலிகளுக்கு எதிரான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

‘டெய்லி மிரர்’ இணையத்தளத்திற்கு வழங்கியுள்ள பேட்டியில் இதனைக் குறிப்பிட்டுள்ள கோத்தபாய, ‘கே.பி.’ எனப்படும் குமரன் பத்மநாதனை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவது குறித்து இன்னமும் சிந்திக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எரித்திரியாவுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் சில ஊடகங்களில் வெளியான செய்திகள் காரணமாகத் தோல்வி கண்டுள்ளன. இந்த விடயம் பத்திரிகைகளில் வெளிவந்தது. இதனால் தற்போது எரித்திரியா அனைத்து தொடர்புகளையும் துண்டித்துள்ளது.

**எரித்திரியாவில் தூதரகம் அமைக்கும் முயற்சி தோல்வி**

அவர்கள் எங்களுடன் தற்போது பேச்சுகளில் ஈடுபடுவதும் இல்லை. எங்களுடனான தொடர்புகளை அந்த நாடு முற்றாகத் துண்டித்துள்ளது.

எரித்திரியாவில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக அந்த நாட்டில் தூதரகமொன்றை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளன. அந்த நாடு அதற்கு அனுமதியளிக்க மறுத்துள்ளது.

பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளதால் விடுதலைப் புலிகள் குறித்த தகவல்களைச் சேகரிக்கும் முயற்சிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எரித்திரியாவைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் எமக்குக் கசப்பான அனுபவம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் சொத்துகள் சில அங்குள்ளமை எமக்குத் தெரியும்.

இது பத்திரிகைகளில் வெளிவந்தமையால் தற்போது அந்த நாடு எம்முடன் ஒத்துழைக்க மறுத்துள்ளது.

இதன் காரணமாக எரித்திரியாவுடன் மீண்டும் ஆரம்பத்திலிருந்து உறவுகளைக் கட்டியெழுப்ப முயல்கிறோம்.

விடுதலைப் புலிகளின் நலன்களுக்கு உதவக்கூடிய பல நடவடிக்கைகள் தமது நாட்டு எல்லைக்குள் இடம்பெறுகின்றமை பல நாடுகளுக்குத் தெரியாது.

விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் பலவகையான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். அந்த நாடுகளைப் பொறுத்தவரை இவை சட்டரீதியான வர்த்தக நடவடிக்கைகளாகும்.

நாங்கள் இது குறித்த தகவல்களை வழங்கியிருக்காவிட்டால் இது விடுதலைப் புலிகளின் வர்த்தக நடவடிக்கைகள் என்பது அந்த நாடுகளுக்குத் தெரியவந்திராது.

**அவமானப்படுத்தும் செயலாக**

இலங்கை அரசு இவ்வாறான சக்திகள் உலக நாடுகளில் செயற்படுவதைச் சுட்டிக்காட்டினால் மேற்குலக நாடுகள் தம்மை அவமானப்படுத்தும் செயலாக அதனைக் கருதுகின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்படும் நாடுகளின் பெயர்களை வெளியிடுவதால் எமக்கு எந்தவித நன்மையும் கிடைப்பதில்லை.

குறிப்பிட்ட நாடுகள் தமது பெயர்களை நாங்கள் பகிரங்கப்படுத்துவதை விரும்புவதில்லை. விடுதலைப் புலிகள் தமது எல்லைகளுக்குள் செயற்படுகின்றனர் என்ற விவரம் வெளியாவதை இந்த நாடுகள் வரவேற்பதில்லை.

எரித்திரியாவைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் எமக்கு மிகக் கசப்பான அனுபவம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளும் நடவடிக்கைக்கு மேற் குலகம் எப்போதும் போதிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை.

ஏனைய நாடுகள் இதற்கு சுலபமாக ஒத்துழைப்பை வழங்கும் அதேவேளை, மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரை இது மிகவும் கடினமாகவுள்ளது.

இந்த நாடுகளில் பெருமளவு புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்ளமையே இதற்குக் காரணம். இந்த நாடுகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் எமக்கு எவ்வித ஒத்துழைப்பையும் வழங்குவதில்லை. அவர்களுடைய ஒத்துழைப்பு இன்றி இவர்களைப் பிடிக்க முடியாது.

**விடுதலைப் புலிகளை சட்டபூர்வ அமைப்பாக மாற்ற முயற்சி**

சில நாடுகளை ஏமாற்றி அவர்களது ஆதரவைப் பெறுவதற்காக விடுதலைப் புலிகள் தங்களைச் சட்டபூர்வமான அமைப்பாக மாற்ற முயல்கின்றனர்.

இராணுவ ரீதியில் தங்களால் செய்ய முடியாது போனதை இந்த அரசுகளின் துணையுடன் வேறு வழிகளில் செய்வதற்கு அவர்கள் முயலக்கூடும்.

இதற்காகவே நாடு கடந்த தமிழீழ அரசை ஏற்படுத்த அவர்கள் முயல்கின்றனர்.

எனினும், புலம்பெயர்ந்த தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் தேசிய நல்லிணக்கத்தையே விரும்புகின்றனர்.

மிகப் பெரும் எண்ணிக்கையான புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்ள போதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் மிதவாதிகள். ஈழக் கோரிக்கையை அவர்கள் ஆதரிப்பதில்லை. அநேகமானவர்கள் இலங்கைக்குத் திரும்பிவந்து அமைதியான வாழ்க்கை வாழவே விரும்புகின்றனர்.

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினரான கே.பியை நீதிமன்றத்தில் நிறுத்தும் எண்ணம் எதுவுமில்லை.

எனினும், அவர் வழங்கும் தகவல்கள் அரசின் புலனாய்வுத் துறையினருக்கு மிகப் பெறுமதியானவையாகக் காணப்படுகின்றன. அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்து வது குறித்து இன்னமும் தீர்மானிக்க வில்லை.

விடுதலைப் புலிகளின் சர்வதேச நடவடிக்கைக்குப் பொறுப்பாக செயற்பட்டவர் என்ற வகையில் அவரிடமிருந்து இன்னமும் தகவல்களைப் பெற முயலகிறோம். - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று முடிவடைந்த கச்சதீவு உற்சவத்தில் அந்தோனியார் திருச்சொரூபம் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதையும் கொடியேற்றத்தில் கலந்துகொண்டவர்களையும் தமிழகத்தில் இருந்துவந்த கன்னியாஸ்திரி கப்பலில் இருந்து இறக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

### இலங்கை – இந்திய பக்தர்கள் புடைசூழ

# கச்சதீவு அந்தோனியார் உற்சவம் பக்தி பூர்வமாக நிறைவு பெற்றது

கச்சதீவிலிருந்து லக்ஷ்மன்

நெடுந்தீவு, மார்ச் 01

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இலங்கை-இந்திய பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக நேற்றுக்காலை 9.30மணிக்கு பூர்த்தியடைந்தது.

நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த உற்சவத்தில் நேற்றுக்காலை 6.30 மணிக்கு விழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெற்றன. பின்னர் காலை 9.30 மணிக்கு நடைபெற்ற விசேட திருப்பலியு டன் உற்சவம் பூர்த்தியாகியது.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் அமல்ராஜ் தலைமையில் யாழ். பங்கைச் சேர்ந்த குருமார்கள் மூவரும், இராமேஸ்வரம் வேர்கோட்டு புனித சூசையப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு மைக்கேல்ராஜ் தலைமையில் 12குருமார்களும் இணைந்து உற்சவத்தை நடத்தினர்.

நெடுந்தீவு, குருநகர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்களும் இந்தியாவின் நாம்பன், திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து சுமார் 2,910 பக்தர்களும் உற்சவத்தில் பங்கேற்றனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து 72 விசைப் படகுகளிலும் 40 நாட்டுப் படகுகளிலும் பக்தர்கள் வந்திருந்தனர்.

இந்த உற்சவத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கநாதன் ஆகியோர் உட்பட அரச உயர் அதிகாரிகளும், வட பிராந்திய கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வீரசேகர, நெடுந்தீவு கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் வீரரத்தின மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

தமிழகத்தில் இருந்து பிரபல பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த 20செய்தியாளர்களும் உற்சவத்திற்கு வந்திருந்தனர்.

தமிழகத்தில் இருந்து வந்தவர்களுக்கான பாதுகாப்பை இந்தியக் கடற்படையினர் தமது எல்லைவரையும் வழங்கினர். அங்கிருந்து ஆலயம் வரை இலங்கைக் கடற்படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

(1-201-111)

# அரச பயங்கரவாதம் தொடரும் நிலையில் புலிகளின் பயங்கரவாதத்தைப் பேசுவது அர்த்தமற்றது!

### உலகத் தமிழர் பேரவைத் தலைவலர் இமானுவல் அடிகள் சொல்கிறார்

இலங்கையின் அரச பயங்கரவாதம் தொடர்கின்ற நிலையில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் குறித்து பேசுவது அர்த்தமற்றது - என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இமானுவல் அடிகளார் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பின்னரான காலகட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பது குறித்து, ஐ.சி.ஜி. எனப்படும் சர்வதேச நெருக்கடிகள் தொடர் பான ஆய்வு மையம் கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது அறிக்கையில் சில யோசனைகளை பரிந்துரை செய் திருந்தது.

அதில் முக்கியமாக, வெளிநாடு வாழ் இலங் கைத் தமிழர்கள் இனி மேலாவது விடுதலைப் புலிகளின் வழிமுறைகளை நிராகரிக்க வேண்டும் என்று ஐ.சி.ஜி. அமைப்பு கூறியிருக்கிறது.

இந்த அறிக்கை குறித்தும், அதன் பரிந்துரைகள் குறித்தும் உலக தமிழர் பேரவை யின் கருத்து என்ன என்பது குறித்தே அதன் தலைவர் அருட்தந்தை இமானுவேல் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இலங்கை அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள் கவலையளிக்கிறது எனவும், எந்தக் கட்சியினர் தமது குறிக் கோளில் உறுதிப்பாட்டுடன் உள்ளார்களோ அவர்களைத் தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ-சி)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளின் பங்களிப்புடன் அடிக்கல் நடப்பட்டது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் மாங்குளம் நகரத்தில் புதிய பொலிஸ் கட்டடத் தொகுதியும், கிளிநொச்சி நகரத்தில் கிளி நொச்சி பொலிஸ் தலைமை அலுவலகமும், மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநகரியில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்றும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-சி)

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு:-

எமது கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 22 மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றது. மிகவும் திறமைமிக்க - மக்கள் செல்வாக்குள்ள - சேவை மனப்பான்மையுடைய - வேட்பாளர்களையே நாம் எமது கட்சியின் சார்பில் போட்டியிட நிறுத்தியுள்ளோம்.

22 மாவட்டங்களிலும் சிறுபான்மை இன வேட்பாளர்கள் 43 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களுள் தமிழ் வேட்பாளர்கள் 22 பேரும், முஸ்லிம் வேட்பாளர்கள் 21 பேரும் அடங்குகின்றனர்.

தேசிய பட்டியலில் மிக முக்கியமான கல்விமான்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். சிறுபான்மை இனத்தவர்கள் அதில் உள்ளடக்கப்படவில்லை. அது ஒரு பெரிய விடயமல்ல. போட்டியிடுவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பதே முக்கிய விடயம்.

நாம் பூரணமானதொரு வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்துள்ளோம். அதே போல் பூரணமானதொரு தேசிய பட்டியலையும் தயாரித்துள்ளோம். இதுவே எமது கட்சிக்குக் கிடைத்த முதல் வெற்றி.

மோசடிகளுக்கும், விலைவாசி அதிகரிப்புக்கும் எதிராக நாம் இத்தேர்தலில் குதிக்கின்றோம்.

மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாம் தொடர்ந்தும் மக்களுடனேயே இருப்போம். அரசு கேட்கும் ஆணையை மக்கள் வழங்கக்கூடாது. அது மேலும் மேலும் அரசின் சர்வாதிகாரத்திற்கே பயன்படுத்தப்படும். - என்றார்.

(அ-சி)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரத்தில் ஈடுபட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா அன்னப்பறவை சின்னத்தில் போட்டியிட்டார் என்பது தெரிந்ததே (அ-சி)

## எச்சரிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளதுடன், வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார்.

குறித்த வாகனத்தில் பயணித்தவர்கள் மது போதையில் இருந்தனர் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-சி)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது யோசனைகளில் வழங்கியுள்ளது.

உள்ளூர், சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் பல இலங்கையின் இறைமையை மீறும் விதத்தில் செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எனினும், தற்போதைய சட்டங்கள் காரணமாக அவற்றிற்கெதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை காணப்படுகின்றது - எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல அரசசார்பற்ற அமைப்புகளின் நிதி விடயம் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவித்துள்ள அரச அதிகாரிகள் சில அரச சார்பற்ற அமைப்புகளின் மாதாந்தச் செலவினங்கள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன எனவும் கூறினார்.

## லஸந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரை லஸந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணைக்காக நாடு திரும்புமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

லஸந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாகக் கிடைத்துள்ள தடயம் சம்பந்தமாகக் குறிப்பிட்ட அதிகாரி விசாரணைக்குட்படுத்தப் படவுள்ளார்.

விசாரணைகள் முடியும்வரை இலங்கையிலேயே தங்கியிருக்க வேண்டும் என இந்த அதிகாரி பணிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த விடயத்தில் தொடர்புபட்டிருக்கலாம் எனக் கருதப்படும் இராணுவச் சிப்பாய்க் குழுவொன்று முகாமொன் றினுள் தடுத்துவைக்கப்பட்டுள்ளது எனவும் தகவல் கிடைத்துள்ளது.

லஸந்தவின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஐந்து கையடக்கத் தொலைபேசிகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இனம்கண்டுள்ளனர் எனவும் மலையகத்தைச் சேர்ந்த நபர் ஒருவரின் பெயரில் இவை பெறப்பட் டுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)

## பிள்ளையான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய அரச சார்பு உறுப்பினர்களின் பாதுகாப்பில் மாற்றங்கள் செய்யப்படவில்லை'' - எனச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி வட்டாரங்கள் இது பழிவாங்கும் நட வடிக்கை எனவும் விவரித்துள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக விளக்கம் கோரி கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பையே வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள அரசு, முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் இராணுவப் பாதுகாப்பு விலக்கப்பட்டமை பழிவாங்கும் செயல் அல்ல எனத் தெரிவித்துள்ளதுடன் கிழக்கு மாகாண முதலமைச்சரின் பாதுகாப்பிற்கெனப் பொலிஸாரை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

(அ-சி)

சுடர் ஒளி
THE SUDAROLI
பெப் 26 - மார்ச் 06
★ பகற்கனவு நிறைவேறுமா?
பொதுத்தேர்தல் பற்றிய பார்வை
★ மஹிந்த ராஜபக்ஷவுக்கான வெற்றி வாய்ப்புக்கள்
★ பிரிட்டனின் அதிரடி!
★ பார்க்க வேண்டியதும் அறிய வேண்டியதும்
★ ஜெயலலிதா புதிய ஆவேசம்!
எம்.எல்.ஏக்களை வளைத்து தி.மு.க. பதிலடி
★ குறிவைக்கப்படும் தனுனா திலகரத்ன...!
★ மன அழுத்தம், அடிமைக்குணம் ஏற்படுத்தும் இணையத்தளம்
★ முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும் தொடர்.....
மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்..
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

வந்துவிட்டது வெற்றித்தேர்வு
கடந்த ஆண்டுகளில் சாதனை படைத்துவரும்
உதவிக்கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம்.
சாதனை ஆசிரியர் தவயோகராசா.
விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன்.
ஆகியோரின் உருவாக்கத்தில்..
2010-தரம்:5 வெற்றித்தேர்வு 1,2,3
அனைத்து புத்தகசாலைகளிலும் தொடராக பெறுங்கள்
2010-தரம்:4 வெற்றித்தேர்வு சில நாட்களில்
தொடர்புகளுக்கு:0212229016/ 0775388471

கட்டடம் வாடகைக்கு விடப்படும்
இலக்கம் 527, நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன கட்டடத் தொகு தியில் முதலாம் மாடி வாடகைக்குக் கொடுக்கப்படும். ஆர்வம் உள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு 0212228025 என்ற தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.
(95187)
பணிப்பாளர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org